கல்கி



KALKI 25-2-1973 45 காசு






நோய்களினால் பலஹீனமடையும் போது, உங்களுக்கு அதிக சக்தி தேவைப்படுகிறது. அதற்கு 'ஹார்லிக்ஸ்' தேவைப்படுகிறது. அது எளிதில் செரிக்கக் கூடியது. இழந்த சக்தியை மீண்டும் பெற வழி செய்து விரைவில் குணமடைய உதவுகிறது.

அதனால்தான் சுமார் 100 வருடங்களாக நோயுற்றவர்களுக்கும், அதிலிருந்து குணமடைந்து வருபவர்களுக்கும் டாக்டர்கள் 'ஹார்லிக்ஸ்' சிபாரிசு செய்து வருகின்றனர்.

முழுமையான ஊட்டம்பெற-
'ஹார்லிக்ஸ்'



'ஹார்லிக்ஸ்'
பதிவு பெற்ற ட்ரேட்மார்க்

HL-5601A


கல்கி பொருளடக்கம்


பரிதாபி, மாசி 14 ★ பிப்ரவரி 25, 1973

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சிறுகதைச் சிறப்பு மலர்




தமிழகத்தின் ஆராய்ச்சி மணி
அது வேணும்; நானே ஆராய்ச்சி மணி கட்டி யிருக்கேன் பாரு!
டில்லி ஆராய்ச்சி மணி
தமிழகத்தில் ஊழல்
ஊழல்
லஞ்சம்
லஞ்சம்
தமிழகத்தில் லஞ்சம்
அது சரி, அதிலே நாக்கையே காணோமே!
எம்.ஜி.ஆர்
ராம மூர்த்தி


இதை எடுத்தா என்ன ஆகும், பார்ப்போமா?
M
Y
ஜெர்மன் (மார்க்)
ஜப்பான் (யென்)
?
?

கல்கி

மலர் 32

இதழ் 30

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

ஐயத்தை அதிகரிக்கும் அவசர மசோதா

வெகு சுருசுருப்புடன் தமிழக அரசாங்கம் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறது. பொது வாழ்வில் முக்கியத்துவம் பெற்றவர்களின் மீது எழுப்பப்படும் ஊழல் புகார்களை விசாரிப்பதற்காக ஒரு சுதந்திர அமைப்பினை மாநில மட்டத்திலேயே நிறுவ மசோதா வழி வகுக்கிறது.

மசோதாவின் வாசகப்படி, ஆட்சி பீடத்தின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு ஆளாகாமல், அரசியல் கலப்புகள் இல்லாமல் விசாரணை நடத்தப் பெறும் என்று ஆகிறது. எனவே வஞ்சனை எதிர்பாராத மன இயல்பு படைத்த அறிஞர்கள் சிலர் இந்த மசோதாவை வரவேற்கவும் கூடும்.


ஆயினும் இன்று தமிழகத்தின் கோடானு கோடி மக்கள் இம்மசோதாவை ‘வரவேற்கிற நிலையில் இல்லை.

விசாரணை அதிகாரிகளை நியமிக்கிற நீதித் துறைத் தலைவர் மீதோ, அல்லது நியமனமாகிற பிரமுகர்கள் மீதோ நாம் நன்னம்பிக்கை வைக்காமல் இல்லை. இருந்தபோதிலும்.... ஒரு கேள்விக்குறி எழத்தான் செய்யும். **இன்றைய** தமிழக அரசாங்கம், **இப்போதைய** சூழலில் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது தான் காரணம். ஒவ்வொரு செயலுக்கும் அது மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தைப் பொறுத்து ஓர் உட்பொருள் தோன்றுவது இயல்பே அல்லவா?

ஒரு மாநில அரசின் முக்கியஸ்தர்கள் மீது அம்மாநில மட்டத்திலேயே விசாரணை நடப்பதைவிட, அகில இந்திய ரீதியில் நடத்தப் பெறும் விசாரணையையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தற்போதுகூட சில வழக்குகள் நம் மாநிலத்துக்கு அப்பாற்பட்ட வேறு உயர்நீதி மன்றங்களில் நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் தோன்றிக்கொண்டே இருப்பதைக் கவனிக்க வேண்டும். மாநில ஊழலை விசாரிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லிவிட்டு, மாநில மட்டத்திலேயே சுதந்திர விசாரணை என்று பெயரளவில் காட்டி, கண்துடைப்பாக விசாரணையை முடிக்கவே நினைக்கிறார்களோ என்பது மக்களின் ஐயம். எங்கோ ஓரிடத்தில், எவரோ ஒரு சிலர் ஐயப்படுவார்கள் என்றால் ஒதுக்கி விடலாம். மக்களில் பெரும்பான்மையானவர் சந்தேகிக்கத்தக்க விதத்தில் நடந்து கொள்வது அரசுக்குக் கௌரவமாகாது.

மசோதாவின் முக்கிய இலட்சியத்தை உள் நோக்கம் கற்பிக்காமல் ஆதரிப்பவர்களும் கூட ஆட்சேபிக்கிற ஒரு விஷயம் உண்டு. தவறாகப் புகார் கொடுப்பவர்களுக்கு மூன்று வருஷம் வரையில் கடுங்காவல் அளிக்க வேண்டும் என மசோதா கூறுவது, புகார் எழுப்ப முடியாமல் வாயடைப்பது போலவே ஆகிறது. கெட்ட எண்ணத்தோடு ஊழல்களைச் சிருஷ்டி செய்து சுமத்துகிறவருக்குத் தண்டனை தர வேண்டும் என்பது வாஸ்தவமே. ஆயினும் அதே சமயத்தில் எல்லாப் புகார்களுக்கும் அடியிலிருந்து நுனிவரை சாட்சியம் காட்ட வேண்டும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. சாட்சி வைத்துக் கொண்டு எவரும் குற்றம் செய்ய மாட்டார்கள். ஆரம்ப கட்டத்தில் விசாரணை அதிகாரிக்கும் புகார் கொடுப்பவருக்குமிடையே விஷயம் அந்தரங்கமாகவே இருக்கப் போகிறது. பூர்வாங்கப் பரிசீலனையிலேயே புகாருக்கு ஆதாரமில்லை என்று அதிகாரி கருதும்போது அதைத் தள்ளி விடலாமே! அவ்வாறிருக்கக் கடுந்தண்டனையைக் காட்டி அச்சுறுத்துவானேன்? ஆட்சி பீடப் பிரமுகர்களைக் குறித்துப் புகார் செய்யவோ, புகாருக்குச் சாதகமாகச் சாட்சி சொல்லவோ பொதுவாகவே தயக்கம்தான் இருக்கும். அந்தத் தயக்கத்தைக் கலவரமாகவே ஆக்குவது முறையல்ல. இன்னொன்று: இவ்விசாரணையின் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யவிடாமல் செய்திருப்பது சற்றும் யுக்தமில்லை. ஊழல் நடந்து ஓராண்டுக்குமேல் ஆகிவிட்டால் புகார் ‘காலாவதி’யாகி விடும் என்பது மிகமிக முறையீனம்.

தமிழக அரசாங்கம் தன்னை ஊழலற்றதாகக் காட்டிக் கொள்வதற்காகச் செய்கிற காரியங்கள் அதன் தூய்மை குறித்து மக்கள் மேலும் ஐயுறுமாறு செய்கின்றன. பரிதாபம்!




ஜயேந்திர ஸ்வாமி! ஜயவிஜயீபவ!



"தென்றல் ஓரிடத்தில் நில்லாது" எங்கும் பரவி இனிமை தருவது போல் மகான்கள் லோக சஞ்சாரம் செய்து மக்களுக்கு இத மூட்டுவர் என்பது ஸ்ரீ சங்கரபகவத்பாதர்களின் அருள்வாக்கு. இம்மரபுப்படி ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவர்கள் புனிதமான காசி யாத்திரை மேற்கொண்டிருக்கிறார்கள். பாதசாரியாகவே செல்கிறார்கள்.

இம்மாதம் 8-ந் தேதியன்று காஞ்சிபுரத்தில் ஸ்ரீ பெரியவர்களை வணங்கி யாத்திரை தொடங்கினார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். திருத்தணி, திருப்பதி, கர்நூல் மார்க்கமாக ஹைதராபாத் செல்கிறார்கள். மகாசிவராத்திரி பூஜை கர்நூலுக்கருகே உள்ள ஆலம்பூர் என்ற சக்தி பீடத்தில் நடக்கவிருக்கிறது. ஏப்ரில் தொடக்கத்தில் நிகழும் வசந்த நவராத்திரி நாக்பூரில் கொண்டாடப் பெறும். பிறகு போபால் வழியாகத் தில்லி சென்றடைவார்கள். ஜூன் மாதம் 6ந் தேதியன்று தில்லியில் உத்தர ஸ்வாமி மலை கும்பாபிஷேகம் புதுப் பெரியவர்களின் திருமுன்னர் நடைபெறும். ஹரித்துவாரம், ஹ்ருஷிகேசம் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று காசி அடைவார்கள்.

தேசமெங்கிலும் பலவிதக் குழப்பங்கள் உள்ள போதிலும், காஞ்சி மாமுனிவரின் பூரண ஆசியோடு இந்த நீண்ட நெடிய க்ஷேத்திராடனம் மேற்கொண்டுள்ள புதுப் பெரியவர்கள் அதனைச் சிறப்புற நிறைவேற்றி ஆஸ்திகத்துக்கு மகத்தான வெற்றியை ஈட்டித் திரும்புவார் என்பதில் ஐயமில்லை.







தமிழ் நாட்டிலே....


திரன்

மின்வெட்டினால் விலை உயர்வுகள்

தற்போது நம் தமிழ் நாட்டில் பல வகைகளில் ஏற்கனவே உயர்ந்துள்ள விலைவாசிகளைத் தவிர மின்சாரப் பற்றாக்குறையினாலும் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. சென்ற மாதம் வரை வழக்கமாக இருந்து வந்த அரிக்கேன் லாந்தர்கள், சிம்னி விளக்குகள், பெட்ரோமாக்ஸ் லைட்டுகளின் விலைகள் திடீரென்று மேலே ஏறிவிட்டன. நடுத்தரவர்க்கத்தினரும், ஏழைகளும் 'ஒளி'க்கு அதிக விலைகொடுக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். ரூ. 6.75க்கு விற்ற அரிக்கேன் லாந்தர் ரூ. 15க்கும், ரூ. 5.75க்கு விற்ற சிறிய அரிக்கேன் லாந்தர் ரூ. 12க்கும், 75 காசுகளுக்கு விற்ற சிம்னி விளக்கு ரூ. 1.50க்கும் விற்கத் தொடங்கியிருக்கின்றன. மின்சார வெட்டு 25 சதவிகிதமாக இருந்தபோது 96 ரூபாய்க்குக் கிடைத்த பெட்ரோமாக்ஸ் விளக்கு இப்போது திடீரென்று 160 ரூபாயாகவும் 200 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது. அரிசி விலை அதிகம், கறிகாய் விலை அதிகம், எண்ணெய்களின் விலையும் அதிகம் என்று எல்லா விலைவாசிகளாலும் சிரமப்படும் மக்கள் 'ஒளி'யின் விலை உயர்வாலும் அவதியுறுகிறார்கள். மாணவர்களின் பரீட்சை மாதங்களாகிய மார்ச், ஏப்ரலில் படிக்க ஒளி இன்றி அவர்கள் மிகவும் சிரமப்படப் போகிறார்கள் என்பதை நினைக்கவே வருத்தமாயிருக்கிறது.

தமிழகம் ஒதுங்கி நிற்க வேண்டும்

ஆந்திராவில் நடைபெறும் கிளர்ச்சிகளை நேரில் கண்டறியச் சென்றிருந்த தி. மு. க. எம். பி., கட்சியால் அனுப்பப்பட்டுச் செல்லவில்லை என்று கட்சி மேலிடமே கூறியிருந்தாலும் பலருக்கு அதில் சந்தேகம் இருக்கிறது. அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் குண்டுரிலோ எங்கோ ஒரு கூட்டத்தில் பேசியதாகக் கூறப்படுவது உண்மையாயின் அதற்காகத் தேச ஒற்றுமையில் நம்பிக்கையுள்ளவர்கள் வருந்தவே செய்வார்கள். அந்த



ஈடற்ற கலைஞரை இழந்தோம்

தமிழகத்தின் கலைத் துறையில் பூர்த்தி செய்யவொண்ணாத ஒரு வெற்றிடம் தட்டி விட்டது. 'நாடகம்' என்று கூறிய மாத்திரத்திலேயே நம் கருத்தில் வந்து நின்ற திரு டி. க. சண்முகம் அவர்கள் கலைவாணியின் இணையடி அடைந்து விட்டார்கள்.

ஆறாவது வயதிலேயே அரங்கேறி அதன்பின் ஒரு பொற்கால கட்டத்துக்கும் அதிகமாக ஜயக்கொடியைத் தாழாது பறக்க விட்டவர் சண்முகம் அவர்கள். பழைய பாணி நாடகத்தில் தொடங்கி, நாளுக்கு நாள் மெருகுகள் ஏற்றி அதனை நவீனக் கலைவடிவு கொள்ளச் செய்த முன்னோடிச் சிற்பிகளில் ஒருவர் அவர்.

அவ்வையாக நடித்து அருந்தமிழ்த் தொண்டாற்றி அவ்வை சண்முகம் என்றே பெயர் கொண்டார். சோதரருடைய ஒத்துழைப்புடன் அவர் சீரிய முறையில் நிருவகித்த நாடகக் குழுவினர் இதிகாச புராணம், சரித்திரம், சமூகம் முதலிய எல்லாத் துறைகளிலும் மறக்கவொண்ணாத மாபெரும் கலைப் படைப்புக்களை அளித்தனர். வட இந்தியா, மலேசியா, இலங்கை போன்ற இடங்களிலும் தமிழ் நாடகச் சிறப்புக்கு வெற்றி முரசு கொட்டினார் திரு சண்முகம். நாடகக் கலை உள்ளவரையில் தம் பெயரும் வாழுமாறு செய்து கொண்டுவிட்டார்.

பெரும் கலைஞர் என்பதோடு நல்லியல்புகள் பொருந்திய பண்பாளராக, நல்ல தமிழ் மகனாக வாழ்ந்தார் திரு சண்முகம் அவர்கள். தமது நாடகக் குருவாகிய சங்கரதாஸ் சுவாமிகள், நாடகக் கலைக்குக் கௌரவம் பெற்றுத் தருவதில் பேரூக்கம் காட்டிய கல்கியவர்கள் ஆகியோரிடம் திரு சண்முகம் கொண்டிருந்த நன்றியுணர்வு மிக்க ஆழமானது. தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், மத்திய சங்கீத நாடக அகாதெமி ஆகியவற்றின் செயற்குழுவில் அங்கம் வகித்தவர் அவர். இவரது கலைச் சேவைக்காகவே மேல்சபையில் எம். எல். ஸி. யாகத் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. அகாதெமியின் தேசிய விருதும், பத்மஸ்ரீ பட்டமும் பெற்றவர். சென்னை நகரின் முக்கியஸ்தர்களில் ஒருவராக, நகரத்தில் நடக்கும் விழாக்களில் எல்லாம் பங்கு கொண்டு சோபையூட்டி வந்தார்.

'ஈடு செய்ய இயலாத இழப்பு' என்ற சொற்றொடர் பன்முறை பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்போது அருமை சண்முகம் அவர்களின் மறைவின்போது அந்தச் சொற்றொடர் முழுமையான உண்மைப் பொருள் பெற்று நம் உள்ளத்தை உலுக்குகிறது.



எம். பி. யின் சுற்றுப் பயணம் சொந்த ஹோதாவில் நடைபெற்றதாகவும், அதற்கும் தி. மு. க. வுக்கும் சம்பந்தமில்லை என்றும் தி. மு. க. மேலிடம் மறுத்திருப்பது கண் துடைப்போ என்று சந்தேகப்படக்கூட இடமிருக்கிறது. பக்கத்து மாநிலக் குழப்பங்களை இணைத்து எந்த மாநிலமும் தனக்கு மத்திய அரசின் மீதுள்ள மனத்தாங்கல்களைத் தீர்த்துக்கொள்ள இரகசியமாக முயல்வது கூடத் தவறாகும். ஆந்திர மாநிலப் பிரிவினைத் தலைவர்கள் தி. மு. க. மேலிடத்தினரைச் சந்திக்க வருவதோ, தி. மு. க. பிரதிநிதிகள் ஆந்திரப் பிரிவினைத் தலைவர்களை இரகசியமாகச் சந்திக்க முயல்வதோ பிரச்னைகளை நியாயப்படுத்துவதற்குப் பதில் மேலும் கெடுத்துவிடும் என்பது இரு சாராருக்கும் புரிந்திருக்க வேண்டும். நல்ல வேளையாகத் திரு கப்பா ரெட்டி தாம் தி. மு. க. மேலிடத்தினரைச் சந்திக்க வரவில்லை என்று மறுத்திருக்கிறார். இதில் தமிழகம் ஒதுங்கி நிற்பதே நல்லது.

சர்க்காரின் நஷ்டங்கள்

தமிழ்நாடு அரசாங்கத்தின் உணவுப் பொருள் வழங்கு துறைக்காக உணவுப் பொருள்களைச் சேமித்துவைத்ததில் 1968-69, 1969–70ம் நிதி ஆண்டுகளில் மட்டும் 27 லட்ச ரூபாய்க்கு நஷ்டம் நேர்ந்திருப்பதாக உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி கூறியிருக்கிறார். உணவுப் பொருள்களைச் சேமித்து வைப்பதில் சேதாரம் ஏற்படுவது பற்றி மேலும் அமைச்சர் மேல் சபைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துப் பேசும்பொழுது, சேமித்து வைக்கும் கால அளவு, தொடக்க நிலை ஈரம், பூச்சித் தாக்குதல்கள் போன்ற பிற காரணங்களை ஒட்டித்தான் சேதாரத்தின்

ராஜாஜி சிந்தனை

நான் பல நூல்கள் படித்திருந்த போதிலும் நம்முடைய சமயத்தைப் பற்றிய நூல்களைப் படிக்கவில்லை. என்னுடைய சமயத்தைப்பற்றி என்னுடைய தாயாரிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். அதை நூல்களிலிருந்தும் கற்றுக் கொள்ளவில்லை; குருவினிடமும் கற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் நான் பின்னால் கற்றுக் கொண்டதற்கும் என் தாயாரிடம் கற்றுக் கொண்டதற்கும் எவ்வித முரண்பாடும் காணப்படவில்லை.


விஞ்ஞானம் சிறிது படித்தால் உடனே சமயத்தைப் பற்றிய எண்ணங்கள் குழம்பி விடுகின்றன. ஆயினும் மேனாட்டு விஞ்ஞானங்களை நன்றாகப் படிப்போமானால், சமயத்தை, அதிலும் ஹிந்து சமயத்தை, வெகு நன்றாக அறிந்து கொள்ள உதவும். தற்கால விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள பல அற்புதங்களைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம். உதாரணமாக ரயில்வே, தந்தி, ஆகாயக் கப்பல், கம்பியில்லாத் தந்தியைக் கண்டு வியக்கிறோம். ஆனால் அற்புதத்திலும் அற்புதம் பிரபஞ்சம் முழுவதிலும் தோய்ந்து நிற்கும் ஆன்ம ஏகம்தான். கடவுளை முற்றிலும் அறிவது எப்படிக் கஷ்டமோ அப்படியே கஷ்டம், அற்பத்திலும் அற்பமான பொருளை 'முற்றிலும்' அறிவதும். 'முற்றிலும்' என்னும் சொல்லைக்கூட முற்றிலும் அறிய முடியாது. நான் குழந்தையாயிருந்தபோது 1, 2, 3 என்று கற்றுக் கொடுத்தார்கள். அப்போது அந்த இலக்கங்களுக்கு முடிவு இருக்கும் என்று எண்ணினேன். ஆனால் அவற்றுக்கு முடிவு கிடையாது என்று இப்போது அறிகிறேன். எந்த இலக்கமானாலும் அத்துடன் ஒன்றைச் சேர்க்கலாம். இதுதான் இறுதி இலக்கம் என்று கூற முடியாது. இப்படிக் கூட்டிக் கொண்டு போவதற்கு முடிவு கிடையாதது போலவே, கழித்துக் கொண்டும் வகுத்துக் கொண்டும் போவதற்கும் முடிவு கிடையாது. எவ்வளவு பெரிய இலக்கத்தையும் பெருக்கச் சாத்தியமாவது போலவே எவ்வளவு சிறிய இலக்கத்தையும் வகுப்பதும் சாத்தியமாகும். இதற்கு முடிவு ஏது? ஆகவே கரும் பலகையும் பலப்பமும் கொண்டு கடவுளின் முடிவற்ற தன்மையை அறிந்து கொள்ள முடியாது.

மேகமில்லாமலுள்ள வானத்தை இரவில் பார்த்தால் எத்தனையோ நட்சத்திரங்கள் காணப்பெறுகின்றன. தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்தால் வானத்தின் ஒரு சிறு பகுதியில் மட்டுமே சாதாரணமாகக் கண்ட அத்தனை நட்சத்திரங்களையும் காணலாம். எனவே, பிரபஞ்சம் எல்லையற்றது; எதையும் முற்றிலும் அறிய முடியாது என்று காண்பதே அறிவிலும் அறிவாகும். எதையும் முற்றிலும் அறிய முடியாது. ஏதோ அரைகுறையாகவே அறிய முடியும். ஆழ்ந்து ஆராய்ந்தால், மிகத் தெளிவான விஷயம் என்பது கூடப் பரம இரகசியமாகவே தோன்றும்.

அளவு இருக்கும் என்றும், ஆகவே சேதாரத்தின் மூலம் எவ்வளவு நஷ்டம் [nb] என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது என்றும் தெரிவித்திருக்கிறார். என்றாலும் 1968–69ல் மொத்த சேதாரம் ரூ. 9,68,928-03 என்றும், 69-70ல் ரூ. 17,54,884-05 என்றும் மேற்படி ஆண்டுகளில் கொள்முதல் உணவுப் பொருள்கள் முறையே ரூ. 43.24 கோடி, ரூ. 39.22 கோடி மதிப்புக்குரியவை என்றும் அமைச்சரே கூறியிருக்கிறார். அறுதியிட்டுக் கூற முடிகிறதோ, முடியவில்லையோ நஷ்டங்களை நம்மால் கூட்டிப் புரிந்து கொள்ள முடிகிறதே!

வெறும் அறிவுரை

சென்னை மருத்துவக் கல்லூரியின் 137 வது ஆண்டு விழாவில் பேசும்போது தமிழக கவர்னர் திரு கே. கே. ஷா, அயல் நாடுகளுக்குச் செல்லும் அளவுகடந்த மோகத்தை டாக்டர்கள் உடனே கைவிட வேண்டும் என்றும், இளம் டாக்டர்கள் வெளிநாடு செல்லுவதால் இந்தியாவின் அறிவுச் செல்வம் இழப்பாகிவிடுகிறது என்றும் இளம் டாக்டர்கள் தாய் நாட்டிலேயே கிராமப்புறங்களுக்குச் செல்ல வேண்டும், ஏழைகளுக்கு மருத்துவ உதவி புரிய வேண்டும் என்றும் அறிவுரைகளைக் கூறியிருக்கிறார். வெளிநாடு செல்லும் மோகத்தைக் கைவிட வேண்டும்போதே அப்



படி யாரைக் கைவிடச் சொல்லுகிறோமோ, அவர்களுக்கு உள்நாட்டில் என்னென்ன தொழில் வசதிகள், வாய்ப்புக்கள், மார்க்கங்கள் உள்ளன என்பதைப் பற்றியும் சிந்தித்துவிடுவது நல்லது. அறிவுரைகள் கூறுவது சுலபமாக இருக்கிறது. கடைப்பிடிக்கப் போகிறவர்களுடைய சிரமங்களைப் பற்றிச் சிந்திக்காத ஒருவழிப் பாதை அறிவுரைகள், எந்த அளவு அவற்றை ஏற்பவர்களுக்குப் பயன்படும் என்பது பற்றியும் நினைப்பது நல்லது.

கண்டுபிடிப்பு

அரசாங்க மருத்துவமனைகளுக்கும், மருந்துக் கடைகளுக்கும், வர்த்தகர்களுக்கும் சப்ளை செய்யும் போலி மருந்துத் தயாரிப்பாளர்களைக் கண்டுபிடித்துக் கைப்பற்றியிருக்கிறார்கள். லட்சக் கணக்கில் போலி வைட்டமின் 'வி' மாத்திரைகளை அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மேற்கொண்டு புலன் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறிவித்திருக்கிறார்கள். புதுப் புது மருந்துகளைக் கண்டுபிடிக்க முடிகிற திறமைசாலிகள் உருவாகவில்லை என்றாலும் பிழையான மருந்துகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்கும் திறமைசாலிகளாவது நம் நாட்டில் இருக்கிறார்களே என்று பெருமைப்பட்டுக்கொள்ளலாம் நாம்.

ஈசுவரன்



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி
காமகோடி சங்கராசாரிய
சுவாமிகள்

ஞானிக்கு ஆத்ம ஸ்வரூபத்தைத் தவிர வேறெதுவுமே தெரிவதில்லை. ஒரே பரமாத்மாதான் இத்தனையாகவும் தெரிகிறது என்று கண்டுகொண்டவன் அவன். வெளியிலே தெரிகிற தோற்றத்தை மாயை என்று தள்ளிவிட்டு எல்லாவற்றுக்கும் உள்ளேயிருக்கிற பரமாத்ம ஸ்வரூபத்தை மட்டுமே அநுபவிக்கிறவன் அவன். வெளிப் பார்வைக்குத் தெரிகிற உலகம் மாயை என்று ஆகிவிட்டதால், இந்த மாயா லோகத்தில் ஞானிக்குக் காரியம் எதுவுமே இல்லை. பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து, பார்வை எல்லாமே ஒன்றாக அடங்கிப் போனவனுக்குக் காரியம் எப்படி இருக்க முடியும்? அவன் பிரம்மமாகவே இருக்கிறான் என்கிறது உபநிஷத்து.

பிரம்மத்துக்குக் காரியம் இல்லை. ஆனால் இந்த மாய உலகத்தில் அகப்பட்டுக்கொண்டு காரியங்களைச் செய்து வருகிறவர்கள் ஈசுவரன் என்று ஒருவனைப் பூஜை செய்து தங்கள் காரியங்களை நடத்தித் தரவேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். நல்ல காரியங்களுக்காக நல்ல மனசோடு பிரார்த்தித்தால் ஈசுவரனும் அவற்றை நடத்தித் தருகிறார். இதிலிருந்து ஈசுவரன் காரியமே இல்லாமல் இருப்பவரல்ல என்று தெரிகிறது. நாம் பிரார்த்தித்தாலும் பிரார்த்திக்காவிட்டாலும் சகல பிரபஞ்சங்களையும் இத்தனை ஒழுங்கான கதியில் நடத்திக் கொண்டு, சகல ஜீவராசிகளுக்கும் சோறு போடுகிற பெரிய காரியத்தைச் செய்கிறார்.

காரியம் இல்லாத பிரம்மம் வேறு, காரியம் செய்கிற ஈசுவரன் வேறு என்பதா? இல்லை. ஞானியின் பிரம்மமேதான் லோக காரியங்களை நிர்வகிக்கிற ஈசுவரனாகவும் இருக்கிறது.

சிவனின் தட்சிணாமூர்த்திக் கோலம் பிரம்ம நிலையைக் காட்டுகிறது. அங்கே காரியமே இல்லை. ஒரே மௌனம்தான். அதே பரமசிவன் எத்தனை காரியங்களையும் செய்திருக்கிறார்? சிதம்பரத்தில் ஒரேயடியாகக் கூத்தடிக்கிறார். தாருகாவனத்தில் பிக்ஷாடனனாக அலைந்து மோகிக்கச் செய்திருக்கிறார். சூரியனைப் பளீரென்று அடித்துப் பல்லை உதிர்த்திருக்கிறார். எத்தனையோ பக்தர்களுக்கு வரம் கொடுத்துவிட்டு ஊர் ஊராகத் திண்டாடுகிறார்.

ஸ்வாமி எப்போதும் உள்ளே அடங்கி பிரம்மமாக இருக்கிறார். வெளியிலே கூத்தடிக்கிற ஈசுவரனாக இருக்கிறார்.

சாதாரண ஜனங்கள் ஏரிக்கு ஒரு பக்கம் நீந்திக் கொண்டிருக்கிறார்கள். ஞானிகள் மறுபக்கம் வயலிலே நிற்கிறார்கள். நடுவில் ஏரிக்கரை. அது குறுக்கிடுவதால் ஞானிக்கு ஏரி தெரியாது. ஏரியில் இருக்கிற ஜனங்களுக்கு வயல் தெரியாது. ஸ்வாமியோ இரண்டுக்கும் மத்தியில் இருக்கிற கரைமேல் இருக்கிறார். ஏரித் தடத்தில் நிற்கிற ''தடஸ்தன்'' அவர். அவருக்கு லோகமும் தெரியும். லோக திருஷ்டி நசித்துப் போன ஞானியின் நிலையும் தெரியும். 'ஏரியில் முழுகுகிறவனைத் தூக்கிப் போடு' என்று வயலில் இருக்கிறவனைக் கூப்பிட்டு அவர் சொல்ல முடியும்.

எல்லாம் தாமே என்பதை ஸ்வாமி அறிந்திருக்கிறார்; ஆனாலும் அவரை வேறாக நினைக்கிற ஜீவர்களை அவரும் வேறு போலப் பார்த்து வேடிக்கையும் செய்வார். இதைப் பற்றி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் ''சிவலீலார்ணவ''த்தில் ஓர் அழகிய சுலோகம் உண்டு. அதன் தாத்பரியத்தைச் சொல்கிறேன்.

பரமேசுவரன் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்த கதை எல்லோருக்கும் தெரியும். அவர் உடைப்பு அடைத்து ஒழுங்காக வேலை செய்யாததைக் கண்டு பாண்டிய ராஜன் அவரைப் பிரம்பால் அடித்தான். உடனே அந்தப் பிரம்படி பாண்டியன் உள்பட சகல ஜீவராசிகளின் மீதும் விழுந்தது. இங்கே தாமே எல்லாமும் என்பதை அவர் காட்டிவிட்டார். இதைப் பார்த்துக் கவி கேட்கிறார்: ''அது சரி; உன்னைத் தவிர வேறில்லை என்ற சிவாத்வைதம் பிரம்படி படுவதற்கு மட்டும்தானா? நீ மதுரமான பிட்டை வாங்கி வாங்கித் தின்றாயே, அப்போது மட்டும் ஏன் எல்லா ஜீவராசிகளுக்கும் அதைப் புசித்த ஆனந்தம் இல்லை? அடிபடும்போது ஒன்று; ஆனந்தத்தின் போது வேறு வேறா?''

ஸ்வாமி உள்ளே அடங்கிய பிரம்மமாகவும், வெளியே காரியம் செய்கிற ஈசுவரனாகவும் இருப்பதை இந்த ரசமான கேள்வி மூலம் தெரிந்து கொள்கிறோம்.



விட்டமின்கள் மற்றும்
தாதுப் பொருட்களுக்கான
'உணர முடியாப் பசி' உங்களுக்கு
சோர்வும், எரிச்சலும் ஊட்டுகிறது...

வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்

மட்டுமே 12 இன்றியமையாத சத்துக்களை அளிக்கிறது

அந்த 'உணரமுடியாப் பசி'யைத் தீர்ப்பதற்கு

உங்கள் உடலில் விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் முக்கிய சத்துக்களுக்கான பசி நிரந்தரமாக இருக்கிறது. இந்த 'உணர முடியாப் பசி'யின் விளைவு—சோர்வு, எரிச்சல், இருப்புக் கொள்ளாமை, பசியின்மை, ஜீரண சக்தி குறைவு.

எல்லா சத்துக்களும் அடங்கிய வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் சாப்பிட்டு 'உணர முடியாப் பசி'யைப போக்குங்கள். அதில் 12 முக்கிய சத்துக்கள் உள்ளன: வளர்ச்சிக்கும், வலிமைக்கும் விட்டமின்கள்; இரத்த விருத்திக்கு இரும்புச்சத்து; நல்ல பசியெடுக்க எல்லாப் பொருட்களும்; நரம்புகளுக்கு ஊரமூட்ட ஃபாஸ்ஃபேட்டுக்கள்.

சிந்தித்துப் பாருங்கள்; உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் தேவை, இன்றே!

இரண்டு அளவுகளில் கிடைக்கிறது: 250 ml, 470 ml.



ஒரு தரமான வார்னர்-லாம்பர்ட் தயாரிப்பு.

WVT-C-5 TH

அலை ஓசை

அமரர் கல்கி

12. சீதாவின் பெருமிதம்

''சீதா! வாடி அம்மா! நான் சகல விஷயமும் கேள்விப்பட்டேன். மாப்பிள்ளை இந்த எலெக்ஷனிலே ஜயிக்கிறதற்காக நீ ரொம்பப் பாடுபடுகிறாயாம். எனக்கு ரொம்ப சந்தோஷம். சொந்த மனுஷாள் என்றால் இப்படி யல்லவா இருக்க வேண்டும்? இந்த மாதிரி சமய சந்தர்ப்பத்துக்கு ஒத்தாசை செய்வதற்காகத்தானே பந்துக்கள் வேண்டும் என்கிறது?'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

சூரியா சொன்னதிலிருந்து மாமியின் மனோபாவத்தைச் சீதா கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்த போதிலும் சரஸ்வதி அம்மாள் இவ்வளவு அன்பும் ஆதரவுமாகப் பேசியது சீதாவுக்கு ஒரே ஆச்சரியமா யிருந்தது. ஆயினும் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல், ''மாமி! நீங்கள் வந்து விட்டீர்கள் அல்லவா? என்னுடைய தலைப்பொறுப்பு நீங்கியது. இனிமேல் எல்லாம் உங்கள் பாடு! இன்னும் இரண்டு நாட்களில் நான் ஊருக்குப் புறப்பட வேண்டும்!'' என்று சொன்னாள் சீதா.

''ஊருக்குக் கிளம்புகிறாயா? அழகாய்த்தானிருக்கிறது! நான் வந்து விட்டேனே என்று சொல்கிறாயா? நான் நாளைக்கே ஊருக்குப் போய் விடுகிறேன், சீதா!.....''

''மாமி! மாமி! சத்தியமாய் நான் அதற்காகச் சொல்லவில்லை. உங்கள் பேரில் எனக்கு என்ன விரோதமா? எப்போதாவது உங்களுடைய வார்த்தையை எதிர்த்து நான் ஏதாவது சொல்லி யிருக்கிறேனா? உண்மையாகவே நான் ஊருக்குப் போக வேண்டும் என்றிருக்கிறேன்...''

''எல்லாம் மாப்பிள்ளைக்கு எலெக்ஷன் ஆன பிற்பாடு போகலாம். நீ சொல்லித்தான் மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நிற்கிறாராம். நீ மீட்டிங்கில் பேசுகிறாயாம்; பாடுகிறாயாம். உன்னால்தான் மாப்பிள்ளைக்குச் சேர்மன் வேலை ஆகப் போகிறதென்று இந்த ஜில்லாவெங்கும் பேச்சா யிருக்கிறது. அப்படியிருக்க நீ திடீரென்று ஊருக்குப் போகிறேன் என்றால் மாப்பிள்ளைக்கு யார் ஒத்தாசை செய்வார்கள்?''

''உங்களுடைய மாப்பிள்ளைக்கு யாருடைய ஒத்தாசையும் வேண்டியதில்லை. அவருடைய சாமர்த்தியத்துக்கு இன்னொருத்தரின் ஒத்தாசை எதற்கு? அதிலும் என்னால் என்ன பிரமாதமாகச் செய்துவிட முடியும்? உங்களுடைய பெண் லலிதா அடிக்கடி 'அஸ்து' சொல்லாமலிருந்தால் அதுவே மாப்பிள்ளைக்குப் பிரமாத ஒத்தாசையா யிருக்கும். இந்த அதிசயத்தைக் கேளுங்கள் மாமி! உங்கள் மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நிற்கிறது பற்றிஇந்தத் தேவப்பட்டணத்தில் உள்ள அத்தனை ஜனங்களும் சந்தோஷப்படுகிறார்கள். யாரிடம் இவர் போனாலும் 'உங்களுக்குத்தான் எங்களுடைய ஓட்டு' என்று சொல்கிறார்கள். ஆனால் லலிதாவுக்கு மட்டும்தான் இது ஒன்றும் பிடிக்கவில்லை. ஓயாமல் முணு முணுத்துக் கொண்டிருக்கிறாள். மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நின்றதனால் ஏதோ குடி முழுகிப் போய்விட்டது போல் சண்டை பிடிக்கிறாள். அவருக்கும் 'சீ!' என்று போய்விடுகிறது! அவர் மனம் வெறுத்து, 'எனக்கு இந்த எலெக்ஷனும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்! எங்கேயாவது காசி ராமேசுவரத்துக்குப் போய் விடுகிறேன். இல்லாவிட்டால் திருவண்ணாமலைக்குப் போய் ரமண ரிஷிகளின் ஆசிரமத்தில் சேர்ந்து விடுகிறேன்' என்று சொல்ல ஆரம்பித்து விட்டார். இன்று காலைமுதல் பாருங்கள். இரண்டு பேருக்கும் ஒரே சண்டை!...''

சரஸ்வதி அம்மாள் கோபத்தோடு தன் குமாரி லலிதாவைப் பார்த்து, ''ஏண்டி, லலிதா! இப்படித்தான் செய்கிறதோ? அழகா யிருக்கிறதடி! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன? யாராவது கேட்டார் பேச்சைக் கேட்டுக் கொண்டு கூத்தடிக்கிறாயா?


இனிமேல் அந்த மாதிரி யெல்லாம் வாயைத் திறந்து சொல்லக் கூடாது! இல்லாவிட்டால், இந்த எலெக்ஷன் முடிகிறவரையில் ராஜம்பேட்டைக்குப் புறப்பட்டுப் போய்விடு!'' என்றான்.

''சரி, அம்மா! நான் போய்விடுகிறேன்!'' என்று லலிதா விளையாட்டுப் புன்சிரிப்புடன் கூறினாள்.

''பார்த்தீர்களா மாமி இவள் சொல்வதை? ஊருக்குப் போய் விடுகிறாளாம்! நன்றாயிருக்கிறதல்லவா கதை? நாளைக்கு மாப்பிள்ளை எலெக்ஷனில் ஜெயித்ததும், இவளைச் 'சேர்மனுடைய ஒய்ப்' என்றும், 'மிஸஸ் சேர்மன்' என்றும் கொண்டாடப் போகிறார்களா, வேறு யாரையாவது கொண்டாடப் போகிறார்களா? டீ பார்ட்டிகளுக்கும் டின்னர்களுக்கும் இவளை அழைத்து மாலை போடப் போகிறார்களா? வேறு யாரையாவது அழைத்து மாலை போடப் போகிறார்களா? 'எங்கள் வீட்டுக் கல்யாணத்துக்கு வரவேண்டும்', 'எங்கள் வீட்டுக் கிரகப் பிரவேசத்துக்கு வரவேண்டும்' என்று இவளை வருந்தி வருந்தி அழைக்கப் போகிறார்களா? வேறு யாரையாவது அழைக்கப் போகிறார்களா? குரூப் போட்டோவில் இவள் அகத்துக்காரர் பக்கத்தில் ஜம்மென்று இவள் உட்காரப் போகிறாளா? வேறு யாராவது உட்காரப் போகிறார்களா? அதெல்லாம் தெரியாமல் இவள் ஓயாமல் ஏதாவது நிஷ்டூரம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். கொஞ்சம் இவளுக்கு நீங்கள் புத்தி சொல்ல வேண்டும்!''

''கொஞ்சம் சொல்லுகிறது என்ன? நிறையச் சொல்கிறேன். இவள் மாத்திரம்தான் இப்படி என்று நினைக்காதே. இவளுடைய அண்ணா இருக்கிறான், உன்னுடைய அம்மாஞ்சி சூரியா, அவனும் இப்படித்தான் ஏதாவது உளறிக் கொண்டிருக்கிறான். எலெக்ஷனுக்கு நின்று விட்டதால் ஏதோ 'குடி முழுகி விட்டது போல் உளறுகிறான். 'வாயை மூடிக் கொண்டிரு! மாப்பிள்ளையிடம் ஏதாவது உளறி வைக்காதே!' என்று கண்டித்து அவனை அழைத்துக்கொண்டு வந்தேன். அண்ணாவும் தங்கையும் ஒரே அச்சு. இரண்டு பேரும் அப்பாவைக் கொண்டு பிறந்து விட்டார்கள். பிதிரார்ஜித நிலங்களை யெல்லாம் பிரித்து ஆட்படைகளுக்குக் கொடுத்து விடவேண்டும் என்று சொன்னார் பாரு! அப்பாவைப் போலத்தான் பெண்ணும் பிள்ளையும் இருப்பார்கள். எலெக்ஷனுக்கு நிற்கக் கூடாதாம்; பணம் காசு சம்பாதிக்கக் கூடாதாம். ஆனால் ஜெயிலுக்கு மட்டும் போக வேண்டுமாம்! அடியே, சீதா! உனக்கு இருக்கிற புத்தியிலே எட்டிலே ஒன்று இவர்களுக்கு இருக்கக் கூடாதா?''

சீதாவின் உடல் பூரித்தது; உள்ளத்தில் கர்வம் ஓங்கி வளர்ந்தது. தன்னைக் கண்டால் வேப்பங்காயைப் போல் கசந்து கொண்டிருந்த மாமி இப்படித் தன்னைச் சிலாகிக்கும் காலம் ஒன்று வரும் என்று சீதா கனவிலும் எண்ணியதில்லை. அப்படிப்பட்ட காலம் வந்தே விட்டது! இதை நினைத்துச் சீதாவின் நெஞ்சம் பெருமிதத்தினால் வெடித்து விடும்போல் விம்மியதில் வியப்பில்லையல்லவா?



லலிதாவுக்கோ அம்மாவின் பேச்செல்லாம் ஒரு விதத்தில் கசப்பாயும் இன்னொரு விஷயத்தில் சந்தோஷமாயும் இருந்தது. அம்மாவின் அப்பட்டமான சுயநலப் பேச்சு கசப்பாயிருந்தது. தன் அருமைத் தோழியின் விஷயத்தில் அம்மாவின் மனோபாவம் மாறியது அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி அளித்தது. இந்த ஒரு நல்ல பயனுக்காகவே தன் புருஷன் தேர்தலுக்கு நின்றது சரிதான் என்று அவளுக்குத் தோன்றியது.

''அம்மா! இத்தனை நாளைக்குப் பிறகு இப்போதாவது நீ அத்தங்காள் நல்லவள் என்றும் புத்திசாலி என்றும் ஒப்புக்கொண்டாயே? அதற்காக ரொம்பச் சந்தோஷம்!'' என்றாள்.

''அதென்ன அப்படிச் சொல்கிறாய் லலிதா! நான் எப்போதாவது உன் அத்தங்காளைப் பொல்லாதவள் என்றோ அசடு என்றோ சொல்லியிருக்கிறேனா? சீதா, நீயே சொல்லடி அம்மா! உன்னுடைய அப்பாவும் அம்மாவும் ஒழுங்காகக் குடித்தனம் செய்து வாழவில்லையே என்று வருத்தப்பட்டுப் பேசியிருக்கிறேன். அது ஒரு தப்பா? அதுவும் ஏதோ அபிமானத்தினால்தான் சொன்னேனே தவிர, வேறு அவர்கள் பேரில் எனக்கு என்ன வருத்தம்? எனக்கு என்ன அவர்கள் கெடுதல் செய்து விட்டார்கள்? ஊருக்குப் போகிற பேச்சை மட்டும் எடுக்க வேண்டாம், சீதா! இந்த வீட்டில் இனிமேல் உன் இஷ்டப்படி ஏதாவது நடக்கா விட்டால் என்னைக் கேள்!'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.



''மாமி! அதற்காக மட்டும் நான் சொல்லவில்லை. என் குழந்தை வஸந்தியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது, பள்ளிக்கூடம் சாத்தப் போகிறார்கள் என்று. குழந்தையைப் பார்ப்பதற்கு நான் போக வேண்டாமா?''

''சூரியாவைப் போய் வஸந்தியை அழைத்துக் கொண்டு வரச் சொன்னால் போகிறது! நீமட்டும் இந்த எலெக்ஷன் முடிகிறவரையில் இந்தண்டை அந்தண்டை போகக் கூடாது!''

''நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போது நான் போகவில்லை, மாமி! சூரியாவைப் போகச் சொல்லுங்கள். ஆனால் உங்கள் பெண்ணிடம் மட்டும் நீங்கள் கொஞ்சம் சொல்லி வையுங்கள், அவள் அபசகுனம் போல் எதற்கெடுத்தாலும் அஸ்து என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.''

''லலிதாவைப் பற்றி இனிமேல் நீ கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டாம். லலிதா வாயைத் திறந்தால் நீ என்னைக் கேள். நாலு அறை கொடுத்து ஒரு அறையில் தள்ளிக் கதவைப் பூட்டி விடுகிறேன். நாலு வருஷங்களாய் மாப்பிள்ளை வருமானமே இல்லாமல் இருக்கிறார். இந்தச் சேர்மென் வேலையாவது கிடைக்க வேண்டுமே என்று நம்முடைய குலதெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டிருக்கிறேன். சீமாச்சு மாமா மெனக்கெட்டு வந்து உன்னைப் பற்றி ஏதேதோ புகார் சொன்னார். அதையெல்லாம் நான் கேட்பேனா? 'போங்காணும்! யார் மேலும் கோள் சொல்வதே உமக்கு வேலை! உம்முடைய வேலையைப் பாரும்' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். சீமாச்சு மாமாவுக்கு இப்போதுள்ள சேர்மன் ஜவுளி லைசென்ஸ் வாங்கிக் கொடுத்தாராம். அதிலே ரொம்பப் பணம் இவருக்கு லாபமாம். இரண்டு மச்சு வீடு கட்டியாகி விட்டது! அதற்காகப் பழைய சேர்மனுக்குச் சீமாச்சு மாமா விழுந்து விழுந்து வேலை செய்கிறாராம். சிநேகம், பந்துத்வம் எல்லாம் எங்கேயோ பறந்து விட்டன. இந்தக் காலத்திலே காசு பணம்தான் பெரிது. சீதா! உன்னைப் போல் சொந்த மனுஷ்யாளிடம் அபிமானத்துடன் இருப்பவர்களை நான் பார்த்ததே இல்லை. இந்தப் பெண் தத்துப்பித்து என்று என்னவெல்லாமோ பேசியிருந்தும் நீ பொறுமையாயிருந்திருக்கிறாயே? அதைச் சொல்லு! உனக்கு இவள் என்ன வேணுமானாலும் செய்ய

லாம். தோலைச் செருப்பாய்த் தைத்துப் போட்டாலும் தகும்!'' என்று சொன்னாள் சரஸ்வதி அம்மாள்.

சீதா சற்று முன் தான் அடைந்த மனவேதனையை அடியோடு மறந்து, குதூகலத்தினால் மெய்மறந்தாள்.

13. ராகவன் பகற் கனவு

நீலத் திரைக் கடலைக் கிழித்துக் கொண்டு நீராவிக் கப்பல் சென்று கொண்டிருந்தது. அது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்த எஸ். எஸ். எலிஸபெத் என்னும் பிரயாணக் கப்பல். அதில் நமது கதாநாயகன் சௌந்தரராகவன் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். பெரும் பிரயத்தனம் செய்து அந்தக் கப்பலில் சௌந்தரராகவன் இடம்பெற வேண்டியிருந்தது. மகாயுத்தம் முடிந்து ஒரு வருஷம்கூட ஆகவில்லை. ஆதலால் கப்பல்களில் பிரயாணிகளுக்கு இடம் கிடைப்பது கஷ்டமாக இருந்தது.

யுத்தம் முடிந்து சில மாதத்துக்கெல்லாம் ராகவன் இங்கிலாந்துக்குச் சென்றான். போதிய காரணமில்லாமல் தன்னைச் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்ட அநீதிக்குப் பரிகாரம் தேடுவது இங்கிலாந்து சென்றதன் நோக்கம். என்னதான் கம்பெனி வேலை என்றாலும், அதில் சம்பளம் எவ்வளவுதான் கிடைத்தாலும், சர்க்கார் உத்தியோகத்துக்கு ஈடாகாதென்பது ராகவனுக்குச் சீக்கிரத்திலேயே தெரிந்து போய் விட்டது. மேலும் எதற்காகத் தன் பேரில் ஒரு வீண் அபாண்டம் சர்க்கார் தஸ்தாவேஜிகளில் இருக்க வேண்டும்? யுத்தத்தில் பிரிட்டன் தோற்றுப் போய் இந்தியாவில் அரசாங்கம் மாறியிருந்தாலும் ஒருவாறு மன நிம்மதி அடைந்திருக்கலாம். ஆனால் யுத்தத்தில் பிரிட்டன் ஜயித்து இந்தியாவிலும் பிரிட்டிஷ் ஆட்சி நிலைத்திருக்கிறது! அவ்விதமிருக்கும்போது சர்க்கார் உத்தியோகத்தை எப்படி அவன் அலட்சியம் செய்ய முடியும்?

ஆரம்ப காலத்தில் ராகவனுடைய பொருளாதார ஞானத்தை மெச்சி உத்தியோகம் கொடுத்த துரை இங்கிலாந்திலேதான் அச்சமயம் இருந்தார். அவரிடம் தன்னுடைய கட்சியைச் சொல்லி முறையிட்டுச் சிபாரிசு பெறலாம் என்ற ஆசை அவனுக்கு இருந்தது. அந்த ஆசை எவ்வளவு வீண் ஆசை என்பது இங்கிலாந்துக்குப் போன பிறகுதான் தெரிந்தது.

யுத்தத்தின் போது ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தின் பெரும் பகுதியைப் பாழாக்கியிருந்தன. கோடானு கோடி பணம் யுத்தத்தில் செலவான காரணத்தினால் இங்கிலாந்து 'இன்ஸால்வெண்ட்' ஆகிவிடுமோ என்று பயப்படும்படியான நிலைமையில் இருந்தது. ஆங்கில மக்கள் போதிய உணவில்லாமலும், உடை இல்லாமலும், மற்ற வாழ்க்கை வசதிகள் இல்லாமலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் ராகவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றி யார் உருகிக் கண்ணீர் வடிப்பார்கள்? அவனுடைய குறையைக் காதிலேதான் யார் வாங்கிக் கொள்வார்கள்?

ராகவனுக்கு உத்தியோகம் கொடுத்து அவனைச் செல்லப் பிள்ளையைப் போல் நடத்திய துரைகூட இப்போது அவனுடைய புகாரைப் பொருட்படுத்தவில்லை. ''மிஸ்டர் ராகவன்! இங்கே நாங்கள் அன்றாடம் ஜீவனம் செய்கிற பாடே பெரும் பாடாக இருக்கிறது. பெரிய பெரிய சீமான்கள் எல்லாரும் தினந்தோறும் க்யூவில் நின்று அரை ராத்தல் ரொட்டி வாங்கிக் கொண்டு வந்து காலட்சேபம் செய்யவேண்டியிருக்கிறது. நீ உனக்கு உத்தியோகம் போனதைப் பற்றிப் பிரமாதப்படுத்துகிறாய். உன்னுடைய புகாரை எடுத்துக் கொண்டு நான் இங்கே யாரிடமாவது சிபாரிசு செய்யப் போனால் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள்! நீ வேலை பார்க்கும் கம்பெனியில் ஒரு உத்தியோகம் கிடைத்தால் நான்கூட வந்துவிடுவேன்! இங்கே நீ வீணாக அலைந்து காலங் கழிக்காதே! இந்தியாவுக்குத் திரும்பிப் போய்க் கிடைத்திருக்கும் உத்தியோகத்தைச் சரியாகக் காப்பாற்றிக் கொள்!'' என்று மாஜி வரவு செலவு இலாகாத் தலைவர் கூறிய புத்திமதி ராகவனைத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. துரை இன்னொரு விஷயமும் சொன்னார்: ''ராகவன்! இனிமேல் இந்தியாவில் சர்க்கார் உத்தியோகத்துக்கு முன்னைப் போல் அவ்வளவு மதிப்பு இராது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்துவிடுவது என்று இங்கே தொழிற் கட்சி மந்திரிகள் தீர்மானம் செய்துவிட்டார்கள். அது சரியான தீர்மானம்! ஏனெனில் எங்களால் இனிமேல் நாற்பது கோடி ஜனங்கள் உள்ள ஒரு தேசத்தைக் கட்டி ஆள முடியாது. அதற்கு வேண்டிய ஆள் பலமும் வசதிகளும் இங்கே இல்லை. இந்தியா சுதந்திரம் பெற்றால் முதலில் காங்கிரஸ்காரர்கள்தான் அதிகாரத்துக்கு வருவார்கள். காங்கிரஸ் அதிகாரத்தின் கீழ் நீ சர்க்கார் உத்தியோகம் பார்க்க விரும்பமாட்டாய் அல்லவா?''

ராகவனுடைய உள்ளம் மேலும் குழப்பத்தை அடைந்தது. துரையின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆயினும் சர்க்கார் உத்தியோகம் திரும்பக் கிடைக்கும் என்ற ஆசை போய்விட்டது! நல்ல வேளை, கம்பெனி உத்தியோகத்தை அவன் விட்டுவிடவில்லை. நாலு மாதம் லீவு வாங்கிக் கொண்டு தான் வந்திருந்தான். திரும்பிப் போய்க் கம்பெனி உத்தியோகத்தை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் என்று முடிவு செய்தான்.

இந்தியாவுக்குப் போகும் கப்பலில் இடம் கிடைப்பது மிகவும் பிரயாசையாயிருந்தது. கப்பலுக்காகக் காத்திருந்த சமயத்தில் அங்குமிங்கும் அவன் சுற்றியலைந்தான். அப்படி அலைந்த போது அவன் கண்ட காட்சிகளும் கேட்ட விஷயங்களும் அவனுடைய மனத்தில் ஆச்சரியமான ஒரு மாறுதலை உண்டாக்கின. ஆகா! இந்த இங்கிலீஷ்காரர்கள் எப்பேர்ப்பட்டவர்கள்? எத்தகையதீரர்கள்! நாட்டின் சுதந்திரத்துக்காக என்னவெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறார்கள்? நாட்டின் சுபிட்சத்துக்காக எப்படியெல்லாம் பாடுபடுகிறார்கள்? ஆனால் இந்தியாவில் நாம் இத்தனை காலமும் என்ன செய்து வந்தோம்? அந்நியர்களின் கீழ் அடிமை உத்தியோகம் பார்த்து வந்தோம். அதைத் திரும்பப் பெறுவதற்காகக் கெஞ்சுமணியம் செய்ய இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். சீ! இது என்ன மானங்கெட்ட பிழைப்பு? இங்கிலீஷ் படிப்பு என்ன மாதிரி நம்முடைய புத்தியைக் கெடுத்து விட்டது? — போனதற்கெல்லாம் பரிகாரமாக, இனி மேல் நடந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஏதேனும் ஒரு பிரமிக்கும்படியான காரியம் செய்ய வேண்டும்....

எஸ். எஸ். எலிசபெத் கப்பலின் மேல் தளத்தில் சாய்வுநாற்காலியில் சாய்ந்து கொண்டு சௌந்தரராகவன் சிந்தனையில் ஆழ்ந்திருந்த போது மேற்கண்டவாறு பற்பல எண்ணங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. மனத்தை அதன் போக்கிலேயே விட்டபோது பதினைந்து வருஷங்களுக்குமுன் கராச்சியிலிருந்து பம்பாய்க்குக் கப்பலில் பிரயாணம் செய்ததில் வந்து மனம் நின்றது. ஆகா! அந்தப் பிரயாணம் எவ்வளவு ஆனந்தமாக இருந்தது! அது பெரும்பாலும் சாமான்கள் அடுக்கிய சாதாரண நாலாந்தரமான கப்பல்தான்! இந்தக் கப்பலின் விஸ்தீரணத்திலோ கம்பீரத்திலோ அழகிலோ வசதியிலோ எட்டில் ஒரு பங்குகூட அந்தக் கப்பலில் இல்லை! ஆயினும் அந்தக் கப்பலில் அவன் அப்போது செய்த பிரயாணம் ஆகாயவெளியில் புஷ்பரதத்தில் தேவதேவியர்களுக்கு மத்தியில் கந்தர்வர்களின் கானத்தைக் கேட்டுக் கொண்டு செய்த பிரயாணத்தைப்போல் ஆனந்தமயமாயிருந்தது. காரணம், அதே கப்பலில் தாரிணியும் பிரயாணம் செய்ததுதான். அடடா! என்ன தவறு செய்துவிட்டோம்? கொஞ்சம் பிடிவாதம் பிடித்துத் தாரிணியைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் வாழ்க்கை எவ்வளவு ஆனந்தமாயிருந்திருக்கும்?

தாரிணியிடமிருந்து மனம் சீதாவிடம் பாய்ந்தது. தாரிணியைப் புறக்கணித்தது ஒரு பிசகு என்றால், சீதாவை மணந்துகொண்டது அதைவிடப் பெரிய

பண்பாட்டின் சிகரம்!



1945 டிசம்பரில் மகாத்மா காந்தி தட்சிண பாரத் ஹிந்தி பிரசார சபையின் வெள்ளி விழாவுக்குத் தலைமை வகிக்கச் சென்னைக்கு வந்திருந்தார். மகாத்மா காந்தி சபாவின் தலைவர்; ராஜாஜி துணைத் தலைவர். வெள்ளி விழா முடிந்த மறுநாள் ராஜாஜி, மகாத்மாவிடம் ஏதோ பேச வந்தார். மகாத்மாவைத் தரிசனம் செய்ய வருபவர்களையும் போக்குவரத்து வண்டிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தது. சபாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களுக்கும், விசேஷ அழைப்பு அனுப்பப் பெற்றவர்களுக்கும் தனி பாட்ஜுகளும், பாஸ்களும் வழங்கப்பட்டிருந்தன. அன்று மாலை ராஜாஜி வந்ததும், சபாவின் நுழை வாசலிலிருந்தே தொண்டர்கள், ராஜாஜியைப் பாஸ் காண்பிக்கும்படி கேட்டனர். ராஜாஜி அதை வீட்டில் விட்டு விட்டு வந்து விட்டார். ஆனால் ராஜாஜி தமது செல்வாக்கினால் உள்ளே நுழைய முயலவில்லை. அதற்கு மாறாக அவர் உடன் வந்த தம் புதல்வரை வீட்டுக்கு அனுப்பிப் பாஸ் எடுத்து வரச் செய்தார். பாஸ் வரும் வரை வாசலில் காத்து நின்றிருந்தார்!

— போதானந்த சந்தானம்

பிசகு. கிட்டாவய்யர் மகள் லலிதாவைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் இல்வாழ்க்கை நிம்மதியாகவாவது இருந்திருக்கும். லலிதாவைப் பார்க்கப் போன இடத்தில் இவள் குறுக்கே வந்து சேர்ந்தாள்! கண்களை அகல விரித்துப் பார்த்து நம்முடைய மதியை மயக்கி விட்டாள்! ஒரு விஷயம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். கண்ணழகிலே மட்டும் சீதாவுக்கு இணையில்லைதான். தாரிணியின் கண்களைக் காட்டிலுங்கூட சீதாவின் கண்கள் கொஞ்சம் அதிக அழகானவை என்பதில் சந்தேகம் இல்லை! ஆனால் கண்ணழகு மட்டும் ஒரு பெண்ணிடம் இருந்தால் போதுமா? போதாது என்பதற்குத் தன்னுடைய வாழ்க்கையே அத்தாட்சி! அந்தக் கண்களின் வழியாக அவளுடைய உள்ளத்தின் இயல்பைப் பார்க்கும் சக்தி தனக்கு இல்லாமற் போய்விட்டதே? சீச்சீ! என்ன சஞ்சல புத்தி? என்ன சண்டை பிடிக்கும் சுபாவம்? என்ன அசூயை? என்ன ஆத்திரம்? பெண்களின் கெட்ட குணங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பிரம்மதேவன் சீதாவைப் படைத்திருக்க வேண்டும்! 'சீதா' என்னும் பெயரைக் காட்டிலும், 'சூர்ப்பனகை' என்னும் பெயர் அவளுக்கு அதிகப் பொருத்தமாயிருக்கும்!

சீச்சீ! இது என்ன எண்ணம்? தவறு முழுதும் சீதாவினுடையதுதானா? தன் பேரிலும் தவறு இருக்கத்தான் இருக்கிறது! அவளை நடத்த வேண்டியபடி முதலிலிருந்தே நடத்தியிருந்தால் சொன்னதைக் கேட்டுக் கொண்டு அடங்கி நடந்திருப்பாள்! புதுடில்லி நாகரிக வாழ்க்கைக்கு அவளைத் தயார்ப் பண்ண யத்தனித்தது அல்லவா இப்படி வினையாக வந்து முடிந்தது? அவள் சுபாவம் கெட்டுப் போனதற்கு அந்த மடையன் சூரியாவும் ஒரு காரணம். தன்னுடைய அபிப்பிராயங்களைக் காட்டிலும் சூரியாவின் அபிப்பிராயங்கள் அல்லவா அவளுக்கு மேலாகப் போயிருந்தன? கடைசியாக எப்படிப்பட்ட படுகுழியில் கொண்டு போய் அந்தப் படுபாவி அவளைத் தள்ளி விட்டான்?

இந்த ஸ்திரீகளின் சுபாவமே அதிசயமானதுதான்! சூரியாவிடம் அப்படி என்ன அழகை, அற்புதத்தை, இவர்கள் கண்டுவிட்டார்களோ, தெரியவில்லை. சீதாவாவது 'அம்மாஞ்சி' என்று சொல்லி உருகிக் கொண்டிருந்தாள். தாரிணிக்கும் சூரியாவுக்கும் என்ன சம்பந்தம்? அவர்களுக்குள் எப்படி சிநேகம் ஏற்பட முடியும்? ஆகா! சூரியாவைப் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்புவிப்பதற்காகத் தாரிணி எப்பேர்ப்பட்ட சாகஸமான காரியம் செய்தாள்? என்ன துணிச்சல்! என்ன தைரியம்? இரண்டு பேரும் அன்றைக்கு மறைந்தவர்கள் அப்புறம் வெளிப்படவே இல்லை! மத்திய சர்க்காரின் துப்பறியும் இலாகா எவ்வளவோ முயன்றும் பயனில்லை! எப்படி அவர்கள் மாய மாய் மறைந்திருப்பார்கள்?

இதில் ரொம்பவும் விசித்திரமான வேடிக்கை என்னவென்றால், கல்கத்தாவில் சீதாவைத் தாரிணி என்ற பெயரால் கைது செய்து பாதுகாப்பு சிறையிலே வைத்திருந்ததுதான்! இந்த விஷயம் கல்கத்தாவுக்கு வந்து கொஞ்ச நாளைக்குப் பிறகுதான் ராகவனுக்குத் தெரியவந்தது. ஆனாலும் அதைப் பற்றி அவன் நடவடிக்கை ஒன்றும் எடுக்க முடியாமல் இருந்தது. அவள் தாரிணி இல்லை. சீதா என்று தான் சொன்னால், அவள் கைதியானபோது ஏன் அதைச் சொல்லவில்லை என்று கேட்பார்கள் அல்லவா? — டில்லியிலிருந்து அவள் கல்கத்தா வந்த காரணம் என்னவென்று கேட்பார்கள் அல்லவா? — அந்தக் கேள்விகளுக்கு என்ன பதிலைச் சொல்வது? கிடக்கட்டும், கிடக்கட்டும்! சிறையிலேயே அடைந்து கிடக்கட்டும்; நன்றாகப் புத்தி வரட்டும்; எல்லாருக்கும் விடுதலை கிடைக்கும்போது அவளுக்கும் விடுதலை கிடைத்து வெளி வரட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

எப்படியிருந்தாலும் சீதாவுக்கு இன்னொரு 'சான்ஸ்' கொடுத்துப் பார்க்க வேண்டியதுதான்! அவளுடன் இல்லறம் நடத்த இன்னொரு பிரயத்தனம் செய்ய வேண்டியதுதான்! — இவ்விதம் சௌந்தரராகவன் மனமுவந்து தயவு செய்ய எண்ணியதற்குச் சில முக்கியமான காரணங்கள் இருந்தன. ஒன்று; சீதாவுடன் தான் இல்வாழ்க்கை நடத்தாவிட்டால் பாமா என்கிற பிசாசின் வாயில் விழவேண்டியிருக்கும்! அது இருப்புச் சட்டியிலிருந்து அடுப்பு நெருப்பில் விழுவதுபோலாகும். இரண்டாவது காரணம், குழந்தை வஸந்தி. சீமைக்குப் புறப்படுமுன் ராகவன் சென்னைக்குத் தன் மகளைப் பார்க்கப் போயிருந்தான். அப்போது குழந்தை தன் கபடமற்ற கண்களினால் தந்தையை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, ''அப்பா! அம்மாவை அழைத்து வரவில்லையா?'' என்று கேட்டாள். அந்தக் கேள்வியில் தொனித்த ஆதங்கத்தை ராகவனால் மறக்கவே முடியவில்லை. குழந்தையை முன்னிட்டாவது மறுபடியும் ஒரு தடவை குடித்தனம் நடத்திப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்

ஷீலாவின் நான்கு விருப்பங்கள்



பத்திரிகை நிருபர்களுக்கான ஒரு விருந்தின்போது, ஷீலா மிகுந்த அழகுடன் காட்சிதந்து எல்லோருடனும் அளவளாவிக் கொண்டிருந்தார். அவர் விருப்பங்களில் சிலவற்றைப் பற்றிக் கேட்ட பொழுது கலகலவென்று நகைத்தார்.

'ஓ! என் விருப்பங்கள் ஏராளமானவை: செம்மீன் படத்தில் நடித்த அனைவரையும் நான் விரும்புகிறேன்.'

'குழந்தைப் பருவத்தில் நான் விளையாடிய பொம்மைகள் எனக்கு விருப்பமானவை.'

உங்களுக்கு விருப்பமான நிறம் எது ஷீலா?

'இள நீலம். பளிச்சென்ற பகல் நேரத்து வானத்தைப்போன்று!'

உங்களுக்குப் பிடித்தமான அழகு சாதனம் ஏதேனும் உண்டா?

'ஏன் கிடையாது? நான் எப்போதும் லக்ஸ் உபயோகிக்கிறேன்.'

'லக்ஸினுள் மிருதுவான, கவர்ச்சியூட்டும் தன்மை அடங்கியுள்ளது. எல்லோரும் லக்ஸ் உபயோகித்துப் பார்க்க வேண்டும்'





இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு

இட்டலி,
சாம்பார்,
மற்றும்
விம்க்ரான்

முட்டைகள்,
டோஸ்ட்,
பழச்சாறு மற்றும்
விம்க்ரான்

சப்பாத்தி,
பால் மற்றும்
விம்க்ரான்

சொஜ்ஜி
தேநீர்
மற்றும்
விம்க்ரான்



காலைச் சிற்றுண்டி நேரம்

விம்க்ரான்

சாப்பிடும் நேரம்

Shilpi-HPMA 47A/72 Tam

நீங்கள் உண்ணும் காலைச் சிற்றுண்டி, பகலுணவு அல்லது இரவுணவு எதுவாக இருப்பினும் உங்கள் உடலுக்குத் தேவையான எல்லா வைட்டமின்களையும் தாதுப் பொருள்களையும், அந்த உணவு தருமென்று கூற முடியாது. ஆகையால் அவற்றை உத்தியுடன் பெறுவதற்கு நாள்தோறும் காலைச் சிற்றுண்டியின்போது ஒரு விம்க்ரான் மாத்திரை சாப்பிடுங்கள்.


சிற்றுண்டி சமயம் நீங்கள் சாப்பிடும் ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுவதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது. விம்க்ரானில் 11 அத்தியாவசிய வைட்டமின்களும், 8 இன்றியமையாத தாதுப் பொருள்களும் அடங்கியுள்ளன. எனவே நீங்களும் உங்கள் குடும்பத் தினரும் திட ஆரோக்கியத்துடன் சுறுசுறுப்பாகத் திகழ தினமும் விம்க்ரான் சாப்பிடுங்கள்— ஒரே ஒரு விம்க்ரான்!



விம்க்ரான்®

11 வைட்டமின்கள் + 8 மினரல்கள் அடங்கியது.

**ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை
உங்களை நாள் முழுதும்
சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது**



SQUIBB®

SARABHAI
CHEMICALS

இருந்தான். மூன்றாவதாக இன்னொரு காரணமும் இருந்தது. அது கொஞ்சம் விசித்திரமான காரணந்தான்.

ராகவன் புது டில்லியை விட்டுக் கிளம்புவதற்கு முன்னால் ஒரு நாள் இரவு பத்து மணிக்கு வீட்டுக்குள் திடீரென்று ஒரு ஸ்திரீ வந்தாள். அவளுடைய தோற்றம் அச்சத்தை அளித்தது. அதை விட அவள் பேச்சு பயங்கரமாயிருந்தது. ''நான் யார் தெரியுமா?'' என்று கேட்டாள். ''தெரியாது!'' என்றான் ராகவன். ''உன் மனைவி சீதாவின் தாயார் நான்!'' என்றாள் அந்த ஸ்திரீ. ராகவன் சிரித்துக் கொண்டே, ''சீதாவுக்கு எத்தனை தாயார்?'' என்று கேட்டான். ''சிரிக்காதே! உன் சாமர்த்தியம் உன்னோடு இருக்கட்டும். சீதா என்னுடைய மகள். வயிற்றில் பெற்ற மகள் அல்ல; ஆனாலும் அதை விட அதிகம். உன் மனைவி ஒரு ரத்தின ஹாரம் போட்டுக் கொண்டிருந்தாளே? அது இருக்கிறதா? அல்லது விற்றுச் சாப்பிட்டு விட்டாயா?'' என்று கேட்டாள். ராகவன் சிறிது வியப்பும் அச்சமும் அடைந்தான். ஆயினும் வெளிக்கு அதைரியத்தைக் காட்டிக் கொள்ளாமல், ''நீ எதற்காகக் கேட்கிறாய்? நீ யார்? உன் பெயர் என்ன?'' என்று அதட்டிக் கேட்டான். ''சொல்கிறேன், கேள். நான் உன் மாமியார்; என் பெயர் ரஸியா பேகம்; அந்த ரத்தின ஹாரத்தை நான் சீதாவுக்குக் கொடுத்தேன். அதனாலேதான் கேட்கிறேன். அது போனால் போகட்டும். சீதாவை நீ கஷ்டப்படுத்துகிறாய் என்று எனக்குத் தெரியும். உன்னிடமிருந்து தொல்லைப் படுவதைக் காட்டிலும் சிறையிலிருப்பது மேல் என்று எண்ணி அவள் சிறைக்குப் போயிருக்கிறாள். ஒரு நாள் வெளியில் வருவாள். அப்போது அவளை நீ சரியாக நடத்திப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னை இந்தக் கத்தியால் ஒரே குத்தாகக் குத்திக் கொன்று விடுவேன்!'' என்று சொல்லி ஒரு கத்தியை எடுத்துக் காட்டினாள். ராகவன் இப்போது உண்மையாகவே பயந்து நடுங்கிப் போனான். அவனால் வாயைத் திறக்கவே முடியவில்லை. சட்டென்று ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. 'ரஜனிபூர் பைத்தியம்' என்று ஒரு ஸ்திரீ ரஜனிபூர் ராஜாவைக் கொல்லப் பார்த்தாள் என்றும் அவன் டில்லியில் திரிந்துகொண்டிருந்தான் என்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான். ''நீ ரஜனிபூர்.........'' என்று தயக்கத்துடன் அவன் கேட்க ஆரம்பித்தவுடனே, ''ஆமாம்; நான் ரஜனிபூர் மகாராணிதான்! என் அருமை மகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்! இல்லாவிட்டால் உன்னை நிச்சயமாய்க் குத்திக் கொன்று விடுவேன்!'' என்று சொல்லிவிட்டு அந்த ஸ்திரீ போய் விட்டாள்.

இந்தச் சம்பவம் கொஞ்ச நாள் வரையில் ராகவனுடைய மனத்தில் இடைவிடாமல் குடிகொண்டிருந்தது. ரஜனிபூர் பைத்தியம் என்பது யார் என்றும், அவளுக்கும் தன் மனைவி சீதாவுக்கும் என்ன சம்பந்தம் என்றும் அறிந்து கொள்ளப் பெரிதும் ஆவலாயிருந்தது. வேறு வழியில் இதைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை. சீதாவைக் கேட்டுத் தெரிந்து கொண்டால்தான் உண்டு. நாளடைவில் ரஸியா பேகத்தின் வார்த்தைகளின் வேகம் மறைந்து விட்டாலும் இன்னமும் உண்மையை அறிந்து கொள்ளும் ஆவல் ராகவனுடைய மனத்தில் இருக்கத்தான் இருந்தது. அதற்காகவாவது சீதாவை மறுபடியும் கூட்டி வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும்....

கடற்காற்று சுகமாக அடித்துக் கொண்டிருந்தது. கடல் அலைகளின் ஓசை பின்னணி சங்கீதத்தைப் போலக் கேட்டுக் கொண்டிருந்தது. ராகவனுக்குக் கண்களைச் சுற்றிக்கொண்டு வந்தது. தன்னை அறியாமல் சாய்மான நாற்காலியில் படுத்த வண்ணம் அவன் தூங்கிப் போனான்.

அந்தப் பகற் தூக்கத்தில் ராகவன் ஒரு கனவு கண்டான். ஒரு பெரிய அரண்மனை. அதில் தர்பார் மண்டபம். பளிங்கு மேடையில் முத்து விதானத்தின் கீழ் அமைந்த நவரத்தின சிம்மாச

மின் வெட்டு — சிரிப்பை வெட்டாதே! —1



காதலி: அத்தான், என்னைத் தொடும்போழுது மின்சாரம் தாக்கியது போலிருந்ததா?

காதலன்: அப்படியெல்லாமில்லை! இப்போது மின்சார வெட்டு என்பதை மறந்து விட்டாயா, கண்ணே?

ணத்தில் ராணி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். ''ரஜனிபூர் மகாராணிக்கு ஜே!'' என்ற கோஷம் எங்கிருந்தோ கேட்டுக் கொண்டிருந்தது. முதலில் தூரத்தில் நின்று பார்த்த ராகவன் அந்தச் சிம்மாசனத்தை நெருங்கிப் போனான். பத்து அடி தூரத்தில் சென்றதும் மகாராணி ராகவனைப் பார்த்துப் புன்னகை புரிந்து ''நான் யார் தெரிகிறதா?'' என்று கேட்டாள். ''ரஜனிப்பூர் ராணி!'' என்றான் ராகவன். ''நன்றாகப் பார்!'' என்றாள் ராணி. உற்றுப் பார்த்தபோது ராகவனுடைய உள்ளத்தைக் கவர்ந்த வேறொரு முகமாகத் தெரிந்தது. ''ஆ! தாரிணி! நீயா?'' என்று கேட்டான் ராகவன். ''இன்னும் நன்றாய்ப் பார்! பார்த்துச் சொல்லு!'' என்றாள் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த மாது. ராகவன் பார்த்தான். இப்போது சீதாவின் முகமாகத் தெரிந்தது. ''ஆ! சீதா! நீதானா? தாரிணி மாதிரி எப்போது மாறினாய்?'' என்று கேட்டான். ''நான் மாறவில்லை, உங்கள் கண்களும் மனமும் மாறிவிட்டன!'' என்றாள் சீதா. ''நான் உன்னைக் கஷ்டப்படுத்தியதை எல்லாம் மன்னித்துவிடு!'' என்றான் ராகவன். ''நான் உங்களைக் கஷ்டப்படுத்தியதற்கும் நீங்கள் என்னைக் கஷ்டப்படுத்தியதற்கும் சரியாய்ப் போயிற்று. ஆகையால் மன்னிப்பதற்கு ஒன்றும் இல்லை. குழந்தை வஸந்தி எங்கே?'' என்று சிம்மாசனத்தில் கிரீடம் அணிந்து வீற்றிருந்த சீதா கேட்டாள். ''ஆகா! வஸந்தியை மறந்துவிட்டேனே? இதோ போய் அழைத்து வருகிறேன்!'' என்று ராகவன் ஓடத் தொடங்கினான். வஸந்தியை எங்கேயோ விட்டு விட்டு வந்ததாக அவனுக்கு ஞாபகம் இருந்தது. ஆனால் எங்கே என்பது நினைவில் இல்லை. ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டே ஓடினான். கால்கள் தடுமாறின. தலை சுற்றியது. ஒரு பெரும் பிரயத்தனம் செய்து ''ஐயோ வஸந்தி'' என்று கூச்சலிட்டான்.

யாரோ தோளைப் பிடித்துக் குலுக்கினார்கள். உடனே விழிப்பு வந்துவிட்டது. கனவு மயக்கத்தில் வஸந்திதான் என்று நினைத்துக் கொண்டு, ''ஆ! என் கண்மணி! வந்துவிட்டாயா!'' என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்த்தான்.

அவனுடைய தோளைப் பிடித்துக் குலுக்கியவள் வஸந்தி அல்லவென்றும் பாமா என்றும் தெரிந்து கொண்டான். தன் மனத்துக்குள்ளே, ''அட பிசாசே! சற்று நேரம் என்னைச் சும்மாவிடமாட்டாய்?'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான்.

அந்தக் கனவு கண்டது முதல் ராகவனுக்கு வஸந்தியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அளவின்றிப் பெருகிற்று. குழந்தையை இனிமேல் என்றைக்கும் விட்டுப் பிரிவதில்லை என்று அடிக்கடி தீர்மானித்துக் கொண்டான்.

பம்பாய்த் துறைமுகத்தில் கப்பலிலிருந்து கீழே இறங்கியவுடனே ஆகாய விமானத்தில் ஏறிச் சென்னைப் பட்டணத்துக்குச் சென்றான். பத்மாபுரத்தில் தன் தந்தை பத்மலோசன சாஸ்திரிகளின் வீட்டை அடைந்தான். வீட்டு வாசலில் வண்டி ஒன்று காத்துக் கொண்டிருந்தது. 'யாராவது ஊருக்குப்போகிறார்களா?' என்று மனத்தில் நினைத்துக் கொண்டான். டாக்ஸி வண்டியின் சத்தத்தைக் கேட்டு அவனுடைய தாயார் வெளியில் வந்து பார்த்தாள். மகனை ஆவலுடன் வரவேற்றாள். ''ஏன்டாப்பா! வருகிறதாகக் கடிதம்கூட எழுதவில்லையே!'' என்று ஆவலாகச் சொன்னாள். ராகவன் அதைப் பொருட்படுத்தாமல், ''அம்மா! யாராவது ஊருக்குப் புறப்படுகிறார்களா?'' என்று கேட்டான். ''ஆமாண்டா, அப்பா! நீ வருகிறது தெரியாதோ, இல்லையோ? சூரியா வந்திருக்கிறான். குழந்தை வஸந்தியை அழைத்துக் கொண்டு புறப்படுவதற்கிருந்தான். அதற்குள் நல்ல வேளையாக நீ வந்துவிட்டாய்!'' என்றாள்.

''குழந்தையை எங்கே அழைத்துப் போவதாகச் சொன்னான்?''

''தேவபட்டணத்துக்குத் தான்! அங்கே அவள் அம்மா இருக்கிறாள் அல்லவா?''

''ஓகோ! அப்படியா?'' என்று கர்ஜித்தான் ராகவன்.

காமாட்சி அம்மாள், ''நீ வந்துவிட்டபடியால் இன்றைக்குக் குழந்தை போவதற்கில்லை!'' என்றாள்.

''இன்றைக்கும் இல்லை; என்றைக்கும் இல்லை!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனான்.

சூரியாவுடன் ஊருக்குப் புறப்படுவதற்குத் தயாராக நின்ற வஸந்தி அப்பாவைப் பார்த்ததும் ஒரே ஓட்டமாக ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டாள்.

ராகவன் கால் சட்டைப் பையிலிருந்து கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சூரியாவை நோக்கிக் குறி பார்த்து, ''அடே காலிப் பயலே! உன்னைப் போன்ற அயோக்கியசிகாமணியைக் கொன்றால் துளிக்கூட தோஷமில்லை!'' என்று கர்ஜித்தான்.

சூரியா ஒரு நிமிஷம் திகைத்துப் போய் நின்றான். (தொடரும்)

தொழிலாளர் வர்க்கத்துடன் தொடர்பு

ஆல்பர்ட்டோ மொராவியா

யுத்தத்தின் கொடுமை ஒருபுறமிருக்க அதன் உடன் விளைவுகளாக மக்களின் மனப்பான்மையில் ஏற்படுகிற மாறுதல்கள் முன்னதைவிடக் கொடுமையானவை. விருப்பமின்றியே மக்கள் மாக்களாகும் விதத்தை 1944ல் எழுதப்பட்ட இந்தச் சிறுகதை உருக்கமாகச் சித்திரிக்கிறது.

கார் நின்றது: அவர்கள் வெளியேறினார்கள். பாறைகள் மிகுந்த, சாகுபடி செய்யப்படாத, சுமாரான அளவுடைய இரு குன்றுகள் இணையுமிடத்தில் ஏற்பட்டிருந்த குறுகலான கணவாய்க்கு முன்னும் சாலை இந்த இடத்தில் சென்றது. மறு பக்கத்தில் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்ட சமவெளிப் பகுதி கண்ணுக்கெட்டிய தூரம் நீண்டு கிடந்தது. சாம்பல் நிறத்தில் அகன்று விரிந்து கிடக்கும் சிலீரென்ற நீரும், கொத்துக் கொத்தான புதர்களும், கும்பல் கும்பலான மரங்களும் மாறி மாறித் தோற்ற மளித்தன. இங்கு மங்குமாகப் பாழடைந்த வீடுகள் தண்ணீர் மட்டத்துக்கு மேலே எழும்பின. அவற்றின் இடிபாடடைந்த சுவர்களும் ஆகாயத்தை நிரப்பிக் கொண்ட ஜன்னல்களும் நீரில் சோர்வு புகட்டும் விதமாகப் பிரதிபலித்தன. கணவாயை அடையும் வழியும் வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. ஆனால் அதற்குப் பின்னும் குன்றுகள் இணையும் இடத்தில், சரிவின் பேர்பாதி உயரத்தில் புகை எழுந்து மேலே செல்லாது காற்றில் தொங்கியது. முதல் பார்வைக்குக் கரி எரிக்கும் பாண்டமோ என்று தோன்றியது. இன்னும் சற்று உற்றுக் கவனித்தால் ஒரு குடிசையை இனம் கண்டு கொள்ள முடிந்தது. கறுப்பேறிப் போன வைக்கோலினாலான தாழ்வான கூரையுடன் கூடிய குடிசை. சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. குளிர்ந்த கருமையான அடர்ந்த மேகங்கள் வானை மூடின. பாரிசவாயு கண்டதுபோல் காற்று செயலற்றிருந்தது. வெள்ளத்துக்கும் செங்குத்தான கணவாய்க்குமிடையே கறுப்பு ரிப்பன் போன்ற தார்ச் சாலை ஆங்கில எழுத்தான 'எஸ்' வடிவில் காட்சி தந்தது. பாம்பு ஒன்று தன் சக்தி அனைத்தையும் பயன்படுத்தித் தப்பிக்க முயன்று நெளிவது போல் இது தோன்றியது.

'' அதோ,. மேலே இருக்கிற அந்தக் குடிசைக்குப் போக வேண்டியதுதான் நாம்'' என்றான் அந்த இளைஞன், குன்றுச் சரிவில் நிலவிய கருநீலப் புகையைச் சுட்டிக்காட்டி. '' ஒரு பக்கெட்டில் கொஞ்சம் தண்ணீர் பெற்று வரலாம் அவர்களிடம்'' என்றான்.

அந்த யுவதி அலுப்புடன் முகத்தைச் சுளித்தாள். உருண்டை முகம். மனம்போன போக்கில் செல்பவள் என்பதை உணர்த்தும் அதரங்கள். சிறிய எடுப்பான வளைந்த மூக்கு. பெரிய உணர்ச்சியற்ற, பிரதானமாகத் தெரிகிற கண்கள். உயரமானவள்.



பெரிய கட்டங்களுடன் கூடிய 'கோட்டு' பிடிப்பாக இராது போனாலும் தாராளமான அளவினைக் கொண்டதான அவளது மார்பகத்தையும் இடைக்குக் கீழே செழிப்பான பகுதியையும் மிருதுவான முறையில் வரிவடிவமாகக் காட்டியது. அவள் தொப்பி அணிந்திருக்கவில்லை. நீண்ட பழுப்பு நிறக் கேசம் எடுப்பான பிடரி மயிர்போல் சுருள்சுருளாக அவள் நெற்றியிலும் கன்னங்களிலும் விழுந்தது. ''மேலே அங்கு ஏறிச் செல்வதைத் தவிர, தண்ணீர் பெற்று வர வேறு வழியே கிடையாதா ?'' என்று அவள் அலுப்புடன் கேட்டாள்.

''வேறு என்ன வழி?'' என்று அவள் தோழன் கேட்டான். அவனுக்கு இருபது வயதுக்கு மேல் இராது. ஆயினும் தனது மெலிந்த முகத்தில் பெரிதாகத் தோன்றிய அங்க அமைப்புக்களால் — செழிப்புடன் வளர்ந்திருந்த கரிய மீசை, மூக்கால் பேசுவது போல் தொனித்த உடைந்த குரல் முதலியவற்றால் — அவன் பொறுமை இழந்து பெரியவனான ஆண் மகனாகத் தன்னைக் காட்டிக் கொண்டான். அவனும் ஓய்வு நாட்களில் அணியத் தக்க கட்டம் போட்ட ஆடைதான் அணிந்திருந்தான். காற்றுக்குக் காப்பாகத் தோலினாலான சட்டையும் தொளதொளவென்றிருக்கும் 'ப்ளஸ் ஃபோர்' பாணி கால்சராயும் கனமான காலுறைகளும் கண்களுக்கு மேலாக இழுத்து இறக்கப்பட்ட தொப்பியும் அணிந்திருந்தான்.

'எனக்குஎன்ன தெரியும்?' என்பது போல் அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். ''எப்படியாவது நீதான் சமாளிக்க வேண்டும்'' என்றாள்.

''எப்படி ? என் கைகளாலேயா?'' என்று கேட்டான் அவன் கேலியாக. அவள் ஒன்றும் கூறாமல் சுற்றுமுற்றும் பார்த்தாள்; அதிருப்தி யுற்றவளாகக் காணப்பட்டாள். ''எனக்குத் தெரியும், இதெல்லாம் எப்படி முடியும் என்று'' என்றான் அவன் திடுமென்று. ''இப்படி இடையிடையே நிறுத்துவதெல்லாம் ஒரே விஷயத்துக்குத்தான். ஏதாவது ஒரு காரணத்தைச் சாக்கிட்டுக்கொண்டு நாம் ஒரு குடியானவன் வீட்டுக்கு இறங்கிச் செல்வோம். அப்புறம். பாதி வழியில் நீ என்னை முத்தமிட முயல்வாய்!''

அவள் சகா 'இல்லை' என்று உணர்த்துவது போல் தலையசைத்தான். ஆயினும் அவனது குற்றச்சாட்டு புகழ்ச்சியாரமாக மாறி அவனை மகிழ்வித்தது!

இல்லாத கண்டிப்பை வரவழைத்துக் கொண்டு அவன் பேசினான்: ''ஆர்னெல்லா! வா சொல்கிறேன். இந்த முறை நாம் நிஜமாகவே தண்ணீர் கொண்டு



வரத்தான் போகிறோம் என்று சத்தியம் பண்ணுகிறேன். எப்படியானாலும்,'' — அவன் தன் மணிக்கட்டில் அணிந்திருந்த பெரிய தங்கக் கடிகாரத்தைப் பார்த்தான், — ''இரவுச் சாப்பாட்டுக்கு நகரில் இருக்க வேண்டுமென்றால் நாம் அதிகமாக நேரத்தை வீண் அடிப்பதற்கில்லை. சட்டென்று ஒரு முடிவுக்கு வா. உனக்கு விருப்பமானால் நீ இங்கேயே எனக்காகக் காத்திருக்கலாம்.''

''ஆமாம்! தனியாக இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன்'' என்று அவள் சண்டை போடும் குரலில் கூறினாள். ''அப்புறம் சிப்பாய்கள் இந்தப் பக்கமாக லாரிகளில் வருவார்கள். இன்று காலையில் செய்தது போல் என்னைத் தொந்தரவு பண்ணுவார்கள்.... இதற்கிடையில் நீ குடியானவர்களின் வாழ்க்கை பற்றிய உன் ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிரு! அவர்களோடு வளவளவென்று பேச ஆரம்பித்து விட்டால் உனக்கு நாளொருத்தி இருப்பதே மறந்து விடும்!''

''ஆகக்கூடி விஷயம் என்னவென்றால்...'' புரியாமல் தவிப்பது போன்ற அவன் குரல் நடிப்பாகத்தானிருக்க வேண்டும். ஏனெனில் பார்ப்பதற்கு அவன் மிகவும் தன்னம்பிக்கையோடு காணப்பட்டான். ''சிப்பாய்கள் வந்து தொந்தரவுபடுத்துவார்கள் என்ற பயம் காரணமாக உனக்கு இங்கே காத்திருக்க விருப்பமில்லை; நான் உன்னை முத்த மிடுவேன் என்ற பயத்தால் என்னோடு வரவும் விருப்பமில்லை. ஆக, உனக்கு என்ன**தான்** வேண்டும் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''நான் வருகிறேன்'' — திடுமென்று ஒரு முடிவுக்கு வந்தவளாகக் கூறிய அவள் தனக்கே உரிய குண இயல்புடன் குறை சொல்வது போன்று தொனித்துக் கொஞ்சினாள்: ''ஆனால் நீ சமர்த்தாய் இருப்பதாகச் சத்தியம் செய்ய வேண்டும் என்னிடம்!''

''சத்தியமாகச் சமர்த்தா யிருக்கிறேன்.''

''அப்படியானால் போகலாம் வா!''

கார் கதவைச் சாத்திவிட்டு, அவன் குடிசைக்கு அழைத்துச் சென்ற பாதையில் மேலே ஏறத் தொடங்கினான். கற்கள்மீது தட்டுத் தடுமாறி நடந்தவாறு யுவதி அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவன் சொன்னான்: ''என் கவலையெல்லாம் இதுதான். வழக்கம் போல் மணிக் கணக்கில் அங்கு நின்று நீ தயாரித்துள்ள கேள்விகளைக் குடியானவர்களை நோக்கி முடிவில்லாமல் கேட்டுக் கொண்டே இருக்கக் கூடாதே என்பதுதான். எனக்குக் குடியானவர்களைச் சகித்துக் கொள்ளவே முடியாது!''

''ஆனால் அவர்களிடம் பேசித்தான் ஆக வேண்டும். அவர்களிடம் ஒருவன் பேச ஆரம்பித்தால் எத்தனையோ சுவையான விஷயங்கள் தெரிய வருகின்றன.''

''உனக்குச் சுவையானதாக இருக்கலாம்.''

அவன் அலட்சியமாக, ஓரளவு கிண்டலாகக் கூடக் கேட்டான்: ''உனக்குத் தெரியாதா? உழைப்பாளி வர்க்கத்துடன் ஒருவன் அவசியம் தொடர்பு கொள்ளத்தான் வேண்டுமென்பது உனக்குத் தெரியவே தெரியாதா?''

அவர்கள் பிரதானசாலைக்கும் குடிசைக்கும் இடையே பாதிதூரம் வந்துவிட்டிருந்தார்கள்.

''எப்படிப்பட்ட மனச் சோர்வு தரும் இடம்!'' என்று சொன்னாள் யுவதி, சுற்றுமுற்றும் பார்த்து உடல் சிலிர்த்தபடியே.

''பரவாயில்லை'' என்றான் அவள் தோழன். ''எப்படியோ இங்கே வந்தாகி விட்டதல்லவா?'' இப்படிக் கூறியபடியே அவன் திரும்பி, அவள் இடையைத் தன் கரங்களால் சுற்றி வளைத்துத் தன்பால் அவளை இழுத்தான்.

''பார்த்தாயா!... இந்தக் காரியத்தைச் செய்ய மாட்டேன் என்று சத்தியம் செய்தாயே நீ'' என்று சத்தம் போட்டாள் அவள்.

அவர்கள் குடிசையை நோக்கி மேலே நடந்தார்கள்.

முன்னால் நடந்த இளைஞன் டம்பமான விதத்தில் தன் இடையை ஆட்டி ஆட்டி நடந்தான். அதனால் யுவதி திடுமென்று தன் கோபம் உசுப்பி விடப்பட்டது போல் உணர்ந்தாள். ''நான் இப்போது திரும்பி நடந்து விடுவதுதான் உனக்குச் சரியான தண்டனை'' என்று கூறி நின்றவள், தரையைக் காலால் உதைத்தாள்.

''திரும்பிப் போயேன், பார்க்கலாம்!''

''அதைத்தான் செய்யப் போகிறேன்!''

அவள் திரும்பிப் பிரதான சாலையை நோக்கித் தடுமாறியபடி நடக்க ஆரம்பித்தாள். இளைஞன் அவளைப் பின்தொடர்ந்து நெருங்கினான். கரத்தைப் பற்றினான். ரொம்பக் கவனத்துடன் அவளை நோக்குவது போல் கேலியாக உற்றுப் பார்த்துக் கூறினான்: ''ஆர்னெல்லா! நிஜமாகவே நீ எப்போது பார்த்தாலும் இவ்வளவு சஞ்சல புத்தியுடையவளாகத்தான் இருக்க வேண்டுமா?''

''அப்படியானால் சற்று முன் என்னை எதற்காக முத்தமிட்டாய்?'' என்று அவள் கேட்டாளே ஒழிய ஏற்கனவே நின்றுவிட்டிருந்தாள்.

சீக்கிரமே அவர்கள் குடிசைக்கு வந்து சேர்ந்தார்கள். அதன் அடிப்பாகம் வட்ட வடிவமாக, இயந்திரத்தால் செதுக்கப்படாத கற்களால் அமைக்கப்பட்டிருந்தது. கறுப்பேறிய வைக்கோல் கூரை, கூர் உருளை வடிவத்திலும் அடிவாரம் கிட்டத்தட்டத் தரையைத் தொடுமளவுக்கு நீண்டும் இருந்தது. மற்றவற்றைவிடப் பெரிதான, ஒற்றைக் கல்லினாலான நிலைக்குக் கீழே நசுக்கப்பட்டது போன்ற சிறிய தாழ்வான கதவு. இதையெல்லாம் பார்த்தபோது ஏதோ மிருகங்கள் வாழக் கட்டித் தரப்பட்ட கொட்டிலை நினைவுபடுத்தியதே ஒழிய மனிதர்கள் வாழக் கூடிய இடமாகத் தோன்றவில்லை.

யுவதி சுற்று முற்றும் அருவருப்புடன் பார்த்தபடியே கேட்டாள்: ''இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம்?''

''நாம் கதவைத் தட்டுவோம்; வீட்டு எஜமானன் நம்மை வரவேற்பான்'' என்று அவள் தோழன் திருப்தியுடன் பதிலளித்தான். வீட்டின் கதவருகே சென்று முஷ்டியால் தட்டினான்.

உடனே கதவின் தாழ்ப்பாள் உள்ளே திறக்கப்பட்டது. பின்னர் அந்தக் கதவு தயங்கிக் குலுங்கி முழுமையாகத் திறந்து கொண்டது. ஆனால் யாரும் தென்படவில்லை. ''ஹலோ'' என்று இளைஞன் பொறுமை இழந்

தவனுகக் கத்தினன். குனிந்து குடிசைக் குள்ளே ஊடுருவிப் பார்த்தான். ''யார் அங்கே? வீட்டில் யாருமே இல்லையா?''

''உள்ளே வாருங்கள் ஐயா! வாருங்கள், தயவுசெய்து உள்ளே வாருங்கள்'' என்று ஒரு கிரீச்சிடும் உடைந்த குரல்தான் பதிலளித்தது எனினும் மகிழ்ச்சி தொனித்தது அதில்.

''வா, உள்ளே போகலாம்'' என்றான் இளைஞன். ''உள்ளே செல்வதா? இதனுள்ளா?'' என்று அவள் பயங்கரமடைந்து கேட்டாள். ''எதற்கு அனாவசியமான ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாய்? பின்னோடு உள்ளே வா'' என்று அவன் மீண்டும் கூறி அவள் கரத்தைப் பற்றினான். யுவதி அவன்சொற்படி கேட்டாள்.

தலையையும் தோள்களையும் வளைத்துக் குனிந்து குடிசைக்குள் சென்றான். அவன் பின்னாலேயே அவன் தோழன்வந்தாள். முதுகைக் கதவுக்குக் காட்டியபடி ஒரு விநாடி அவர்கள் நேராக நின்றார்கள். ஓர் இரும்பு அடுப்புக்குக் கீழே தரையில் நெருப்பு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. அடுப்பு மீது ஒரு பெரிய கரிய பானை இருந்தது. அருவருப்பும் சங்கடமும் மேலிட, அந்தப் பெண், பானையைச் சுற்றிலும் பல முகங்கள் ஜ்வாலையில் சமமின்றி ஒளிர்வதைக் கண்டாள். அவை குழந்தைகளின் முகங்கள். ஆனால் அவை வீங்கியும் சொரசொரப்பாகவும் இருந்தன. சிறிய கண்கள். கலைந்து தொங்கிய கேசக் கற்றைகள் முறுகலாகக் கட்டப்பட்டவை போல் காட்சியளித்தன. வந்திருந்தவர்களை மௌனமாகப் பார்த்தவாறு தன்னிடம் ஒண்டிக் கொண்டிருந்த குழந்தைகளுக்கிடையில் தாயார் சற்று முன்னோக்கிச் சாய்ந்து, நீண்ட பிடியுள்ள கரண்டியினை இரு கரங்களாலும் பற்றி, பானையைக் கிளறிக் கொண்டிருந்தாள். யுவதி அவள் பக்கமாகப் பார்வையைச் செலுத்தியபோது இலேசாக நடுக்கமுற்றாள். ஜ்வாலை கூடிக்குறைந்தபோது நெருப்பின் சிவந்த ஒளியில் அவள் முகம் விட்டு விட்டுப் பிரகாசித்ததானது அவளுக்கு ஒரு மாயத் தோற்றத்தை அளித்தது — ஒரு சூனியக்காரி தன் கலசத்தைச் சுருசுருப்புடன் கிளறிக் கொண்டிருப்பது போல். அவள் கிரீச்சிடும் குரலில் மாலை வணக்கம் தெரிவித்தாள்.

''நீதான் இந்த வீட்டின் எஜமானியா?'' என்று இளைஞன் கேட்டான். அவனுக்கும் அவளது தோற்றம் மனக் கலக்கத்தை அளிக்கத்தான் செய்தது. ஆனால் அதைக் காண்பித்துக் கொள்ள அவன் விரும்பவில்லை.

'' ஜெர்மானியர்கள் எங்கள் வீட்டை அழித்து விட்டார்கள். எங்கள் பண்ணையை வெள்ளத்தில் மூழ்குமாறு செய்தார்கள். எங்கள் ஆடு மாடுகளைக் கொண்டுபோய் விட்டார்கள். எங்கள் உடைமைகளைத் திருடிக்கொண்டார்கள். ஆடுகளை நாங்கள் அடைத்து வைக்கும் கொட்டில் இது.'' முரட்டுத்தனமான ஒரு குதூகலத்துடன் உரக்கப் பேசினாள் அம்மாது.

''இப்போது எப்படிக் காலத்தை ஓட்டுகிறீர்கள்?'' என்று இளைஞன் கேட்டான். யுவதி, முடிவில்லாத அவனுடைய கேள்விக் கணைகளின் தொடக்கக் கட்டம் இது என



தியாகராயநகரில் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரின் இராமாயணப் பிரவசனப் பூர்த்தி. தீக்ஷிதர் அவர்கள் தமக்கே உரித்தான பாணியில் ஒரே மூச்சில் இராமாயணம் முழுதும் பட்டாபிஷேககட்டம் வரை சொல்லி— நிறுத்தி — கலியுக வியாசர் என அழைத்து ராஜாஜியைப் பேசச் சொன்னார். ராஜாஜி வெகு நேரம் பேசுவார் என்று மிக்க ஆவலுடன் திரளான ஜனங்கள் எதிர்பார்த்தனர். ராஜாஜி, ''தரும வழியில் நடந்தால் க்ஷேமம் நிச்சயம். இது இராமாயணம். அதரும வழியில் நடந்தால் நாசம் நிச்சயம். இது மகாபாரதம். இந்த இரண்டு இதிகாசங்களும் தேசத்தின் இரு கண்கள். இதை நாம் தெரிந்து கொண்டால் தீக்ஷிதர் பிரவசனம் பயன்பெற்றதாகும்'' என்று சொல்லி முடித்துவிட்டார். இதைவிட ரத்தின சுருக்கமாக யாரால் சொல்ல முடியும்? — ராகவன்

பதை உணர்ந்துகொண்டாள். 'வழக்கம்போல் ஆரம்பித்து விட்டானே' என எண்ணி, தொல்லைக்குள்ளானவளாக முகத்தைச் சுளித்தாள். தன் முழங்கையால் அவன் கரத்தை இலேசாக இடித்தாள். அவனோ, 'என்னைச் சும்மா விடு' என்று கூறுபவன் போல் தலையசைத்தான். யுவதி, 'பகவானே!' என்பது போல் கண்களை மேல் நோக்கி உயர்த்தி நெடுமூச்சு விட்டாள்.

இதற்கிடையில், ''எப்படிச் சமாளிக்கிறோமா?'' என்று கேட்டுவிட்டு அந்த மாது, தொடர்ந்தாள்: ''எப்படிச் சமாளிப்பதென்றே எங்களுக்குத் தெரியவில்லை. என் கணவருக்கு மலேரியா; வேலை செய்ய முடியாது. குழந்தைகளுக்குத் துணி மணி ஏதுமில்லை. காலணிகளும் இல்லை. அரை நிர்வாணமாகத்தான் அவர்கள் அலைகிறார்கள்.'' அவள் குழந்தைகள் உடுத்தியிருந்த கந்தலையும் அவர்களின் ஜோடு அணியாத கரிய கால்களையும் சுட்டிக் காட்டினாள். ''வீட்டில் இருந்த மாவும் நேற்றோடு தீர்ந்து போயிற்று.... பாருங்கள்!'' அவள் எழுந்து குடிசையின் ஒரு மூலைக்குச் சென்று காலியான ஒருகோணியுடன் திரும்பி வந்தாள். அதை உதறிய போது வெள்ளைத் தூசு புகைபோல் எழுந்தது. ''எல்லாம் தீர்ந்து போயிற்று'' என்று அவள் திருப்தியுடன் கூறிக் கோணியை வீசி எறிந்தாள். பிறகு தனது சிரிக்கும் முகத்தை அந்த யுவதியின் பக்கமாக ஒரு வேகத்துடன் நீட்டி முன்னைவிட அதிகமான அர்த்தமற்ற குதூகலத்துடன் வெடித்துக் கேட்டாள்: ''எப்படிச் சமாளிப்போம்?'' கூச்சலிட்டாள்: ''பட்டினி கிடந்து சாவோம்!''

இப்போது உரையாடலால் முழுமையாக ஈர்க்கப்பட்டவனாக அந்த இளைஞன் கேட்டான்: ''இதோ ' பார்! அருகில் உள்ள

கிராமத்துக்குப் போய் உங்கள் பங்கீட்டுச் சீட்டைக் காட்டி ரேஷன் பெற முடியாதா?''

''அருகில் உள்ள கிராமம் குண்டுகளால் அழிந்து விட்டது'' என்று அந்த மாது பரபரப்படைந்து சத்தம் போட்டாள். ''மேலும் அங்கே உணவு கிடையாது. உணவுப் பங்கீடுச் சீட்டுகள்தாம் உள்ளன! சொற்ப அளவே உள்ள உணவும் பணம் கொடுத்து வாங்கக் கூடியவர்களுக்குத்தான் கிடைக்கும். எங்களிடம் பணம் இல்லையே ஐயா!''

ரொம்ப உற்சாகத்துடன் வழங்கப்பட்ட இந்தத் தகவல் துணுக்குகள் அந்த இளைஞனிடம் வேதனையுடன் கூடிய சஞ்சலத்தை ஏற்படுத்தியதாகத் தோன்றியது. இத்தகவல்கள் பொய்யாக இருப்பதையே அவன் விரும்புவான் என்பது தெளிவாகத் தெரிந்தது. ''ஆயினும் உன் குழந்தைகளைப் பார்த்தால் பட்டினி கிடப்பவை போல் இல்லையே? உன்னைப் பார்த்தாலும் அப்படித் தோன்றவில்லையே?'' என்று குறிப்பிட்டான் அவன். உண்மையில் அம்மாது ஓரளவு குண்டாகத்தான் காணப்பட்டாள்.

''என் குழந்தைகள் சாப்பாட்டுப் பொருள்களைக் கண்டுபிடிப்பதால்தான் நாங்கள் பட்டினி கிடக்காமல் இருக்கிறோம்'' என்று அம்மாது புதுப்பிக்கப்பட்ட குதூகலத்துடன் மொழிந்தாள்.

''அதை எப்படி அவர்கள் சாதிக்கிறார்கள்?''

''அவர்கள் திருடுகிறார்கள் ஐயா!'' முன்பு 'பட்டினி கிடந்து சாகிறோம்' என்று அவள் எத்தனை உற்சாகத்தோடு சொன்னாளோ, அதே அளவு உற்சாகத்துடன் இதையும் கூறினாள்!

''வா, போகலாம்!'' என்று யுவதி பீதியடைந்து முணுமுணுத்தாள். ஆனால் இளைஞன் தானும் கலக்கமுற்றிருந்தும்கூட அவளை லட்சியம் செய்யவேயில்லை.

''அவர்கள் என்னத்தைத் திருடுகிறார்கள்?'' என்ற அவன், இயல்பான ஆவல் குறுகுறுப்பு மட்டுமே தன் குரலில் தொனிக்குமாறு கவனித்துக்கொண்டான்.

''ஓ! எது சாத்தியமோ அது'' என்றாள் அம்மாது. ''ஆட்டுக் குட்டிகளைத் திருடுவார்கள். இரவில் வெளியே போய் ஆட்டுக் குட்டிகளைத் திருடுவார்கள்.''

''நீங்கள் கைதாக்கப் படுவீர்கள்!'' என்றான் இளைஞன் குரலில் திடுமென்று கடுமை தொனிக்க.

''எப்படி எங்களைக் கைது செய்ய முடியும்? சிப்பாய்கள் இப்போது இல்லை.'' அவள் உற்சாகம் உச்சக் கட்டத்தை அடைந்தது. ''மேலும் போலீஸ்காரர்களுக்கும் பசிக்குமே!'' அந்த இளைஞன் ஒரு செவிடு என்று முடிவு கட்டியவள் போல் அவள் கூச்சலிட்டாள்: ''இப்போதெல்லாம் எல்லாருக்குமே பசிக்கிறது! எல்லாருக்கும்!''

''ஆனால் திருடுவது கொடிய செயல்; குற்றம்'' என்று அவன் பிடிவாதமாக வற்புறுத்திக் கூறினான்.

''திருடுவது கொடிய செயல்தான்'' என்று அவள் கிட்டத்தட்டப் பிரியமாகவே சொன்னாள். ''ஆனால் பட்டினி கிடந்து சாவது அதைவிடக் கொடுமை ஐயா!''

''நிறுத்து! இதற்கு ஒரு முடிவு கட்டு! நாம் போகலாம்!'' என்றாள் யுவதி.


இளைஞனும் உரையாடலுக்கு முற்றுப் புள்ளி வைக்கத் தீர்மானித்தவனாக, ''எங்களுக்கு ஒரு பக்கெட் இரவல் தர முடியுமா என்றும் தண்ணீர் இழுத்துக் கொள்ள ஒரு கிணறு இருக்கும் இடத்தைக் காட்ட முடியுமா என்றும் கேட்கவே நாங்கள் வந்தோம்'' என்றான்.

''ஒரு பக்கெட் தண்ணீர்'' என்று சத்தம் போட்டாள் அவள். ''பேஷாக... உடனே... தண்ணீரை என்ன, காசு கொடுத்தா வாங்குறோம்?'' அவள் எழுந்து குடிசையின் பின்புறம் சென்று ஒரு பக்கெட்டுடன் திரும்பினாள். ''நீங்கள் வெளியே போய்த் தண்ணீர் இழுத்துக் கொள்ள வேண்டும்'' என்றாள் இன்னமும் உரத்த குரலில் பேசியபடியே. ''கிணறு ரொம்பத் தூரம். ஆனால் என் கணவர் கிணற்றடியில் இருக்கிறார். அவர் உங்களுக்கு உதவுவார். குடிசையின் பின்புறமுள்ள பாதையில் செல்லுங்கள். இந்த இளம் சீமாட்டி இங்கேயே காத்திருப்பது நல்லது.... கரடு முரடான பாதை... இவள் இங்கேயே நெருப்படியில் குளிர் காயலாம்.''

இதற்குள்ளாகக் கதவுக்கு வெளியே தலையை நீட்டியிருந்த இளைஞன் மீண்டும் நிமிர்ந்து நின்று யுவதியைப் பார்த்தான். ''எனக்காக நீ இங்கே காத்திருப்பதுதான் நல்லது என்று நினைக்கிறேன். ஒரு வினாடியில் திரும்பி விடுகிறேன்'' என்று கூறினான். யுவதி மறுப்புக் கூற விரும்பினாள். ஆனால் அதற்கு முன்னால் இளைஞன் போய் விட்டான். நெருப்புக்கு முன்னாலிருந்த விசுப் பலகையை மிகுந்த அக்கறையுடன் தூசு போகத் தட்டி, ''இங்கே உட்கார்'' என்றாள் அம்மாது. இளைஞனைத் துரத்திக் கொண்டு ஓடத் தைரியமில்லாத யுவதி, தான் எளிதில் அருவருப்படைந்ததை வெளிப்படுத்தும் விதமாக அந்த ஆசனத்தின் ஓர் ஓரத்தில் ஜாக்கிரதையாக அமர்ந்தாள். அம்மாது உடனே சென்று கதவைச் சாத்தினாள். குடிசையின் உட்புறம் இருளில் ஆழ்ந்தது. அடுப்பைச் சுற்றி மட்டும் குறைந்த அளவு வெளிச்சம் பரவியது. அந்த நெருப்பும் இப்போது அணைந்து கொண்டிருந்தது.

குடிசையின் மூலையிலிருந்து கைநிறையச் சுள்ளிகளும் ஒரு கோடரியும் கொண்டு வந்தாள் அம்மாது. கோடாலியை விசுப்பலகை மீது வைத்துவிட்டுச் சுள்ளிகளைப் பானைக்குக் கீழே தணலில் தள்ளினாள். பிறகு தரையில் தவழ்கிற நிலையில் இருந்து கொண்டு மண் பூமியில் கன்னம் படும்படியாக வைத்துக் கொண்டு ஊதினாள். சுள்ளிகளுக்கிடையில் ஜ்வாலைகள் ஓடின. சிவந்த தீ நாக்குகள் பானையின் கரிய பக்கவாட்டுப் பகுதிகளைச் சுற்றிக் கொண்டன. நெருப்புப் பொறிகள் சடபடவென்ற சத்தத்துடன் குடிசையின் இருளுக்கிடையில் பரவின.

''இப்போது குளிருக்கு அடக்கமாக, இதமாக இருக்கிறது இல்லையா?'' என்றாள் அம்மாது குதூகலத்துடன். ''எங்கே, உன் கைப் பையை இப்படிக் கொடு!'' இந்தக் கடைசி வார்த்தைகள் அவளது வழக்கமான குதூகல உற்சாகத் தொனி சிறிதும் மாறு



கண்ணாடியின்றி கண் பார்வை பெறலாம்!



உங்களுக்கு இதைவிட மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியும் வேறு உண்டோ!

'காண்டாக்ட் லென்ஸ்'களை உபயோகியுங்கள்.

இந்த 'காண்டாக்ட் லென்ஸ்'கள் கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் அஃபாகிக் (காடராக்ட் ஆப்ரேஷனுக்குப்பின்) கெராடோ கோனஸ், அனிஸோமெட்ரோபியா, அனிஸிகோனியா, பாலியோபியா, போன்ற பார்வை குறைபாடு உடையவர்களுக்கு மிகவும் சிறந்தது.

'காண்டாக்ட்லென்ஸ்'களை வெகுசுலபமாக நீங்களே உங்கள் கருவிழிகளில் பொருத்திக்கொள்ளலாம். . . கழற்றியும் விடலாம்—சில நாட்கள் பழகிய பின்! உங்கள் விழிகளில் பொருத்தப்பட்ட இச்சிறு 'காண்டாக்ட்லென்ஸ்'கள் மற்றவர்கண்களுக்கு தெரியாது. ஆகவே உங்கள் எழில் மிகு முகத் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் இல்லை!

உங்கள் கண் வைத்தியரை ஆலோசனைக்கு அணுகுங்கள்

மற்ற விபரங்களுக்கு: **ஆசியா காண்டாக்ட் லென்ஸ் லாபரொட்டரி**
லாபரொட்டரி : 13, கில்கிரிஸ்ட் அவென்யூ, ஹேரிங்டன் ரோடு, சென்னை - 31
அலுவலகம் : 5-G, வீரபத்ர அய்யர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34

போன்கள் :
662600 82722 82595

adsindia

அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர்

ஆரோக்கியமும் மகிழ்ச்சியுமூட்டுவது

அஜீரணம், வாயு, தூக்க மின்மை, வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற குழந்தை யின் உடல் கோளாறுகளை விரைவில் குணப்படுத்து கிறது.

பசியைத் தூண்டி, ஜீரணசக்தியைச் சீராக்கி, குழந்தையை ஆரோக்கி யத்துடன் கொழுகொழு வென்று வளரச் செய்கிறது.



அமிர்தாஞ்சன் லிமிடெட்



FDSAG-1660 TM

மலேயே உச்சரிக்கப்பட்டன. யுவதி அவளைப் பார்த்தாள். அவள் முகம் வெளிறியது. உதடுகள் துடித்தன. ''என் பையா? எதற்கு?''

''நான்தான் ஏற்கனவே சொன்னேனே'' என்றாள் அம்மாது குறைப்பட்டுக் கொள்கிறவள் போலவும் செல்லமாகக் கடிந்து கொள்கிறவள் போலவும். ''நாங்கள் திருடுகிறோம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இல்லாது போனால் எப்படி எங்களால் சமாளிக்க முடியும்?'' அவள் முன்னேறிச் சாய்ந்து யுவதியின் மடியின்மீதிருந்த பையை எடுத்துத் திறந்தாள். அதனுள் இருந்தவையெல்லாம் தரையில் விழுமாறு கவிழ்த்துக் குலுக்கினாள். சிகரெட் பெட்டி, லைட்டர், லிப்ஸ்டிக் குழல், பவுடர் பெட்டி போன்ற பல பொருள்கள் விழுந்தன. உலோகப் பொருள்களின் பளபளப்பினால் கவரப்பட்டதாலோ என்னவோ ஒரு குழந்தை கையை நீட்டியது. தாய் அதன் தலையில் பாதி குத்தும் பாதி அறையுமான ஓர் அடி வைத்தாள். ''கையை எடு!'' என்றாள். பிறகு யுவதியின் பக்கம் திரும்பிக் கேட்டாள்: ''இவையெல்லாம் தங்கத்தாலானவையா? எல்லாமே தங்கத்தாலானவையா?''

''மாரியோ! மாரியோ!'' என்று யுவதி திடீரென்று துள்ளி எழுந்து நின்றவாறே கத்த ஆரம்பித்தாள். ஆனால் அவளை விடச் சீக்கிரமாகச் செயல்பட்ட அம்மாது, கோடாலியைப் பற்றிக் கொண்டு யுவதிக்கும் கதவுக்கும் இடையில் நின்று கொண்டாள். ''அவனை எதற்கு அழைக்கிறாய் அம்மணி! அவன் என் கணவருடன் கிணற்றடியில் இருக்கிறான்'' என்றாள். பிறகு ஒரு விநாடி நேரம் ஜொலிக்கும் கண்களால் யுவதியின் மீது கோணல் பார்வை செலுத்தி விட்டு, ''என் கணவரிடம் ஒரு துப்பாக்கி இருக்கிறது'' என்றும் மிகுந்த சந்தோஷத்துடன் சேர்த்துக் கொண்டாள்.

யுவதி ஏதொன்றும் கூறாது அம்மாதை வெறித்துப் பார்த்தபடி தன் கரத்தை வாய்க்கு உயர்த்தி அதனைக் கடித்தாள்.

''உட்காரு அம்மணி'' என்றாள் அம்மாது. ''ஆனால் அதற்கு முன்னால் உன் கோட்டைக் கழற்றிவிடு. அது எனக்கு உபயோகமாக இருக்கும்.''

கோட்டைக் கழற்ற உதவியவள் அதனைத் தன் கரத்தின் மீது போட்டுக் கொண்டாள். ''இப்போது உன் காலணிகளைக் கழற்று'' என்றாள்.

வெளிறிய முகத்துடன், நடுங்கும் உதடுகளுடன் யுவதி கேட்டாள்: ''நான் எப்படி நடப்பது?''

''பேஷாக, நன்றாக நடப்பாய்! என் குழந்தைகள் எல்லோரும் வெறுங் காலோடு தான் நடக்கின்றன. வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு நீ வேறு காலணிகளை வாங்கிக் கொள்ளலாம்.''

யுவதி விசுப் பலகையில் அமர்ந்து குனிந்து காலணியின் கயிற்றை அவிழ்க்கப் போனாள். அதற்குள் அம்மாது, ''நான் கழற்றுகிறேன்'' என்று கூறியபடியே தரையில் பொத்தென்று மண்டியிட்டு அமர்ந்து, யுவதியின் காலைத் தன் மடியின்மீது எடுத்து வைத்துக் கொண்டு காலணியைக் கழற்றினாள். இரண்டாவது காலணியையும் கழற்றிய பிறகு அதனை நெருப்பொளியில் ஆராய்ந்து பாராமலிருக்க அவளால் முடியவில்லை. ''எத்தனை அழகான சிறிய பாதங்கள்!'' என்று அவள் மீண்டும் ஆரம்பித்து விட்டாள். ''பட்டுக் காலுறைகள்!'' அவள் பிரார்த்தனை புரிவது போல் தன் முகத்தை உயர்த்தினாள். ''அம்மணி இவற்றை எனக்குத் தரமாட்டாயா?''

''எடுத்துக்கொள்! எல்லாவற்றையும் எடுத்துக்கொள்!'' என்று யுவதி கத்தினாள். உயர்த்திய கரத்தின் முழங்கை மடிப்பில் பயந்தும் தளர்ந்தும் போய் கண் புதைத்து விம்மினாள்.

''அதுதான் சரி அம்மணி! நன்றாக அழு! நான்கூட எனது விலையுயர்ந்த பொருள்களை ஜெர்மானியர்கள் எடுத்துக்கொண்டு போன போது அழுதேன். நன்றாக அழுத பிறகு வேதனை குறைந்தாற் போலிருந்தது.''

காலுறைகளை அவிழ்த்து முழங்கால்வரை இறக்கி விட்டாள் யுவதி. இரு கரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டு நிராதரவாக விடப்பட்டவள் போல் அசையாது இருந்தாள். பரிசுப் பொருள்களாக அளிக்கப்பட்டவை போல அவள் கால்கள் நீண்டு கிடந்தன.

''நன்றி அம்மணி! நன்றி!'' என்று சொல்லிக்கொண்டே சீமாட்டிகளுக்குப் பணிவிடை புரிவதில் கைதேர்ந்தவள் போல் அம்மாது, அழுது கொண்டிருந்த அப்பெண்ணின் காலில் காலுறையைச் சுருட்டியபடி கீழிறக்கினாள். பிறகு குதிகாலுக்குக் கீழ் கரத்தைக் கொடுத்துக் காலுறையை அறவே நீக்கி விட்டாள். இவ்வாறே இரண்டாவது காலுறையையும் கழற்றிவிட்டு எழுந்து நின்றாள். ''காலுறைகளையும் காலணிகளையும் நானே அணிந்து கொள்வேன்'' என்றாள். தன்னிடமிருந்து திருடப்பட்ட பொருள்கள் கடைசியில் எங்கு போய்ச் சேரும் என்பதை அறிந்தால் யுவதி ஓரளவு ஆறுதல் அடைவாள் என்று அம்மாது நம்பினாளோ என்னவோ? '' 'கோட்'டைப் பையன்களுக்கு கால் சட்டைகள் தயாரிக்கப் பயன்படுத்துகிறேன்'' என்றாள், உட்கார்ந்து அந்தத் துணியை ஆராய்ந்தபடி. ''இரண்டு கால் சட்டைகளுக்குக் காணும். நடாலினோவுக்கு ஒரு குட்டிச் சொக்காய் கூடத் தைப்பது சாத்தியமாகலாம்.''

கடைசியில் அவள் யுவதியின் பக்கமாக மீண்டும் திரும்பி, ''அம்மணி! உன்னிடம் வேறு எதுவும் இல்லையா? மோதிரங்கள், அட்டிகைகள், வளையல்கள்?...எனக்குக் கல்யாணமானபோது, என்னிடம் மோதிரங்கள், அட்டிகைகள், வளையல்கள் எல்லாம் இருந்தன. எல்லாவற்றையும் ஜெர்மானியர்கள் எடுத்துக் கொண்டார்கள்'' என்றாள்.

''என்னிடம் வேறொன்றுமில்லை'' என்று யுவதி விம்மல்களுக்கு இடையில் சொன்னாள்.

''நீ அழகான கவுன் அணிந்திருக்கிறாய்'' என்று அம்மாது தனக்குத் தானே பேசிக் கொள்வது போலக் கூறினாள். ''ஆனால் நான் அதை உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ள மாட்டேன். நம்மைப் போன்ற பெண்கள் அரை நிர்வாணக் கோலத்தில் பிறர் நம்மைக் காண அனுமதிக்கக் கூடாது. இல்

லையா? அது நன்றாயிராது! உன்கவலையை உனக்கே விட்டுவைத்து விடுகிறேன்!'' அவள் முன் பக்கம் சாய்ந்து பானையின் மூடியை நீக்கி விட்டுக் கரண்டியை உணவிலிருந்து எழும் நீராவிக்கிடையில் வேகமாகச் சுழற்றினாள். இதுவரையில் அசையாதிருந்த குழந்தைகள் இப்போது நீராவியை நோக்கி முகத்தை முன்னால் நீட்டின. ''எங்கள் உணவில் கொஞ்சம் சாப்பிடுகிறாயா? ஆட்டுக் கறி... கிராமாந்தரத்துப் பாணியில் தயாரானது. சாதாரணமாய்த்தான் இருக்கும்.''

''எனக்கு ஒன்றும் வேண்டாம்'' என்றாள் யுவதி. அம்மாதுக்குத் தன் முதுகைக் காட்டுவது போல் உடலை ஒரு பக்கமாக முறுக்கிக் கொண்டாள். வெறும் கால்களைத் தரையில் வைக்காதிருக்க முயன்றாள். ஆனால் அவள் குதிகால்கள் இதற்குள்ளாகவே மண் பட்டுக் கறுத்துவிட்டிருந்தன.

தன் குழந்தைகளிடம் அம்மாது ஆனந்தத்துடன் கூறினாள்: ''நமது இளம் சீமாட்டிக்குச் சாப்பிட ஒன்றும் வேண்டாமாம்!'' மாமிசத் துண்டங்களை அவள் குழந்தைகளுக்கு விநியோகித்து விட்டுத் தானும் ஒன்று எடுத்துக் கொண்டாள். ஆவேசத்துடன் அதை விழுங்க ஆரம்பித்தாள்.

கதவு திறந்தது. இளைஞன் தொப்பி இல்லாத, வெளிறிய, பயந்த முகத்துடன் கூடிய தன் தலையைக் குடிசைக்குள் நுழைத்தான். ''ஆர்னெல்லா!'' என்றான்.

யுவதி குதித்தெழுந்து அவசரமாகக் குடிசையை விட்டு வெளியேறினாள். இப்போது கிட்டத்தட்ட இருட்டியே விட்டது. ஆனாலும் இளைஞனுக்குப் பின்னால் நிழலில் விறைப்பாக நிற்கும் ஒரு மனிதனை அவளால் இனம் கண்டு கொள்ள முடிந்தது. க்ஷவரம் செய்யப்படாத நீண்ட முகத்தில் சதா எச்சரிக்கையுடனிருக்கும் கண்கள். கரம் துப்பாக்கியின் வார்ப் பட்டையைப் பிடித்துக்கொண்டிருந்தது. அவன் தன் தோழனைப் பார்த்தான். அவனும் வெறும் கால்களுடன் நின்றான். சட்டையும் உள் டிராயரும் தவிர அவன் வேறு எதுவும் அணிந்திருக்கவில்லை.

''இருட்டாகத்தான் இருக்கிறது; ஆனால் ஆல்ஃபிரெடோ உங்களுடன் வருவார்'' என்றாள் மாது. ''ஆல்ஃபிரெடோ, இந்தா!'' திடீரென்று குடிசைக்குள்ளிருந்து வெளிப்பட்ட அவள், தன் கணவரிடம் எரிந்து கொண்டிருக்கும் ஒரு கத்தை நாணலைக் கொடுத்தாள். சிவந்த ஒளி அவர்கள் முகங்களில் பாய்ந்தது. சுற்று வட்டாரம் முழுதும் இருண்டு கிடந்தது.

வாய் திறவாமல் அம்மனிதன் துயருக்குள்ளான அவ்விருவர் முன்னாலும் நடந்தான், கையில் சமயோசிதமாக உருவாக்கப்பட்ட தீப்பந்தத்துடன்.

''போய் வாருங்கள்! குட்பை!'' அம்மாதின் குரல் இருளில் அவர்களைத் தொடர்ந்து வந்தது.

தன் தோழனின் பக்கத்தில் நெருங்கி அழுந்திக் கொண்டபடி யுவதி பேசாமல் நடந்தாள். அவனும் பேசவில்லை. பக்கெட் நீரைச் சுமந்து கொண்டு, தலை குனிந்து, கற்களுக்கும் மண்ணுக்கும் இடையில் பாதங்களைச் சிரமப்பட்டுப் பாவியபடி நடந்தான்.



ராம பக்த வத்ஸலர்!

பக்தவத்சலம் பதவியில் இருந்த காலத்தில் செக்ரடேரியட்டில் வேலை ஆரம்பிக்கும் முன் தினம் 'ஸ்ரீராமஜெயம்' என்று பதினைந்து தடவைகள் எழுதிவிட்டுத் தம் வேலையை ஆரம்பிப்பாராம். —கே.ஆர்.

ஆதாரம்: 'பக்தவத்சலம் 50 ஆண்டு பொதுப்பணி'

அவன் பாதங்களுக்குப் பக்கத்தில் அந்த யுவதியின் சிறிய பாதங்கள் நடக்கப் பிரியமில்லாமல் நடந்தபோது ஏதோ ஒரு நூதன நடனம் ஆடுவதுபோல் தோன்றியது. அவர்களுக்கு எதிரே இருந்த நெருப்பொளி தன்னைச் சுமந்து வந்தவனை இருளிலேயே இருக்க விட்டு விட்டதால் அதுமட்டும் தானாகவே இருளுக்குள் நகர்ந்து செல்வது போல் தோன்றியது.

குளிரில் நடுங்கிக் கொண்டும் கூரிய கற்களை மிதிக்காமல் நடப்பதில் முழுக் கவனம் செலுத்தியபடியும் முன்னேறியதால் அப்பாதையின் முடிவுக்கு வந்து விட்டோம் என்பதையே அவர்கள் வழுவழுப்பான தார்ச் சாலையில் பாதங்கள் பாவியதும்தான் உணர்ந்தார்கள்.

இளைஞன் காரருகே சென்று 'ரேடியேட்டர்' மூடியைத் திறந்து நீரை உள்ளே ஊற்றினான். யுவதி கதவைத் திறந்து உள்ளே ஆசனத்தில் விழுந்தாள்.

இளைஞன் பக்கெட்டைக் காலி செய்து அம்மனிதனிடம் தந்தான். அவன் ''குட்நைட்'' என்று அமைதியாகக் கூறிவிட்டு இருளில் மறைந்தான்.

இளைஞன் காரில் ஏறி அமர்ந்தான். கதவைச் சாத்தி இஞ்சினைக் கிளப்பினான். ''என்னிடமிருந்து சகலத்தையும் திருடிக் கொண்டார்கள்! எல்லாவற்றையும்! எல்லாவற்றையும்!'' என்றாள் யுவதி, இளைஞனிடம் நெருங்கி ஒண்டிக்கொண்டு. அவள் குரல் பயத்தினால், ஒரே சமயத்தில் ஞான சூன்யமாகவும் ஆழ்ந்த சிந்தனை கொண்டதாயும் தொனித்தது.

''என் கதிமட்டும் என்னவாம்?'' என்று அவன் பதிலுக்குக் கேட்டான். 'ஆக்ஸிலேட்டர் பெட'லை அழுத்திக் கொண்டிருந்த தன் வெறும் பாதத்தைச் சுட்டிக் காட்டினான். கார் நகர்ந்தது. நீண்ட, நேரான சாலையில் நுழைந்து இருளுக்குள் விரைந்தோடியது. அதன் முன்னால் கறுப்பு ரிப்பன் போன்ற தார் சாலையில் காரின் 'ஹெட் லைட்'டுகள் வெண்மையான வட்ட ஒளியைச் சிந்திக் கொண்டிருந்தன.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்:


கி. ராஜேந்திரன்


கதை:
குட்டி கிருஷ்ணன்
சித்திரம்:
ராஜு.
21
ஆவென்று அலறிய ஜக்கு, அடுத்த கணம் தலை குப்புற விழுந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் அனந்தாச் சாரியின் பிடியிலிருந்து விலங்கு வெளிப்பட்டு ஸி.ஐ.டி.யின் கரங்களை அலங்கரித்தது.
எனக்குக் காப்புப் போட நீ யாருடா?
ஸி.ஐ.டி. அனந்தாச்சாரி அனர்த்தமாக ஏதும் செய்வதில்லை. கள்ளக் கடத்தல் வைரங்களை வைச்சிருந்ததற்காகவும்...
நான் மட்டுமா? கள்ளக் கடத்தல் வைரங்களை யார் யாரோ எங்கிருந்தோ கொண்டு வந்ததாகச் சொல்லிக்கிட்டாங்களே...
உஷ்! பெரிய இடத்து விவகாரம். ஆதாரமில்லாமல் பேசப்படாது! ஜக்குவைக் கொலை செய்ததற்காகவும் உன்னைக் கைது பண்ணியிருக்கேன்.
சீக்கிரம் வா! ஜக்குவைக் காப்பாற்ற முடியுமா, பார்ப்போம்
வர மாட்டேன்!
வந்துதான் ஆகணும்!
இதற்கிடையில்... ஜக்கு பாக்கெட்டிலிருந்து ஒன்று பென்சிலும் காகிதமும் எடுத்தான்...
ஐயோ பாவம்! நல்லா ஏமாந்தாக, நம்பி! அத்தனை நல்லா செத்துப் போற மாதிரி நடிச்சேன்! அடுத்த பத்மஸ்ரீ எனக்குத்தான், நிஜமாவே செத்துப் போற வரை காத்திராமல் தரணும்!
அந்த வீட்டின் கூடத்தில்...
ஏண்டி முத்தம்மா, இந்தப் பத்திரிகையிலே ஒரு பிசாசுக் கதை வந்திருக்கே பார்த்தியோ?
ஆமாம், பெண்களோ ஆண்களோ, இளசுகளோ பெரிசுகளோ, நோயாளிகளோ மாணவிகளோ படிக்க வேண்டாம்னு எச்சரிக்கையோட வெளியிட்டிருக்காளே!


நாமும் பிசாசா மாறின பிறகு படிக்கணும்னு பத்திரிகாசிரியர் விரும்பறார் போலிருக்கு!
ஐயோ! பிசாசு ஓடறது! நாய் பிசாசு! மனுஷப் பிசாசு!
நானும் பார்த்துப்புட்டுக் கலங்கித்தான் போனேன். ஆனா பிரமையாத்தான் இருக்கும். பிசாசு பத்தி படிச்சு, டென்ஷன்லே இருந்தோமில்லியா? பயப்படாதே! மறுபடியும் உனக்குப் பிசாசு தெரிஞ்சுதுன்னா தைரியமா என் கண்ணை வாங்கு! பொறுத்திரு!
சில விநாடிகளுக்குப் பிறகு.... ஜக்குவின் நிலை அறிய விரைந்த போது, விலங்கிடப் பட்டிருந்ததால் பி.கு.பி.ம, பக்கத்து வீட்டு மனிதர்களுக்குத் தன் முகம் தெரிய வேண்டாம் என நினைத்தவே....
ஐயோ! மொட்டைப் பிசாசு!
ஓ கருப்புப் பிசாசு!
மொட்டை மாடியில் ஜக்குவின் கடிதமும் கத்தியும் அகப்பட்டன அவர்களுக்கு....
அடுத்த சில விநாடிகளில்....
ஐயோ, முத்தம்மா! மறுபடியும் பிசாசுடீ!
வீதியில்....
அவனைப் பிடிச்சாகணும்!
வைரங்களை மீட்டாகணும்!

தொடரும்

இரண்டு கடிதங்கள்



☐ தமிழ்க் கதையுலகத்துக்கு ரூலி (ராமலிங்கம்) ஓர் அஸ்திவாரக் கல்லாக இருந்தவர். 'ஹனுமான்' பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றி நவீனத் தமிழ் இலக்கியத்தைப் பல துறைகளிலும் வளர்த்தவர். நடை, உடை பாவனையைக் கொண்டு ஒருவரை எப்படித் தவறாக எடை போட்டு விடுகிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதோடு, கதையைக் கையாளும் உத்தியிலும் ரூலி'யின் பாணியைக் காண இதோ :

பாஸ்கரதாஸ் தெரு பரமேசுவரம் பிள்ளை ரஸ்தாவில் வந்து சேருமிடத்தில் அங்குள்ள ஓர் எலக்ட்ரிக் கம்பத்தின் மீது சாய்ந்தவண்ணம் ஒரு மனிதன் விசித்து அழுது கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கடிதத்தையும் கடித உறையையும் பிடித்திருந்தான்.

அந்த மாதிரி பகிரங்கமாக ரஸ்தாவில் நின்று ஒரு மனிதன் துக்கப்படுவது அவ்வழியே போன ஜனங்களுக்கு ஆச்சரியமே அளித்தது. நல்ல உடைகள் அணிந்திருக்கிறான். குடித்தனக்காரன் போலிருக்கிறது. யௌவனம் மாறாத ரூபத்தில் இருக்கிறான். ஏன் நடு ரோட்டில் நின்று அழுகிறான் ?



அவனை ஜனங்கள் திரும்பிப் பார்த்து விட்டே சென்றனர். அவன் வருத்தத்துக்கும் அவன் கையில் பிடித்திருக்கும் கடிதத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று தெரிகிறது. அக்கடிதத்திலுள்ள சமாசாரம் ஏதுவோ அவனுக்கு அப்படி மகா துயரத்தை அளித்திருக்கிறது தாயாரோ, தகப்பனாரோ, மனைவியோ வேறு நெருங்கிய பந்துவோ இறந்ததாகத் தெரிவிக்கும் கடிதமோ அது? அல்லது வேறு ஆபத்தான சம்பவத்தைத் தெரியப்படுத்துகிறதா அதில் ?

ஜனநடமாட்ட - மிருக்கும் பாதையில் இம்மாதிரி தோற்றமுள்ள ஒரு மனிதன் அழுது கொண்டிருந்தால் வழியில் போகிறவர்கள் சிந்தனை அவன் துக்கத்தின் காரண காரியத்தைக் கற்பனை செய்வதாகப் போகிறது.

இந்த மனிதனின் துயரத்துக்குச் சாவோ விபத்தோ காரணமாயிருக்கலாம் என்று யூகித்தார்களேயன்றி வேறு விசேஷ காரணமெதுவும் இருக்குமென அவர்கள் நினைக்கக்கூட இல்லை.

துக்கம் குறிப்பிட்ட வழிகளில்தான் மனிதனுக்கு ஏற்பட வேண்டுமா? உள்ளம் நெகிழ அசாதாரண காரணங்கள் இருக்கக் கூடாதா? உலகம் ஏன் இப்படிக் கற்பிக்கவில்லை? அங்கே அழுத மனிதனின் அந்தரங்கம் உலகத்துக்குத் தெரிந்தால்தானே !

சொல்லப் போனல் அந்த அந்தரங்கம் இரண்டே நபர்களுக்குத் தெரிந்ததேயன்றி வேறு யாருக்கும் தெரியாது. ஒரு ஸ்திரீயின் உதார குணத்தினுலும், மற்றொரு ஸ்திரீயின் விகல்பமான சந்தேகத்தினுலும், மூன்றாவது ஆளுக்குத் தெரியாத இரகசியமாக அவ்வந்தரங்கம் முடிந்தது. இரகசியம் தெரிந்தவர்கள் இருவரில் ஒருவன்தான் மேலே சொன்ன அழுது கொண்டே நின்ற மனிதன்.

கடிதத்தின் வாசகத்தைச் சொல்லிவிட்டால் மாத்திரம் இப்புதிரை விடுவித்ததாகாது. பூர்வாங்க வர்த்தமானங்களையும் மற்றும் சில தொடர்ந்த நிகழ்ச்சிகளையும் நடந்தது நடந்தபடி கூறினுல் மனிதன் துயரப்பட வேறு காரணங்களும் உலகத்தில் உண்டு என்பது தெளிவாகும். இவ்வர்த்தமானமும் பூர்த்தியாயிருக்கும்.

கடிதத்தை வைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தவன் பெயர் பட்டாபிராமன். அவன் குடியும் குடித்தனமுமாக, நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து இருபது வீடுகளுக்கப்பால் இருபத்தேழாம் நம்பர் வீட்டில் பாஸ்கரதாஸ் தெருவில் வசிக்கிருன்.

மூன்று மாதங்களுக்கு முன்பு வரை அவனுடைய இல்லற வாழ்க்கை மிக நேரிடையான பாதையில் போய்க் கொண்டிருந்தது. கிருஹஸ்தாசிரமத்திலே அவன் மிக அதிர்ஷ்டசாலி என்று சொல்ல வேண்டும். கல்யாணமாவதற்கு முன்பு மணப் பெண்ணைப் பற்றிச் சாதாரணமாக வாலிபர்கள் எப்படிக் கனவு காண்பார்களோ அதே மாதிரி ஒரு பெண் அவனுக்கு மனைவியாகவே வாய்த்தாள் என்றுல் அதிர்ஷ்டமில்லாவிட்டால் வேறு என்ன? அழகு, அறிவு, அடக்கம், அமரிக்கை எல்லாம் கொண்டவள், குடித்தனப் பாங்கும் தெரிந்தவள் ராஜம்.

எட்டு வருஷங்களாகப் பட்டணத்துக் குடித்தனம் ராஜபாட்டையில் போகும் 'ரோல்ஸ் ராய்ஸ்' வண்டி போல் நடந்துவிட்டது. ஒரு பையன் பள்ளிக்கூடம் போகிறுன். ஒரு பெண், ''கவுன் வேண்டாம், பாவாடை வாங்கிக் கொடு, அப்பா!'' என்கிறுள்.

பட்டாபிராமனுக்குப் பெரிய உத்தியோகமில்லை. ஆனுல் வீட்டு வாடகையைக் கறாராகக் கொடுத்து, ராத்திரி 'பசும் பால்' வாங்கிக் குடிக்கவும், சினிமா டிராமாவுக்கு மனைவியோடு போகவும், கிழிசல் துணியைத் தைக்க வேண்டிய நிலையில்லாமலும் இருந்தது. ஒட்டிக்க ஒட்டிக்கப் புருஷனும், பெண்டாட்டியும் இருக்க, பட்டுப் பட்டான குழந்தைகளும் இருக்க வீடு களை சொட்டிக் கொண்டிருந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்பு வரை என்று மேலே சொல்லப்பட்டதல்லவா? அதில் ஒரு ஷொட்டு இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட தினத்தில் பட்டாபிராமனும் ராஜமும் சினிமாவுக்குப் போயிருந்தார்கள். சினிமாவெல்லாம் முடிந்து அவர்கள் வெளியே போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ''பட்டாபி!'' என்ற குரல் பெரிய அதிர்ச்சியுடன் கேட்டது. பட்டாபியும் அவன் மனைவியும் ஆச்சர்யத்துடன் திரும்பிப் பார்த்தனர். பின்னுல் ஒரு யுவதியும் ஒரு புருஷனும் நின்று கொண்டிருந்தார்கள்.



அந்தப் புருஷன் தன் வெற்றிலைக் காவி நிறைந்த பற்களையெல்லாம் திறந்து காட்டி அந்த யுவதி பக்கம் திரும்பி, ''பார்த்தாயா ! நான்தான் அப்பவே சொன்னேனே!'' என்றான். பிறகு பட்டாபியைப் பார்த்து, ''பட்டாபிக்கு என்னை அடையாளம் தெரியவில்லை போலிருக்கிறது!'' என்றான்.

பட்டாபி அவனை நெருங்கினான். ராஜம் மாத்திரம் யதாஸ்தானத்தில் நின்றாள். கிட்ட வந்த பட்டாபி, '' ஓகோ ! சுப்புசாமியா? அடையாளமே தெரியவில்லையே!'' என்றான்.

''இவள்தான் என் பாரியாள். கலாவதி என்று பெயர். ரொம்ப நாகரிகமாக இல்லையா பெயர்?'' என்று சொல்லிச் சுப்புசாமி சிரித்தான். அப்புறம், '' ஏன் உன் மனைவி அங்கே தள்ளி நிற்கிறாள்?'' என்று கேட்டான். ராஜம் சினிமாக் கொட்டகையில் ஒட்டப்பட்டிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டே இவர்கள் பேச்சையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சுப்புசாமி வாட்டசாட்டமான தோற்றம் கொண்டவன். அடையாறு ஜிப்பாவும், மாலைமாதிரி போட்டுக் கொண்டிருந்த ஜரிகை அங்கவஸ்திரமும், தட்டுச் சுற்று வேஷ்டியுமாக அவன் அலங்காரம் இருந்தது. அவன் மாதிரியான உல்லாச புருஷர்களை சங்கீதக் கச்சேரிகள் போன்ற இடங்களில் வரிசை வரிசையாகப் பார்க்கலாம்.

கலாவதியைப் பற்றி விசேஷமாகக் கூற வேண்டும். ராஜம் மட்டும் கொஞ்சம் நெருங்கி வந்து கலாவதியின் பக்கத்தில் நின்றுவிட்டாளானால் பிரம்மதேவன் திறமைக்கு ஒரு நற்சாட்சியும், ஓர் அபக்யாதியும் ஏற்படும்.

கலாவதியைப் போன்ற யுவதியை இக்காலத்தில் பஸ் ஸ்டாண்டுகளில் காணப்படும் உருவங்களைப் போல் ஒன்று என்று சுருக்கமாகக் கூறிவிடலாம். தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு என்ற ரகத்தில் சேர்ந்தவள் அவள். ஆண்டவன் அளித்த ஏமாற்றத்துக்குத் தோற்றுவிட்டதாக நினைக்காமல், ஸ்நோ, பவுடர், சவுரி, கண்ணாடி வளையல்கள், ஒரு மோதிரத்துக்குள் போய்விடக்கூடிய ஆறு கஜம் துணி ஆகிய அலங்காரங்களான செயற்கை அழகுடன் அவள் விளங்கினாள்.

பட்டாபிராமனும், சுப்புசாமியும் அந்த சினிமா கொட்டகை பாதையில் நின்றபடியே ஒரு 'மாமாங்க' காலத்துக்கு முன்பு அவர்கள் கலாசாலையில் சேர்ந்து படித்தபோது நடந்ததில் ஆரம்பித்து, யுத்த சமாசாரம் வரை விஷயத்துக்கு விஷயம் தத்தித் தத்திப் பேசினார்கள். அவர்கள் பேச்சில் ஹாஸ்யமிருந்திருக்க நியாயமில்லை. ஆனால் சுப்புசாமி வார்த்தைக்கு வார்த்தை இடி இடி என்று சிரித்தான். அவன் சிரிக்கும்போதெல்லாம் கலாவதியும் சிறு பாட்டிலை ஜலத்தில் அமுக்கினால் சப்தம் வருவது போல் களுக் களுக் என்று சிரித்தாள். ராஜம் கிட்டவே. வரவில்லை. இரண்டாவது ஆட்டத்துக்கு வருகிறவர்களைப் பராக்குப் பார்த்துக் கொண்டே அவள் நின்றாள்.

ஒரு பதினைந்து. இருபது நிமிஷம் கழிந்த பிறகு. மெள்ள அவன் நகர்ந்து. ''போகலாமா? குழந்தைகள் காத்துக் கொண்டிருக்கப் போகின்றனவே!'' என்றான் பட்டாபியிடம்.

பட்டாபி பதில் சொல்லுமுன், இன்னுமொரு தரம் இடிஇடியென்று சிரித்து, ''போகலாம் போகலாம். போகலாமா கலாவதி!'' என்றான் சுப்புசாமி. கலாவதி களுக் களுக் என்று சிரித்தாள். ராஜத்தைப் பார்த்து, ''நாழியாய்ப் போய்விட்டதாக்கும்'' என்றாள். எல்லோரும் நகர்ந்தனர். திடீரென்று சுப்புசாமி தன் ஜிப்பா பையிலிருந்து ஒரு சிறு நோட் புஸ்தகத்தை எடுத்து, ''உன் விலாசத்தைச் சொல்லு!'' என்று பட்டாபியிடம் கேட்டு, ''பாஸ்கரதாஸ் தெரு 27ம் நம்பர்'' என்று எழுதிக் கொண்டான்.

பட்டாபியும் ராஜமும் ரிக்ஷாவில் போனார்கள். கலாவதியும் அவள் கணவனும் ஒரு டாக்ஸியில் போனார்கள்.

பட்டாபிராமன் விலாசத்தைச் சுப்புசாமி வீணுக்கு எழுதிக் கொள்ளவில்லை என்பது மறு ஞாயிற்றுக்கிழமையே விளங்கிவிட்டது. கலாவதி சகிதம் பட்டாபியின் கிரஹத்திற்கு அவன் விஜயம் செய்துவிட்டான். அந்தச் சமயம் சிறிது நேரத்துக்குப் பட்டாபி வெளியே போயிருந்தான். அந்த சிறிது நேரத்துக்குள் ராஜத்துக்கு மகாசங்கடமாய் விட்டது. சுப்புசாமி ராஜத்தின் கூடப் பிறந்தவன் மாதிரி சமையற்கட்டெல்லாம் வந்துவிட்டான். '' இதுதான் கூடமா ? இதுதான் காமிரா உள்ளா? சமையலறையிலேயே குழாயிருக்கிறதா?'' என்றெல்லாம் ராஜத்தைப் பார்த்து விசாரித்தான் அவன். கலாவதி அவனுக்கு ஒத்து ஊதுவது போல் சிரித்துக் கொண்டு அவன் கூடவே வந்தாள்.


பட்டாபி எப்பொழுது வருவான் என்று ராஜத்துக்குக் கவலையாய்ப் போய் விட்டது. அதற்குள் மகா சுதந்திரமாக சுப்புசாமி ஒரு பீரோவைத் திறந்துவிட்டான். அது நிறையப் புஸ்தகங்கள் அடுக்கப்பட்டிருப்பது கண்டு, அதன் முன் நின்று புஸ்தகங்களைப் புரட்ட ஆரம்பித்துவிட்டான். கலாவதி அவன் பக்கத்தில் நின்று அவன் தோள்கள் மீது எட்டிப் பார்த்தாள். அந்தப் புஸ்தகங்கள் தமிழ் நவீனங்களாயிருக்கக் கண்டு தன் கணவனைப் பார்த்து, ''சரிதான், உங்களுக்கு வேண்டிய புஸ்தகம் இங்கேயிருக்கிறது'' என்றாள்.

அப்புறம் அவனை அங்கேயே விட்டு விட்டு ராஜம் இருந்த சமையலறைக்குள் அவள் படையெடுத்தாள். தான் தன் கணவனிடம் பேசினதை ராஜம் கேட்டிருப்பாள் என்பதாகப் பாவித்துக் கலாவதி, '' அவருக்குத் தமிழ்ப் புஸ்தகமென்றால் உயிர். இத்தனை ஊர் சுத்தியும் எங்கே போனாலும் தமிழ்ப் புஸ்தகம்தான் வேண்டும். சரத் சந்திரர் நாவல்களைத் தமிழில் படிப்பார். எனக்கு வங்காளி தெரியும். நான் அந்த நாவல்களை வங்காளியிலேயே படித்திருக்கிறேன். எனக்கு மகாராஷ்டிரமும் தெரியும், ஹிந்தியும் தெரியும்'' என்று கூறினாள். ராஜமும் சலிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அதற்குள், பட்டாபி வருவதாகக் குழந்தைகள் அறிவித்தன. திடீரென்று கலாவதி சம்பாஷணையை நிறுத்திக் கொண்டு முன்


ப்ரூ, மிக நன்றாயிருக்கக் காரணம்?

"ப்ரூதான் ஸ்ட்ராங் தன்மை மற்றும் காபிச்சுவையுடன் மணத்தையும் பெற்றிருக்கிறது"



ப்ரூ-அதிநேர்த்தியான ஸ்ட்ராங்கான இன்ஸ்டண்ட் காபி-விலையும் எவரும் கொடுக்கக்கூடியது

OBM 2711C/3TAM


40 மணி நேரம்
ஒளிசுடரும்
பல்பை எடிஸன்
கண்டுபிடித்தார்
1,360 மணி நேரம் கூடுதலாக ஒளிசுடருபவை
ஜி. இ. ஸி.–ஆஸ்ரம் பல்புகள்
உயர்தர ஜி. இ. ஸி. தொழில்நுட்பத்திலே உருப்பெற்ற வெண்சுடர் பல்புகளோ...பல்பு ஆயுளுக்கும்
ஆற்றலுக்குமான இந்திய மற்றும் பிரிட்டிஷ் தர நிர்ணயத் தேவைகளையும் மிஞ்சி விடுகின்றன.
தேர்ந்தெடுக்கப் பலரகமானவை ஆஸ்ரம் பல்புகள்: இல்லத்திற்கான 15–100 வாட் பல்புகள் •
200–1500 வாட் வணிகத்துறை–தொழில்துறை பல்புகள் • விடி விளக்கு பல்புகள் •
விசேஷ F பல்புகள் • சிறு பல்புகள் • வர்த்தி வடிவ பல்புகள் • அலங்காரப் பல்புகள்.
G.E.C. Osram
Mazda
உலகத் தொழில்நுட்பத்தை உங்கள் தேவைக்கேற்பப் படைத்திடுவோர்
G.E.C.
Trade Mark G.E.C. Osram and Mazda Permitted User—The General Electric Company of India Limited.
லின்டாஸ்-GEC/OL 3-140TM

னறைக்குப் போய் அங்கிருந்த ஈஸிசேரில் சாய்ந்து விட்டாள். உள்ளே வந்த பட்டாபி அவளை முதலில் பார்த்து, ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

''உங்கள் சிநேகிதர் நாவல்களைப் புரட்டிப் பார்க்கிறார் கூடத்திலே'' என்றாள் கலாவதி. ஈஸிசேரில் ஒய்யாரமாகச் சாய்ந்திருந்தவன் கொஞ்சம்கூட அசையவில்லை. அவள் பட்டாபியுடன் பேசும் குரல் கேட்டு சுப்புசாமி, ''ஏண்டா, பட்டாபி!'' என்று 'டகார' பிரயோகத்துடன் தன் நண்பனைப் பரிவாக அழைத்து, ''இந்த நாவல்களை எடுத்துக் கொண்டு போக உன்னிடம் அனுமதி கேட்க வேண்டுமா? மிஸஸ் பட்டாபியிடம் அனுமதி கேட்க வேண்டுமா?'' என்றான்.

அந்த பீரோவில் உள்ள எல்லா புஸ்தகங்களையும் அவன் எடுத்துக் கொண்டு போனாலும் போகட்டும், அவன் போனால் சரியென்று ராஜத்துக்குத் தோன்றியது. அவர்களும் சுமார் ஒரு மணி நேரம் இருந்து சங்கோசமில்லாமல் காப்பி டிபன் சாப்பிட்டுவிட்டு, பட்டாபியையும், ராஜத்தையும் கல்யாணத்துக்கு அழைக்கிற மாதிரி தங்கள் வீட்டுக்கு வரும்படி வருந்தி அழைத்துவிட்டுப் போனார்கள்.

பட்டாபிராமன், சுப்புசாமியும் கலாவதியும் அழைத்ததற்கிணங்க அவர்கள் வீட்டுக்குப் போக விரும்பினான். அவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் ராஜம் அங்கே வரவே முடியாது என்று மறுத்துவிட்டாள். ஆகவே பட்டாபி மாத்திரம் அங்கே தனியாகப் போனான். அப்புறம் அங்கே அவன் தனியாகப் போவதே வழக்கமாய்விட்ட போது ராஜத்தைக் கூப்பிடவும் அவனுக்குத் தோன்றவில்லை. கலாவதி முதல் நாள் இவர்கள் வீட்டுக்கு வந்ததுதான். ஆனால் மற்றும் சில நாள் நாவல்கள் எடுத்துக் கொண்டு போவதற்கும் பட்டாபியைக் கூட்டிக் கொண்டு போவதற்கும் சுப்புசாமி வந்திருக்கிறான்.

சுப்புசாமி தம்பதி சகிதம் பட்டாபி வீட்டுக்கு வந்து, பட்டாபியும் மூன்று நான்கு தடவை சுப்புசாமி வீட்டுக்குப் போய்விட்டு வந்தபிறகு பட்டாபியின் நடையுடை பாவனைகளில் மாறுதல்கள் ஏற்பட ஆரம்பித்தன. இப்பொழுது காலையில் அவன் எழுந்தவுடன் காப்பி சாப்பிட்டதும் பேப்பரை வைத்து முகத்தை மூடிக் கொண்டு ஒன்பது மணி வரை நாற்காலியில் சாய்ந்திருப்பான். பிறகு ஸ்நானம் பண்ணலாமா என்று விசாரிப்பான். ஸ்நானமாகியதும் சாப்பாடு. உடனே சைக்கிளில் புறப்படுபவன் இரவு ஒன்பது, பத்து மணிக்குத்தான் வீடு திரும்புவான்.

குழந்தைகளுடன் 'ஆனை, ஆனை' விளையாடிக் கொண்டிருந்தவன் எப்படியோ மாறிவிட்டான். மார்க்கெட்டுக்குப் போவதிலும், சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவதிலும், குஷி கொண்டிருந்தவன் மனது திரும்பி விட்டது. பார்க்குக்கும், சினிமாவுக்கும் குடும்ப சகிதம் போய்க் கொண்டிருந்தவன் தனியாக இருட்டி வெகு நாழி கழித்து வீட்டுக்குத் திரும்புவான்.

தன் கணவன் இப்படி வழக்கங்களை மாற்றிக் கொண்டதுடன், காலம் தாமதித்து வருவதையும் ராஜம் கவனிக்காமலில்லை. சுப்புசாமி வராமலிருந்தால் பட்டாபி அவர்கள் வீட்டிலேயே வாசம் செய்வதையும் அவள் பொறுத்துக் கொள்வாள்.

ராஜத்தின் மனோபாவம் இப்படியிருக்க, கலாவதியோ பட்டாபிக்கு மாப்பிள்ளை உபசாரங்கள் நடத்தினாள். புது நாகரிக மயக்கிலே அந்த இல்லறத்தான் சொக்கிப் போனான். நாகரிகம் கட்டம் கட்டமாக மாறி ஓர் உச்சநிலை அடைந்தது. சுப்புசாமியும் பட்டாபியும் சீட்டாட இரண்டு வாரம் கலாவதி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்புறம் கலாவதியும் சுப்புசாமியும் சீட்டாட, பட்டாபி வேடிக்கைப் பார்த்தான். இக்கட்டமும் மாறியவுடன் வேடிக்கை பார்க்க ஆளில்லை. மூன்று பேருமே உட்கார்ந்து 'பிரிட்ஜ்' ஆட்டம் போடலாயினர். இவ்விதமாக ஆபீஸை விட்டு நேரே சுப்புசாமி வீட்டுக்குப் பட்டாபி போகலானான்.

ராஜத்தைப் போன்ற ஒரு ஸ்திரீயின் கணவன் கலாவதியைப் போல் ஒருத்தியிடம் தலைகால் தெரியாமல் மையலில் விழுந்தான் என்றால் மனோதத்துவ சிக்கல்களில் அதுவும்



பொதுப் பெரியவாள்

புதும் பெரியவாள் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்திருந்தார்கள். அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் நானும் சென்றேன். தரிசித்துவிட்டு நான் விடை பெறும்போது ஒரு வெற்றிலையில் கற்கண்டுகளை வைத்து விபூதி இல்லாத பிரசாதத்தை என்னிடம் ஸ்வாமிகள் வழங்கி ஆசீர்வாதம் செய்தார்கள்.

ஸ்ரீ சுவாமிகளின் கரை கடந்த அன்பினையும் சகலரையும் மதிக்கும் பண்பினையும் நேரடியாக நான் உணர்ந்தேன். ஸ்ரீ சுவாமிகள் இந்து மதத்துக்கு மட்டும் உரிய புதும் பெரியவாள் அல்ல; அனைத்து மதத்தினராலும் போற்றிப் புகழப்படவேண்டிய ஒரு பொதும் பெரியவாள் என்ற முடிவுக்கு வந்தேன்.

— அ. முகம்மது இஸ்மாயில்

ஒன்றுதான் என்று சொல்ல வேண்டும். பித்து என்று சொல்லுகிறார்களே அந்த ரகத்தில் பட்டாபியின் மனோநிலையைக் கூறலாம். எந்த தூரம் வரை இந்தப் பித்து போனது என்பதற்கு ஒரு வியாழக்கிழமை நடந்த சம்பவம் உதாரணம்.

பட்டாபியால் ஆபீஸை விட்டு அன்று நேரங் கழித்துத்தான் புறப்பட முடிந்தது. அவன் சுப்புசாமி வீட்டுக்கு வந்தபோது இருட்டி விட்டது. அவர்கள் இருவரும் வீட்டில் இல்லை. பட்டாபி போய்விடலாமா என்று யோசித்தான். மறுபடி சைக்கிளைக் கீழே சாய்த்து விட்டு முன் மாடிப் படி வழியாக மொட்டை மாடிக்கு ஏறிப் போனான். அங்கே சீட்டாடுவதற்காக நாற்காலி மேஜைகள் போடப்பட்டிருந்தன. அந்த நாற்காலிகளுள் ஒன்றில் பட்டாபி உட்கார்ந்தான்.

ஒரு பத்து நிமிஷம் அப்படி உட்கார்ந்திருந்தான். பிறைச் சந்திரன் ஆகாயத்தில் காணப்பட்டது. அதுவும் தன் மூளியை நினைத்து வெட்கப்படுவது போல் மேகங்களுக்கிடை மறைந்து மறைந்து வந்து கொண்டிருந்தது. ஆகவே ஏறக்குறைய இருட்டிலேயே அவன் உட்கார்ந்திருந்தான்.

வாசற்கதவு பூட்டு திறக்கப்படும் சத்தம் கேட்டது. அவர்கள் வந்துவிட்டார்கள் என்று நினைத்தான். மெத்தை மீது ஏறிவரும் சப்தம் கேட்டது. சுப்புசாமி வரவில்லை. கலாவதி மாத்திரம்தான் வந்தாள்.

''உங்கள் சைக்கிளைப் பார்த்தவுடன் நீங்கள் மாடியில் இருக்கிறீர்கள் என்று நினைத்தேன். அவரைக் கதவைத் திறக்கச் சொல்லிவிட்டு விளக்கை ஏற்றிக் கொண்டு வரச் சொன்னேன்'' என்றவள், அப்படியே அவன் பக்கத்து நாற்காலியில் வந்து உட்கார்ந்துவிட்டாள்.

இந்தச் சமயம் சற்றே உணர்ச்சியை இழந்தான் பட்டாபி. அவன் மனத்தில் ஏற்பட்ட கோணலுக்கு ஏற்றாற்போல் இத்தனை நாளாக அவள் பேச்சு, ஜாடைகளை அவன் அர்த்தம் செய்து கொண்டு வந்தான். இன்று இருட்டில் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்ததையும் அவன் விகல்ப அர்த்தம் செய்து கொண்டான். அவள் அசைவிலே யெல்லாம் ஓர் அழைப்பையும், சிரிப்பிலேயெல்லாம் சிங்காரத்தையும், பேச்சிலேயெல்லாம் களிப்பையும், பார்வையிலே பல உணர்வுகளையும் கண்ட அவனுக்குப் பக்கத்தில் அவள் உட்கார்ந்தவுடன் பித்து உச்சமாய்விட்டது.

அவனையும் அறியாமல் அவளைத் தொடப் போனான். அந்தச் சமயம் விளக்கு வெளிச்சம் மாடிப் படிக்கட்டுகளுக்கு மேல் தெரிய அவனுக்கு எச்சரிக்கையாகியது.

சுப்புசாமி விளக்கை எடுத்துக் கொண்டு வந்து தன் மனைவியிடம் நீட்டினான். அவள் குறுக்கே கையை நீட்ட அக்கரம் பட்டாபி மீது பட்டது.

பட்டாபி அன்று வீட்டுக்குப் போகும் போது ஏறக்குறைய நடுநிசி.

மறு நாள் ஆபீசில் உட்கார்ந்து கொண்டு அவன் அந்தக் கடிதத்தை எழுத ஆரம்பித்தான். சில காகிதங்கள் எழுதிக் கிழித்துத் தன் கோட் பைக்குள்ளேயே திணித்துக் கொண்டான். அப்புறம் ஒரு முழுப் பக்கம் எழுதி விட்டான். அந்த முழுப் பக்கம் முடிந்தபிறகு உற்சாகப் பிரவாகமாக இன்னும் பல பக்கங்கள் எழுதிவிட்டான். கடந்த தொண்ணூறு நாட்களாக அவன் கலாவதியைப் பார்த்து வந்த போது நடந்த ஒவ்வொரு சிறு சம்பவத்துக்கும் ஒரு விசேஷ அர்த்தம் கற்பித்து வர்ணித்திருந்தான். கடைசியாக இருட்டில் அவள் வந்து பக்கத்தில் உட்கார்ந்ததும், அவள் கை மேலே பட்டதும் வரை போய் வெகு விநோதமான காதல் ரஸக் கற்பனைகளையெல்லாம் கொட்டியிருந்தான் அவன். ஒரு நல்ல கவரை எடுத்து அதன் மீது ''கலாவதி'' என்ற பெயரை மாத்திரம் எழுதி அதற்குள் கடிதத்தை வைத்து ஒட்டிக் கொண்டான்.

சாயங்காலம் அவன் தன்னுடைய காதல் கோயிலை அணுகியபோது கோயில் பிராட்டியார் வீதிப் புறப்பாடு போயிருந்தாள். அதுவும் அவனுக்குச் சௌகரியமாகவே தோன்றியது. சுப்புசாமியுடன் அவன் சாதாரணமாகப் பேசிவிட்டு, வெகு சாமர்த்தியமாக எதையோ சொல்லிக் கொண்டு கலாவதி அறைக்குள் நுழைந்து விட்டான். அங்கு மேஜை மீது அடையாளம் வைக்கப்பட்டிருந்த ஓர் ஹிந்தி புஸ்தகத்துக்குள் தன் கடிதத்தை அவன் வைத்துவிட்டான்.

அப்புறம் அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவே இல்லை. ஏதோ சாக்குச் சொல்லி விட்டுப் புறப்பட்டுவிட்டான்.

பட்டாபிராமனின் காதல் கடிதம் பட்டுவாடா செய்யப்பட்ட மறு தினம் அவன் நேரிடை வீட்டுக்கே போய் விட்டான். அவனுக்குத் தான் செய்த காரியம் பற்றி மறுபடி சஞ்சலம் ஏற்பட்டுவிட்டது. சுப்புசாமி வீட்டுக்குப் போக அவனுக்குத் தயக்கமாயிருந்தது.

வெகு நாளைக்குப் பின்பு மறுபடி அவன் சரியான நேரத்துக்கு வீட்டுக்கு வந்தது ராஜத்துக்கு ஆச்சரியம் அளித்திருக்க வேண்டும். ஆனால் அவள் இருந்த மனோபாவத்தில் அம்மாதிரி ஆச்சரியம் கொள்ள இடமில்லை. வேறு சந்தர்ப்பமாயிருந்தால் 'அவர் வந்த பின்பு காப்பி தயாராயில்லையே' என்று அவள் நினைத்திருப்பாள். ஆனால் இன்று.....

பட்டாபி வந்ததும், கோட்டைக் கழற்றினதும் அவளுக்குத் தெரிந்தது. ஆனால் சற்று தயங்கியே ஒரு டம்ளரில் ஜலம் எடுத்துக் கொண்டு வந்து நின்றாள். அவன் ஜலத்தை வாங்கிக் கொண்ட போது அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்துத் திடுக்கிட்டான்.

''எதுவும் ஊரிலிருந்து கடிதம் வந்ததா?'' என்றான்.

''ஊரிலிருந்து ஒன்றுமில்லை'' என்றாள் அவள், அவள் கண்களிலிருந்து அடக்க முடியாத துக்கத்தால் மளமளவென்று கண்ணீர் வந்தது.

பட்டாபிக்குத் தன் அந்தரங்கம் அவளுக்குத் தெரிந்துவிட்டதோவென மிக

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள்

1-ந் தேதி திருநெல்வேலி: *நெல்லை லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.*

1-ந் தேதி நாகர்கோவில்: *உடுப்பி ஸ்ரீகிருஷ்ண பவன், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.*

2-ந் தேதி மதுரை: *மணீஸ் கபே, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை.*

2-ந் தேதி புதுக்கோட்டை: *வஸந்தா லாட்ஜ் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை.*

3-ந் தேதி காரைக்குடி: *AVM. PL. ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணிமுதல் 11 மணிவரை.*

3-ந் தேதி அறந்தாங்கி: *கோகுலம் லாட்ஜ் பகல் 12 மணி முதல் 1 மணி வரை.*

3-ந் தேதி பட்டுக்கோட்டை: *அசோகாலாட்ஜ் பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை.*

3-ந் தேதி மன்னார்குடி: *மன்னை லாட்ஜ் மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.*

4-ந் தேதி திருச்சி: *ஹோட்டல் அஜந்தா காலை 8 மணி முதல் 2 மணி வரை.*

4-ந் தேதி கரூர்: *பெரியார் உணவு விடுதி மாலை 3-30 முதல் மாலை 5 மணி வரை.*

5-ந் தேதி தஞ்சை: *ராஜா ரெஸ்ட் ஹவுஸ் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.*

5-ந் தேதி திருவாரூர்: *அபூபக்கர் பில்டிங் மாலை 2 மணி முதல் 4 மணி வரை.*

5-ந் தேதி நாகை: *தினகர விலாஸ், மாலை 5 மணி முதல் 7 மணி வரை.*

6-ந் தேதி காரைக்கால்: *அசோக் லாட்ஜ் காலை 8 மணி முதல் 10 மணி வரை.*

6-ந் தேதி கும்பகோணம்: *தாஜ்மஹால் லாட்ஜ், காலை 11 முதல் 2 மணி வரை.*

6-ந் தேதி மாயவரம்: *காளியாகுடி லாட்ஜ் பகல் 3 மணி முதல் 4-30 மணி வரை.*

6-ந் தேதி கடலூர் N. T.: *ஹோட்டல் பிருந்தாவனம், இரவு 7 மணி முதல் 8-30 மணி வரை.*

7-ந் தேதி பாண்டிச்சேரி: *அருணா லாட்ஜ் காலை 8 மணி முதல் 10 மணி வரை.*

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] பழனி [தந்தி: சித்தர்

ஈடில்லா இன்பம் காண ஆடவருக்கு உறுதுணை



எல்லையில்லா இன்பம், எங்கெங்கும் வெற்றி காணும் ஆடவருக்கே. உங்களுக்காகவே காத்திருக்கிறது ஆரோக்கியம்-வலிமை. வீரியம். வழிகாட்டுவது ஒகாஸா. வற்றாத இன்ப ஊற்று—அதுவல்லவா வாழ்வு! ஆடவருக்கு உண்டு ஒகாஸா, பெண்மணிக்கும் இருக்கிறது ஒகாஸா. தெம்பையீட்டு இன்பமூட்ட என்றுமே உண்டு நவீன டானிக் மாத்திரைகளான ஒகாஸா.

ஒகாஸா-ஹார்மோ-பார்மா லிமிடெட், லண்டன் பெர்லின் தயாரிப்பு.

எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.

OKASA CO. PVT. LTD.

P.O. BOX NO. 396, BOMBAY-1.

வெற்றிலை

ஒரு சமயம் இராஜாஜி, கல்கி, ரஸிகமணி டி. கே. சி. இன்னும் பல நண்பர்கள் குற்றாலத்தில் பேசிக் கொண்டே மலைப் பகுதியில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது 'வெற்றிலை' என்ற பெயர் ஏன் வந்தது என்ற கேள்வியை எழுப்பினார் இராஜாஜி.



''வெற்றிலையைத் தனியாகப் போட்டுக் கொள்ள முடியாது. சுண்ணாம்பு, பாக்கு சேர்த்துத்தான் போட்டுக் கொள்ள வேண்டும். அதனால்தான் அதற்கு வெற்றிலை என்ற பெயர் வந்தது'' என்று கூறினார் ஒருவர்.

சிரித்தார் இராஜாஜி. மற்றவர்கள் கூறியதும் சரியாக இல்லை. கடைசியில் இராஜாஜி தாமே விளக்கினார்: ''காயும் பயனில்லை; பழமும் பயனில்லை. வெறும் இலை மட்டுமே பயன் தருவதால் வெற்று இலை என்பது மாறி வெற்றிலை என்று பெயர் பெற்று மங்கலப் பொருளாக ஆகிவிட்டது'' என்றார்.

கேட்டு எழுதியவர்: லட்சுமி ராஜரத்னம்
தகவல் சொன்னவர்: செங்கோட்டை கங்காதரன்

அவஸ்தையாயிருந்தது. அடுத்தாற்போல் அவள் பேசின வார்த்தை அவன் குழப்பத்தை அதிகரிக்கச் செய்தது.

'' உங்களை நான் மிகவும் வேண்டிக் கொள்கிறேன். தயவுசெய்து அந்தச் சிநேகத்தை விட்டுவிடுங்கள்'' என்றாள் அவள். அவன் தன் குழப்பத்தினால் மௌனம் சாதிக்கவும் அவள் கட்டுப்பாடுகள் சிதறின.

''அந்த மகாபாவி ! அவன் வெற்றிலையும் பேச்சும் அவன் குடிகெடுக்கிற சிரிப்பும் அவன் முதல் நாள் வந்த அன்றைக்கே நான் நினைத்தேன்'' என்று அவள் பிரலாபித்தாள்.

ஒருவிதமாகப் பட்டாபிக்குப் பதில் பேச தைரியம் வந்தது. ''என்ன, நீ சொல்வது புரியவில்லையே !'' என்றான்.

''நாவல், நாவல் என்று வாங்கிக் கொண்டு திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தானே அந்தச் சூது இன்றைக்குத் தெரிந்து போய்விட்டது. இந்த மாதிரி பாம்புகளும் லோகத்திலிருக்கின்றனவே. அவன் அயோக்கியத்தனத்துக்கு பகவான்தான் கேட்க வேண்டும்'' என்று அலறினாள் ராஜம்.

''என்ன சங்கதி என்று சொல்லாமல் ஏன் அழுகிறாய் ராஜம் ?''

''என்ன சங்கதி ? என் வயிற்றெரிச்சலை உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப் போகிறேன். இன்றைக்கு ஒரு புஸ்தகம் அவன் மூன்று மணி சுமாருக்குத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தான். அவன் போன பிறகு அலமாரியில் வைக்கலாமென எடுத்தேன். அதன் சாணித்தாள் உறைக்குள் கனமாயிருந்தது. அப்பவே பகீரென்றது. இருந்தாலும் பிரித்துப் பார்த்தேன். அந்த மகாபாவி ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறான்.......''

அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். பட்டாபியின் நிலையை என்ன சொல்வது ? எங்கும் பாம்பு மயமாயிருக்கும் நாகலோகத்துக்கு இடையே திடீரென்று தள்ளப்பட்டவன் கூட அவன் அனுபவித்த அவஸ்தைகளை அறிய முடியாது.

பத்து நிமிஷமாயிற்று. பிறகு ஒரு மாதிரியாக அவன் சமாளித்துக் கொண்டு, ''என்ன எழுதியிருக்கிறான் ?'' என்றான் தேம்பிக் கொண்டிருக்கும் ராஜத்திடம்.

''அதை யார் படித்தது ? கவரையே நான் திறக்கவில்லை. நீங்கள் வந்தவுடன் உங்களிடம் கொடுக்கலாம் என்று அப்படியே புஸ்தகத்துடன் வைத்தேன்'' என்றாள்.

பட்டாபிராமன் மனத்தைத் திடம் செய்து கொண்டு உள்ளே போய் அந்தப் புஸ்தகத்தைக் கண்டு பிடித்துக் கடிதத்தை எடுத்தான். அதன் உறையைக் கிழிக்கும் போது அவன் கைகள் நடுங்கின. கடிதத்தைப் பிரித்து முதல் வரியைப் படித்தவுடன் தூக்கு மேடையேறுவது போலிருந்தது.

அவனுக்கு மேலே படிக்கப் படிக்க, மகா பயங்கரமான தண்டனைக்கு உட்படுமுன், வேறொருவன் அதை அனுபவிக்கப் பார்க்கிறவன் நிலையை அவன் அடைந்தான்.

திடீரென்று எதிர்பாராத இந்தப் பேரிடியினால் அவன் பைத்தியம் பிடித்தவன்போலானான். அக்கடிதத்தையும் அதன் உறையையும் கையில் பிடித்தபடியே வீட்டை விட்டு வெளியே ஓடினான்.

முதலில் வேகமாக அவன் நடந்த போதிலும் பிறகு நடை தளரத் தெரு முனையிலேயே நின்றுவிட்டான். அப்புறம்தான் அவன் தன்னையும் அறியாமல் விசித்து விசித்துத் தெருவில் போகிறவர்களுக்கு ஓர் ஆச்சரியக் காட்சியாகும்படி அழுதான்.

அவன் படித்த கடிதத்தின் வாசக விவரம் வருமாறு :

அன்புள்ள சகோதரியே !

கொடும் துன்பத்திலிருக்கும் நான் என்னைப் போன்ற பெண்ணான உன்னிடம் முறையிட இதை எழுதுகிறேன். உன்னை வேதனைக்குட்படுத்த விரும்பவில்லை. மனிதர்களை வெளித் தோற்றத்தால் நாம் நம்புகிறோம். ஆனால் உன் கணவர் எனக்கு நேற்று எழுதிய கடிதத்தைப் பார்த்த பிறகு உலகத்தில் யாரையும் நம்புவதற்கில்லையெனத் தெரிகிறது. அந்தக் கடிதத்தை அப்படியே உனக்கு இத்துடன் அனுப்பலாம் என நினைத்தேன். ஆனால் உனக்கு வேதனை அளிக்கக்கூடாது என்று யோசித்து அதை நெருப்பிலிட்டுக் கொளுத்தி விட்டேன். இம்மாதிரி விகல்பமாக உன் கணவர் எனக்குக் கடிதம் எழுதினாரென என் கணவரிடம் நான் பிரஸ்தாபிக்கப் போவதில்லை. ஆனால் நமது பரஸ்பர நன்மையை உத்தேசித்து இது விஷயத்தில் உன் கணவருக்கு இதமாகக் கூறி அவர் மனத்தை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேணும்
உன்னைப்போன்ற ஒரு கிருஹதர்மிணி
கலாவதி

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 ஜனவரி, 23உ

திங்கட்கிழமை. இன்றுதான் அரசர் விஜயம் செய்யும் நாள்.* அதனால் அதிகாலையில் ஐந்து மணிக்கே எழுப்பிவிட்டார்கள். அரசர் தம்முடைய குடிகளையும் அவர்களுடைய சொத்துக்களையும் பார்வையிடுவதற்காக நாங்கள் எங்களுடைய படுக்கை முதலிய சாமான்களை எல்லாம் ஒழுங்காக வராந்தாவில் பரப்பி வைத்துக் கொண்டு நிற்க வேண்டியவர்களானோம். என் சம்பந்தப்பட்ட மட்டில் அறையை நன்ருகச் சுத்தம் செய்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

அரசர் பெருமானுடன் சின்ன டாக்டரும், ஜெயிலரும் உதவி ஜெயிலரும் வந்தார்கள்.

அரசர்: ''எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றதல்லவா ?''

நான்: ''பாதகமில்லை, வந்தனம்.''

அரசர்: ''இப்போதெல்லாம் காலில் பருக்கள் தோன்றுவதில்லை அல்லவா ?''

நான்: ''இல்லை.''

அரசர்: ''அந்த இன்ெனுரு விஷயம் என்ன 'ஆச்சு?''

சின்ன டாக்டர் உடனே அரசரிடம், 'ஆஸ்த்துமா' எனக் கூறி உதவினுர்.

நான்: ''ஆஸ்துமா கொஞ்சம் இருக்கத்தான் செய்கிறது.''

அரசர்: '' மருந்து சாப்பிடுகிறீர்களா? அல்லது மருந்தில்லாமலே சமாளித்துக் கொள்கிறீர்களா?''

நான்: ''மருந்து சாப்பிடவில்லை, உணவை ஒழுங்குபடுத்திக் கொண்டு சமாளித்து வருகிறேன்.''

அரசர் : ''ஆமாம், அதற்கு மருந்து சாப்பிடாமல் இருப்பதுதான் நல்லது.''


நான்: ''விசேஷ தண்டனை பெற்ற கைதிகள் மாதிரி என்னையும் இரவு பகலாக அடைத்து வைக்கும்படி உத்தரவிட்டிருக்கிறீர்களா என்ன?''

அரசர்: ''நீங்கள் காலையில் ஆறு முதல் எட்டு மணி வரையிலும், பத்தரை முதல் பன்னிரண்டு வரையிலும் மாலையில் நாலரை முதல் ஆறு வரையிலும் வெளியே வரலாம். இந்த நேரங்களில் நீங்கள் குளிக்கலாம், துவைக்கலாம், அறையைச் சுத்தம் செய்யலாம், ஆகாரம் உண்ணலாம். ஆகவே ஐந்து மணி நேரம் அறையில் இருக்க வேண்டாம்.''

நான்: ''அப்படியானுல் விசேஷ தண்டனை பெற்றவர்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? எதுவும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லையே ?''

அரசர்: ''அப்படியில்லை; அவர்கள் நாளின் பெரும் பகுதி நேரம் அறையில் இருக்கவேண்டும்.''

இதன் பொருள் கடவுளுக்குத்தான் வெளிச்சம். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை வேலையோ விச்ராந்தியோ இல்லாமல் நாள் முழுவதும் அடைத்துப் போட்டு வைப்பது ஒரு தீய முறையே ஆகும். தங்களிடம் கருணை காட்டும்படியாகச் சர்க்காருக்கு அவர்கள் விண்ணப்பம் அனுப்புகிருர்கள். அது போய் வர அநேக மாதங்கள் ஆகிவிடுகின்றன. அந்தக் காலம் முழுவதும் இந்த மாதிரி அடைபட்டுக் கிடக்கவேண்டியவர்களாக இருக்



கிருர்கள். அதனுல் இக்கைதிகளில் சிலர் கெட்ட பழக்கத்தில் இறங்கிவிடுகிருர்கள். என் அறைக்குப் பின்புறத்திலுள்ள அறையிலேயே அவர்கள் வைக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் பேசுவதெல்லாம் என் காதில் விழுகிறது. அதைக் கேட்டால் அவர்கள் எத்தகைய தீய காரியங்களில் ஈடுபடுகிருர்கள் என்பது எளிதில் விளங்குகிறது.

அவர்களுடைய விண்ணப்பங்களும் வேண்டுகோள்களும் அரசாங்கத்துக்குப் போய் முடிவு செய்யும் வரையில் அவர்களைத் திறந்தவெளியில் வேலை செய்யும்படி ஏன் செய்யலாகாது என்பது எனக்கு விளங்கவில்லை. தூக்கு தண்டனை பெற்றவர்க்குக் கடினமான வேலை தரக் கூடாது என்று தோன்றினுல் எளிதாகச் செய்யக்கூடிய வேலையைத் தரலாம் அல்லவா ?

வீட்டுக்கு அனுப்புவதற்காகச் சில கடிதங்கள் எழுதினேன். பொல்லாத ரயில் வண்டி சிறைக்கு அருகில் என்னைத் தமாஷாகக் கேலி செய்வது போல் கூவிக் கொண்டே போகிறது.

---

* சிறைச்சாலை மேற்பார்வையாளரின் வாராந்திர விஜயத்தை இவ்வாறு அங்கத பாணியில் விவரிக்கிருர் ராஜாஜி.



மங்கிய முகத்தில் மகிழ்ச்சி பொங்கிட பாரி மிட்டாய்கள்



எத்தகைய மன நிலையையும் மாற்றிட வல்லது பாரி மிட்டாய். புதிய, முழுமையான, சுவை மிகுந்தவை பாரி மிட்டாய்கள். அதன் முதல் சுவையே தனி இன்பம்.

Parry's

பாரிஸ்
கன்பெக்ஷனரி
லிமிடெட்;
சென்னை

PRS/6544

மூன்று முடிச்சுகள்



7

கே.பாலசந்தர்

ஒரு குழப்பம் தலை தூக்கினாலே ஒன்பது குழப்பங்கள் சிளை விரித்தாடும்! குழப்பமில்லாத வாழ்க்கை பாசி யில்லாத நீரோடை. இதனை ஆராய்ந்து பார்க்கிற அளவுக்கு இப்போது மோகனசுந்தரம் இல்லையே! அவனுடைய சிந்தனை முழுவதும் சிகரெட்டாகப் புகைந்து கொண்டிருந்தது.

வேலைக்காரி அஞ்சலை கொண்டு வந்து வைத்திருந்த குப்பை முறத்தைக் கூர்ந்து கவனித்தான். அந்த வேற்று பிராண்டு சிகரெட்டு அவனை எப்படியெல்லாமோ அலைக்கழித்தது. அவனுக்குச் சம்பந்தப்படாத அந்தச் சிகரெட்டு அங்கே எப்படி வந்தது என்கிற ஆராய்ச்சிக்கு முடிவே தென்படவில்லை.

'சே, இந்தக் குப்பை முறம் இங்கே இருக்கிற வரை குழப்பத்துக்கு மேல் குழப்பம் கொட்டமடித்துக் கொண்டு தானிருக்கும். இதனைக் கொட்டிவிடலாமே' என்றெண்ணிக் குனிந்து எடுத்தான். அதற்குள் அந்தக் குரங்கு மனம் மாறுபட வேண்டுமா?

எடுத்த முறத்தை மேசை மீது வைத்தான். 'இதை வைத்து ஒரு நாடகமாடிப் பார்த்தால் என்ன? ஆமாம்; இந்தக் குப்பை முறம் இங்கேயே — மேசையின் மீதே இருக்கட்டுமே!'

அந்தச் சிகரெட்டுத் துண்டைமட்டும் தனியாக — பைரவியின் கண்களில் படத்தக்க அளவுக்கு எடுத்து வைத்தான். அவள் வந்ததும் குப்பை முறம் ஏன் மேசை மீது இருக்கிறது என்பது பற்றிய சிந்தனையில் அவள் மூழ்குவதை அவன் விரும்பவில்லை. சிகரெட்டுத் துண்டு கண்களில் பட்டு அதனால் அவளிடம் ஏற்படுகிற எதிர் விளைவைக் கவனிக்கவே கருதினான். ஒருகால் இந்தத் துண்டு சிகரெட்டு கண்களில் படாமல் போய் விட்டால்?

குப்பையைக் கிளறிப் பார்த்ததில் கிடைத்த மற்றுமொரு தடயம் அவனுக்கு மேலும் சாதகமாகப் பயன்பட்டது. போலீஸ் அதிகாரி யாயிற்றே! தடையங்களை ஆராய்வது இயல்பான ஒன்று!

அந்தத் தடயம்—

நசுக்கி உருண்டையாக்கப்பட்டிருந்த ஒரு சிகரெட் பாக்கெட்...

ஓ...

தீர்மானமான முடிவுக்கு வர அது உதவியது. சிகரெட்டுத் துண்டு எப்படி வந்தது என்று ஆராய்ந்ததற்கான பலன் வெளிப்பட்டு விட்டது. கோப, தாப உணர்வுகள் ஜ்வாலை விட்டுப் பற்றி எரிந்தன. அதே வேற்றுப் பிராண்டு, காலி சிகரெட்டுப் பாக்கெட்!

இனிமேலும் சிந்திக்க ஒன்றுமே இல்லை. ஏதோ நடக்கிறது! பைரவி எங்கோ சென்று கொண்டிருக்கிறாள்! என்ன நடக்கிறது? அவள் எங்கு செல்கிறாள்?

இனி கண்டு பிடிக்க வேண்டியது அது தான்! அதற்குத் தேவை...

ஊன்றுகோல்கள்!

பரணையை அண்ணாந்து கவனித்தான். மனத்துள் என்ன தோன்றியதோ? தலையசைத்துக் கொண்டே சிகரெட்டுப் பாக்கெட்டை எடுத்துச் சுருங்கியிருந்த பகுதியைச் சரிசெய்து மேலே வைத்தான். அடுத்து என்ன செய்வது?

சக்கர வண்டியைச் சுழற்றிக் கொண்டே புத்தக அலமாரிப் பக்கம் சென்றான். புத்தகங்களை அண்ணாந்து பார்த்தான். எதையாவது எடுத்துப் படிக்கலாமா என்று தோன்றியது. அடுத்த விநாடியே மனம் அதை மறுத்து விட்டது. என்ன படிப்பது?

பெண்ணைப் பற்றி ஒருவன் கற்புக்கரசி என்பான்! அதே நேரத்தில் இன்னொருவன் தாசி என்பான்! அவனவன் வாழ்க்கை அனுபவத்தையொட்டிய விஷயங்கள்! தன்னுடைய அனுபவம் என்ன? பைரவியின் சுயரூபம் என்ன? அது புத்தகங்களில் கிடைக்கப்போவதில்லை. புத்திசாலித்தனத்தில் கிடைக்கப் போவது? அதற்கான வழி, வழி, வழி.....

தேடிக் கொண்டிருந்தான் மோகன சுந்தரம்.


எப்படியெல்லாம் பைரவியைப் பற்றி எண்ணி மகிழ்ந்தோம்! அவளுடைய அன்பு இமயத்தை விடப் பெரியது; உறுதியானது! தாஜ்மகாலை விட உயர்ந்தது; அழகானது என்றெல்லாம் எண்ணி இறுமாந்தோமே! அப்படிப்பட்ட பைரவியா...?

பைரவி கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து வருவது தெரிந்தது.

கடிகாரத்தை ஓரக்கண்ணால் கவனித்தான். மணி பத்தே முக்கால்!

அலமாரிப் பகுதியின் மூலையில் சுவரை யொட்டியது போல் சக்கர வண்டியை நகர்த்திக் கொண்டு ஒரு புத்தகத்தை எடுத்துப் பார்ப்பது போலப் பாவனை காட்டினான். அந்தப் பாவனையிலிருந்து கொண்டு பைரவியின் முக பாவங்களைக் காண வேண்டுமென்பதில் அவனுடைய சிந்தனை தீவிரமாக முனைந்தது.

ஹாலின் நட்ட நடுவே மேசை! அந்த மேசையின் மீது குப்பை கூளம் அடங்கிய முறம். அதில் கண்ணைக் குத்துகிற மாதிரி அந்த மாற்றுப் பிராண்டு காலி சிகரெட்டுப் பாக்





கெட்டு! அதை பைரவி பார்க்கப் போகிறாள். நிச்சயமாக அவள் பார்வையிலிருந்து அது தப்ப முடியாது. அப்பொழுது அவளுடைய முகம் எப்படியெல்லாம் மாறப் போகிறது? தனது ஓரக் கண்களால் ஆராயப் போகிறான்.

உள்ளே நுழைந்த பைரவி கதவைத் தாழிட்டுக் கொண்டாள். அங்கிருந்த வண்ணமே கணவனைக் கூர்ந்து கவனித்துவிட்டு நடந்தாள். ஏன் இப்படி அவர் இன்னமும் ஹாலில் இருக்கிறார்? தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாரா?

நேரே மேசையண்டை வருகிற போது!

குப்பை முறம் கண்களில் பட்டுவிட்டது. ஒரு கணம் இமைகள் நின்று மறு கணம் அசைந்தன. ஏன் இந்தக் குப்பை முறம் இங்கு இருக்க வேண்டும்? அதுவும் மேசை மீது கண்காட்சிப் பொருளைப் போல?

மோகனசுந்தரம் புத்தகத்தைப் பிரித்துக் கவனிப்பது போலிருந்தாலும் கண்கள் பைரவியைக் கவனித்தன. நீலக் குழாய் விளக்குகள் நன்றாகவே வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. வழக்கமாக அந்த நேரத்தில் அந்த விளக்குகள் அணைந்தே இருக்கும். இன்றுதான் வழக்கத்துக்கு மாறான ஒரு நடவடிக்கை அரங்கேறப் போகிறதே!

குப்பை முறத்தை மீண்டும் ஒருமுறை கவனித்து விட்டுப் பிறகு கணவனை நோக்கினாள். மோகனசுந்தரம் படிப்பது போலப் பாவனை செய்து கொண்டிருந்தான். அடுத்த விநாடி கைப் பையை மேசையின் மீது வைத்து விட்டுக் குப்பை முறத்தைத் தூக்கினாள். அதில் சிகரெட்டுப் பாக்கெட்டும், அதனருகே ஒரு துண்டுச் சிகரெட்டும் காணப்பட்டன. மீண்டும் கணவனை நோக்கிச் சிரித்த வண்ணம், ''இதெல்லாம் என்ன? ஊரிலே கிடக்கிற குப்பையெல்லாம் வீட்டு மேசையில் இருக்கு! தெருவுலே கொட்ட வேண்டிய குப்பையை மேசை மேலே வச்சிட்டு எங்கே போனா அந்த அஞ்சலை?'' என்று கேட்டுக்கொண்டே முறத்தை எடுத்துக் கொண்டு புறக்கடைப் பக்கமாக நடந்தாள். அவளிடமிருந்து எந்த வித அதிர்ச்சியோ, துடிப்போ, குரலில் தயக்கமோ வெளிவரவில்லை. மோகனசுந்தரத்துக்கு ஏமாற்றமாகவே இருந்தது. அந்த ஏமாற்றத்திலும் சற்று இன்பம் இருக்கத்தான் செய்தது.

மேசை மீது பைரவி வைத்து விட்டுச் சென்ற கைப் பையை ஆராயலாம் போலத் தோன்றியது அவனுக்கு. அது எப்படி முடியும்? அதற்குள் அவள் வந்து கவனித்து விடுவாளே!

பைரவி வந்து விட்டாள். அவள் கையில் முறமில்லை. கண்கள் கணவனைக் கவனித்தன. அப்போது ஒரு பக்கமாக வைக்கப் பெற்றிருந்த சோற்றுத் தூக்கு — ஒட்டலிலிருந்து அஞ்சலை கொண்டு வந்து வைத்த சாப்பாட்டுக் 'காரியர்' கண்ணில் பட்டு விட்டது.

''ஏன், இன்னும் சாப்பிடலையா?''

கணவனருகே சென்றாள் பைரவி. அவளுடைய முகம் மிக்க அழகாக ஒளி விட்டது.

மோகனசுந்தரம் தலையசைத்துவைத்தான்.

''ஏன்? பசிக்கலையா?''

''இன்னிக்கு என்னமோ மனசு ஒரு 'சேஞ்சா' தெரியுது!''

''ஓட்டல் சாப்பாடுங்கிறதுக்காக இப்படிச் சொல்றீங்களா?''

இடக் கரத்து ஆள்காட்டி விரலால் கிழுதட்டைச் சொரிந்த வண்ணம் பைரவியை அண்ணாந்து கவனித்த மோகன சுந்தரம் ''இந்தச் சேஞ்சை நான் மட்டும் தனியா அனுபவிக்க முடியலே. நீ வந்ததும் ரெண்டு பேருமா சேர்ந்து அனுபவிக்கலாமேன்னுதான்!'' என்றான்.

''நான் கல்யாண வீட்டிலே மூக்கைப்பிடிக்கச் சாப்பிட்டு விட்டு வந்திருக்கேனே!''

''சரி, உன் கையாலே பரிமாறிச் சாப்பிடணும் போலத் தோணுது. காரியரை எடுத்துக்கிட்டுப் போய்த் தயார் பண்ணு. அதிகமான பசியே ஒரு மாறுதலான ருசியைக் கொடுக்குமோ?''

பைரவி ஒரு புன்முறுவலுடன் சோற்றுத் தூக்கை எடுத்துக் கொண்டு அறையினுள் நுழைந்தாள். மோகனசுந்தரத்தின் கண்கள், தொலைவில் மேசைமீது இருந்த பைரவியின் கைப் பையைக் கவனித்தன. கணவனுக்குப் பசி என்று தெரிந்ததும் கவனம் சோற்றுத் தூக்கில் சென்றுவிடவே, கைப் பையை மறந்து விட்டாள் பைரவி.

இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத்தானே மோகனசுந்தரம் காத்துக் கொண்டிருந்தான். ''பைரவி! டிரஸ் சேஞ்சு பண்ணிக்கிட்டுச் சாப்பாடு ரெடி பண்ணு! அவசரமில்லே!''

மோகனசுந்தரம் குரல் கொடுத்துக் கொண்டே சக்கரங்களைச் சுழற்றிக் கொண்டு மேசையருகே வந்தான். அவசர அவசரமாகக் கைப்பையை எடுத்துத் திறந்து பார்த்தான். அந்தப் பையினுள் — ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய் நோட்டுக்கள்; சில்லறை நாணயங்கள்! சார்டர்டு அக்கௌண்டண்டு கம்பெனியின் விசிட்டிங் கார்டு இத்யாதி... இத்யாதி... இடையே... இரண்டு சினிமா டிக்கெட்டுகள்! பாதி கிழிக்கப்பட்டிருந்தவை! 'LAND' என்ற எழுத்துக்கள் மட்டும் தெரிந்தன! M1D LAND தியேட்டராக இருக்குமோ? சரி, எந்தத் தேதி? அதுவும் சரியாகத் தெரியவில்லை!

மனம்தான் பேயாக அலறியது! குரல் அடைபட்டு விட்டது!

இரண்டு சினிமா டிக்கெட்டுகள்...

யார்? யார்?

இவளும்....

அவனும்....

உடன் சென்றவள் சிநேகிதியாக ஏன் இருக்கக் கூடாது?

இருந்துவிட்டுப் போகட்டும். ஆனல் திருமண ரிசப்ஷன் என்று எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? சினிமாவுக்குப் போய் வரட்டுமா என்று கேட்டால் நான் தடுக்கவா போகிறேன்?

கைப் பையை மூடி மேசை மீது வைத்தான். இனி எதையும் கேட்கத் தேவையில்லை; கேட்பதால் பயனும் இல்லை என்கிற முடிவுக்கு வந்துவிட்டான். அதற்குள் பைரவி உள்ளிருந்த வண்ணம் குரல் கொடுத்தாள்: ''சாப்பாடு தயார்!''

உண்டு முடித்துக் கைகழுவிக் கொண்டான் மோகன சுந்தரம். பைரவி உள்ளே சென்று துவாலை எடுத்து வந்து கொடுத்தாள். கை துடைத்துக் கொண்டே மனைவியைக் கூர்ந்து கவனித்தான் மோகனசுந்தரம்.

பைரவி கேட்டாள்:

''ஆமாம்; அஞ்சலை எதுக்காகக் குப்பை முறத்தை மேசை மேலே வச்சிட்டுப் போயிட்டா?''

மோகனசுந்தரம் நாசுக்காகப் பதில் சொன்னான்:

''அவளோட புருஷனுக்கு ரொம்ப டேஞ்சர்னு ஆள் வந்தது. அந்த அவசரத்திலே முறத்தை மேசை மேலே வச்சதை மறந்திட்டிருக்கணும்.'' கூசாமல் பொய் சொன்னான். பின்னல் இது பொய் என்று பைரவி உணரச் சந்தர்ப்பம் ஏற்பட்டால்? அதைப் பற்றி அவன் யோசிக்கவில்லை.

''ஐயோ, பாவம்! ஏதேனும் பணம் அவளுக்குத் தேவைப்பட்டிருக்குமே!''

''கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டாள். எங்கிட்டே ஏது பணம்? அதனால், கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்திட்டேன்.''

''எதுக்கு....?''

''அடமானம் வச்சுப் பணம் வாங்கிக்கச் சொன்னேன்.''


''வெட்டிங் ரிங்கையா கொடுக்கணும்?''

''ஆசைக்குப் புண்ணியம் உண்டோ என்னமோ, ஆபத்துக்குப் பாவமில்லே. நம் கல்யாணமோதிரத்துக்குப் பார்த்தா அவ தாலி பறி போயிடுமில்லியா?''

பைரவியால் அதற்கு மேலே எதையும் கேட்டுக் கொள்ள முடியவில்லை. மோகனசுந்தரமோ அவளை எதுவுமே கேட்க விரும்பவில்லை.

கணவனுக்கான படுக்கையைத் தட்டிப் போடுவதில் முனைந்தாள் பைரவி.

ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கைப் போல ஒவ்வொரு மணி நேரத்திலும் மோகன சுந்தரம் எதை எதையோ துருவித் துருவிப் பார்த்தான். வசமாக எதுவும் அவனுக்குக் கிடைத்த பாடில்லை.



ரேடியோவின் சிறந்த கட்டங்களுக்கு எஸ்ட்ரெலாவின் சிறந்த ரேடியோ பாட்டரிகள்

நீங்கள் விரும்பும் இன்னிசையை நாதச் செழுமையோடு நிறைவுடனே ஒலித்திடச் செய்வது கூடுதலான சக்திசெறிந்த எஸ்ட்ரெலா பேட்டரிகள். காகித, பிளாஸ்டிக், உலோகக் கவச உறைகளிட்ட பேட்டரி வகைகள் உள்ளன நீங்கள் தேர்ந்தெடுக்க. கசியாத் தன்மை உடையவை. அவை நெடுங்காலம் உழைப்பவை. டார்ச்சகளுக்கும் இவையே சிறந்தவை, ஓங்கிய ஒளியையும் நம்பிக்கையான உழைப்பையும் தருபவை.



மறு நாள் பொழுதும் விடிந்தது. வழக்கம்போல் பைரவி துயில் கலைந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அலுவலகத்துக்குப் புறப்பட்டாள். கணவர் ஏதோ ஒரு மாறுதலுடன் சில நாட்களாக இருக்கிறார் என்பது மட்டும் பைரவிக்குப் புரிந்தது. ஆனால் ஏன், எதற்காக என்பதை அவ்வளவு தெளிவாக அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. புரிந்து கொண்டும் ஒருகால் புரியாதவள் போல் நடந்து கொண்டிருக்கலாம். பைரவியை அவ்வளவு எளிதில் யாரும் எடை போட்டு விட முடியாதே!

மாலையில் பைரவி வருகிறபோது கல்கத்தா ரஸகுல்லா வாங்கிக்கொண்டு வந்திருந்தாள். கல்கத்தா சென்று திரும்பிய சிநேகிதி கொடுத்ததாம். அன்புடன் கணவனிடம் கொடுத்தாள். மோகன சுந்தரம் போலிச் சிரிப்புடன் அன்பை வெளிப்படுத்துபவனைப் போல நடித்து அதைப் பெற்றுக் கொண்டான்! கல்கத்தா ரஸகுல்லா அவனுக்குக் கசந்தது! என்றைக்குச் சிரிப்பொலி கேட்டு முதன் முறையாகப் பொய் சொன்னானோ, முதன் முறையாக நடிக்கத் தொடங்கினானோ, அன்று முதற்கொண்டே அவன் சிறந்த நடிகனாகி விட்டான்!

கணவனுக்கு உணவு படைத்தாள். அன்று சுவையாகவும் உணவைத் தயார் செய்திருந்தாள். மோகனசுந்தரத்துக்குப் பிடித்தமான முட்டைக் குருமா. நெய் மணக்கக் குருமா காரசாரமாக இருந்தது.

அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்த பைரவி, ''முகம் ஏன் மாறுதலா இருக்கு?'' என்று கேட்டாள்.

மோகனசுந்தரம், ''மாலை மீண்டும் மார்பு வலி வந்து விட்டது. அதனால்தான்'' என்று உணவைச் சுவைத்துக் கொண்டே சொன்னான்.

''ஐயய்யோ! டாக்டருக்குப் போன் செய்யட்டுமா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் பைரவி. இப்பக் கொஞ்சம் பரவாயில்லை. இல்லாட்டிச் சாப்பிட முடியுமா? நாளைக்கு வருகிற போது வைட்டமின் 'பி'காம்ப்ளெக்ஸ் மாத்திரை வாங்கிட்டு வா, அது போதும்!''



ஆகட்டும் என்பது போலத் தலை அசைத்தாள் பைரவி. மோகனசுந்தரம் உணவை முடித்துக் கொண்டான். பிறகு பைரவி உண்டு முடித்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள். 'டைப்' அடிக்க வேண்டிய 'மேட்டர்கள்' நிறைய காத்துக் கொண்டிருந்தன போலும்!

டக்டக்.....டகடக....டக்...

ஒலிப் பிரவாகம் மாடியை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது. கீழிருந்தவாறே மாடிச் சாளரங்களைக் கவனித்தான் மோகனசுந்தரம். அவன் மனத்தில் பலவிதமான அலைமோதல்கள்!

மெல்ல மாடிக்குச் சென்று கவனிக்கலாமா என்று மனம் அரிக்கிறது. ஆனால் எப்படிச் செல்வது? பரணையில் இருக்கிற ஊன்றுகோல்களை எடுத்துச் செல்லலாமா? எவ்வாறு எடுப்பது?

எப்படியோ எடுத்து விடுகிறோம்! ஆனால் அவை சத்தமிட்டுத் தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டால்...

ஏன் சத்தமிடாமல் செல்ல முடியாதா ? போலீஸ் இன்ஸ்பெக்டராகிய தனக்கு இது ஒரு பெரிய காரியமா என்ன ?

மீண்டும் சிந்தனை புகையத் தொடங்கி விட்டது ! அந்தப் புகையினூடே ஒரு பொறி — சின்னஞ் சிறு பொறி....

ஆம் ! அப்பொழுது அவன் ஹாலில் தான் இருந்தான். ஹால் விளக்குகள் எரியவில்லை! மாடியறை வெளிச்சம் தான் ஹாலிலும் சற்றுத் தெரிந்து கொண்டிருந்தது. தட்டெழுத்து யந்திரத்தின் ஒலி ஒரே சீராகக் கேட்டுக் கொண்டிருந்தது.

ஆ.... இப்படிச் செய்தால் என்ன?

யோசித்து முடித்த மறுகணம்—

''பைரவி!'' என்று குரல் கொடுத்தான் ! தட்டெழுத்து யந்திரத்தின் ஒலி நின்றது. அடுத்த கணம் அவள் ஓடி வரும் காலடி ஓசை !

மேல் படியில் வந்து நின்று கவனித்த பைரவி ''என்னங்க! என்ன வேணும்?'' என்று கேட்டபடியே கீழே இறங்கினாள்.

தன்னைச் சுதாரித்துக் கொண்டான் மோகனசுந்தரம் !

''சிகரெட்டுப் பாக்கெட்டை எங்கோ வைத்து விட்டேன். தேடி எடுத்துக் கொடுத்துவிட்டுப் போயேன்.... அப்புறம் தூக்கம் வராது......''

அவள் சிரித்துக் கொண்டே இறங்கி வந்தாள்! ''ஏன் சிரிக்கிறே?''.

''நான்தான் சிகரெட் பாக்கெட்டை எடுத்து மறைவான இடத்திலே வச்சிருக்கேன். 'நெஞ்சு வலி'ன்னு வேறு சொல்றீங்க.... அதிகமா சிகரெட் பிடிக்கக் கூடாது. அதுக்காகத்தான். ப்ளீஸ்... போய்ப் படுத்துக்குங்க.....''

அவளை 'ஃபௌல்' பண்ணிவிட நினைத்தான் மோகனசுந்தரம். ஆனால் பைரவி அவனை 'ஃபௌல்' பண்ணிவிட்டாள்!

பைரவி திரும்பவும் மாடிக்குச் சென்று அரை மணி நேரம் ஆகியிருக்கும். இப்பொழுது உற்ற துணையான சிகரெட்டும் கையில் இல்லாமல் தவித்தான் மோகன சுந்தரம் !

மீண்டும் ஒரு முறை படுக்கையிலிருந்து சக்கர நாற்காலிக்குத் தாவிச் சக்கரங்களை உருட்டியபடி ஹாலுக்கு வந்தான் மோகனசுந்தரம்......தட்டெழுத்து யந்திர சப்தம் மாடியிலிருந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது.

' எனக்கு நெஞ்சு வலிக்கிறதாம் ! அதனால் சிகரெட் பிடிக்க விடமாட்டாளாம்! எத்தனை கரிசனம் என் மீது?...' இப்படி எண்ணிய மோகன சுந்தரத்தின் மூளையில் இன்னுமொரு யோசனை பளிச்சிட்டது !

'' எனக்கு நெஞ்சு வலியா.... ?'' இப்பொழுது தனது திட்டத்துக்கு அந்த நெஞ்சு வலியையே பிரயோகப் படுத்தினால்.......?

அடுத்த கணம்—

'பைரவி' என்ற ஓர் ஓலம்! பூதாகாரமாகப் பெருத்த சப்தமிட்டுக் கத்தினான். அந்த அலறல் தட்டெழுத்து யந்திர ஓசையை மீறி மாடியையே கிடுகிடுக்க வைத்துவிட்டது.

கணவனுடைய இந்தப் பயங்கர அலறல் சத்தத்தைக் கேட்டு, என்னமோ, ஏதோ என்று பயந்துவிட்டாள் பைரவி ! மார்பு வலிதான் கடுமையாகக் கண்டுவிட்டது போலும் என்று நினைத்து விட்டாள் ! தன்னை மறந்த பிரமைநிலையில் எழுந்து ஓடோடி வந்தாள்.

மார்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மாடிப் படிகளில் கண்களை மேய விட்டிருந்த மோகன சுந்தரம், துடிப்புடன் ஓடி வரும் பைரவியைக் கண்டு அரக்கனைப் போல் கண்களை உருட்டினான் ! அந்த உருட்டலுடன் காதுகள் ஏன் படபடக்கின்றன?

துடித்துப் போய் மாடிப் படிகளை இரட்டை இரட்டையாகத் தாவி ஓடி இறங்கிவரும் பைரவியைத் தொடர்ந்து அந்த டைப் சத்தம் — தட்டெழுத்து யந்திரத்தின் ஓசை இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறதே ! அது எப்படித் தொடர்ந்து கேட்கிறது ? அதெப்படி சாத்தியமாகும்? ஆச்சரியமாக இருக்கிறதே !

''நெஞ்சு வலியா ? இப்போ எப்படீங்க இருக்கு?'' அவனது மார்பைத் தடவியபடி அதிர்ச்சியுடன் நின்றாள் பைரவி ! பைரவி சொன்ன வார்த்தைகள் அவனது காதுகளில் விழவில்லை!

அவன் வேறு எதையோ கூர்ந்து கவனித்தான். 'டைப்' சத்தம் இன்னமும் கேட்டது ! அவன் மட்டும் அதைக் கேட்டான் ! பதற்றத்தில் அவள் அதைக் கவனிக்கவில்லையோ ?

திடும் என்று 'டைப்' சத்தம் 'பிரேக்' போட்டது போல் இப்பொழுது நின்றது.

இதையும் அவன்தான் கவனித்தான்; அவள் கவனித்தாள் இல்லை !

பைரவியை மோகனசுந்தரம் 'ஃபௌல்' பண்ணி விட்டான் !

தட்டெழுத்து யந்திரத்தின் சத்தம் எப்படித் தொடர்ந்து கேட்டது? எவ்வாறு சட்டென்று நின்றது !

குழப்பம்: குழப்பம்; குழப்பம் !

மோகன சுந்தரத்தின் முகம் பயங்கரமாக மாறி வியர்வைத் துளிகளில் குளித்துக் கொண்டிருந்தது. (தொடரும்)

மணிப்பயல்



ஒரு குட்டி நடிகனையும், குட்டி நடிகையையும் வைத்தே படம் தயாரித்துவிட்டார்கள். திரைக் கதையில், மல்யுத்தம், சிறை வாசம், கள்ளக் கடத்தல், மணமாகுமுன் கறைப்படும் பெண் வாழ்வு, பிரசாரம் — எல்லாம் அடங்கி யிருக்கின்றன. ஆரம்பத்தில் வரும் பேரறிஞர் அண்ணாவின் பல்வேறு தோற்றங்கள், நெஞ்சை நெகிழ வைக்கின்றன. படத்தில் ஒரு புதுமை, சின்னப் பையனாக வரும் ஆரம்பக் கதாநாயகன் கடைசி வரையில் சின்னப் பையனாகவே இருக்கிறான்; இடைவேளைக்குப் பிறகு பெரியவனாகிக் காதல், கீதல் என்றெல்லாம் ஆரம்பித்துச் சீரழியவில்லை!

மாஸ்டர் சேகர் மணிப் பயல் — மணியான நடிப்பு. பையன் கெட்டிக்காரன். நல்ல எதிர்காலம் இருக்கிறது அவனுக்கு. கண்ணீர் விட்டுக் கலங்கவும், சிறுமை கண்டு பொங்கவும் அவனால் முடிகிறதே! இந்தப் படத்தில் அவனுக்கு நல்ல சான்ஸ். வெற்றி மேல் வெற்றி பெற்று வரும் கதாநாயகனே அவன்தானே! (எம். ஜி. ஆரைப் பற்றி லாகவமாகப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். வெறும் பிரசாரமாகத் தெரியவில்லை. கௌரவமாகவே இருக்கிறது. பாராட்ட வேண்டியதுதான்!)

குழந்தை இந்திரா, மணிப் பயலின் தங்கை செல்வி. அருமையாக நடிக்கிறாள். ஆனால், பெரியவர்கள் பேசும் வசனத்தைத் திணித்து அந்தப் பாத்திரத்தை ரொம்பவும் சிரமப் படுத்திவிட்டார்கள்.

ஏவி. எம். ராஜன், ஒரு பெண்ணைக் கெடுத்துக் கைவிட்டுவிடும் பாத்திரத்தை ஏற்றிருக்கிறார். கடைசியில் அப்பெண்ணையும் குழந்தையையும் ஏற்றுக் கொள்கிறார் என்றாலும், நல்லவனா, பொல்லாதவனா என்று தீர்மானிக்க முடியாத பாத்திரமாயிருப்பதனால் ராஜனின் நடிப்பும், ரசிக்கும்படியாயில்லை. வெந்நீராகவும் இல்லாமல், தண்ணீராகவும் இல்லாமல், வெத வெத என்று அசடு வழியும் பாத்திரமாகப் போய்விட்டது!

செருப்புத் தைக்கும் தொழிலாளியாக வரும் எஸ். வி. சுப்பையா நன்றாய் நடித்திருக்கிறார். ஆனால், எதற்காக அப்படி முகத்தில் பவுடரை வாரிப் பூசிக் கொண்டு வந்தார்? அது என்ன 'மேக்கப்'? 'மேக்கப்' எதுவும் இல்லாமலே அவரால் அந்தப் பாத்திரத்தை 'மேக்கப்' பண்ணியிருக்க முடியுமே!

நடிப்புத் திறமை மட்டும் ஒருவரிடம் இருந்தால் போதும், எந்தப் பாத்திரத்தையும் வெளுத்துக் கட்டிவிடலாம் என்பதற்கு வி. கே. ராமசாமி சான்று கூறுகிறார். போலீஸ் அதிகாரியாக வந்து அலட்டிக் கொள்ளாமல் நன்றாய் நடித்திருக்கிறார்.

தயாரிப்பாளர் ஆர். எம். வீரப்பனே திரைக் கதையை எழுதியிருக்கிறார். ஜெகதீசனின் உரையாடல்கள் சிறப்பாயிருக்கின்றன.

மாணவியாக இருக்கும்போதே, தாய்மை அடைந்து தாழ்வுறும் பாத்திரத்தை ஏற்றிருப்பவர் ஜெயந்தி. சிறப்பாக நடித்திருக்கிறார்; ஆனால், தம் உடல்வாகுக்குச் சிறிதும் ஒத்து வராத 'டைட்ஸ்' உடையுடன் தோன்றிக் குதிக்காமல் இருந்திருக்கலாம். அது கொடி உடல், துடி இடைப் பெண்களுக்குத்தான் சரிப்பட்டு வரும் என்பதை இனியாவது ஜெயந்தி புரிந்து கொண்டால் அவருக்கும் நல்லது, ரசிகர்களுக்கும் நல்லது!

திரைக் கதையில் சில தவறுகள்: வாழ்க்கையில் வழுக்கி விழுந்துவிட்ட பெண்ணை எந்தத் தகப்பனும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு பல ஆண்டுகள் ஆற அமர யோசித்து, அந்தக் கயவனைக் கண்டு பிடித்து அவனிடம் ஒப்படைக்கும் பணியைச் செய்ய மாட்டான். மணமாகாமலே தாயாகிவிட்ட எந்தப் பெண்ணும் தன் குழந்தையுடன் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கமாட்டாள்! (திரைப் படத்தில், இது சாத்தியம்தான். எப்படியும் இடைவேளைக்குப் பிறகு அவனைத்தான் சந்தித்துவிடப் போகிறோமே என்ற தைரியமும், நிம்மதியும் அவளுக்கு இருக்குமே!)

ஒலிப்பதிவு சிறப்பாயிருக்கிறது. ஏ. ஜகந்நாதனின் டைரக்‌ஷனும் நன்றாயிருக்கிறது.

பார்த்து மகிழப் பல அம்சங்கள் கொண்ட படம் — செல்வி என்டர் பிரைசஸ் தயாரிப்பான ''மணிப் பயல்''

—காந்தன்

இந்திய திரைப்பட, டெலிவிஷன் கழகம்

பூனா-4

நுழைவு அறிக்கை

1973 ஜுலை முதல் தேதியிலிருந்து துவங்கும் பின்வரும் தொழில் வகுப்புகளின் முதலாண்டுப் படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு, உரிய விண்ணப்பத்தாள்களில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பிலிம் டைரக்ஷன் (மூன்று ஆண்டுகள்)- குறைந்தபட்ச கல்வித் தகுதி: கலைத்துறையிலோ, விஞ்ஞானத் துறையிலோ பல்கலைக் கழக பட்டம் அல்லது அதற்குச் சமமானது. வயது: 19—30 ஆண்டுகள்.

2. ஸ்கிரீன் ப்ளே ரைடிங் (மூன்று ஆண்டுகள்)—குறைந்தபட்ச கல்வித் தகுதி: கலைத்துறையிலோ, விஞ்ஞானத்துறையிலோ பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்குச் சமமானது. வயது: 19—30 ஆண்டுகள்.

3. மோஷன் பிக்சர் போட்டோகிராபி (மூன்று ஆண்டுகள்)-குறைந்தபட்ச கல்வித் தகுதி: பௌதிக, ரசாயன பாடங்களுடன் இண்டர்மீடியட் அல்லது பௌதிக, ரசாயன பாடங்களுடன் மூன்றாண்டு விஞ்ஞானத்துறை பட்டப்படிப்பில் முதலாவது ஆண்டு அல்லது அதற்குச் சமமானது. அல்லது எஸ்.எஸ்.எல்.சி.யுடன், பல்கலைக்கழகத்தினுடைய அல்லது அரசு அங்கீகாரம் உள்ள கழகத்தினுடைய கலைத்துறை (பெயிண்டிங்) பட்டம் அல்லது டிப்ளமா. அல்லது எஸ்.எஸ்.எல்.சி.யுடன், பல்கலைக்கழகமோ, மாநில அரசின் கழகமோ, மத்திய அரசோ, மாநில அரசுகளோ அங்கீகரித்திருக்கும் கழகங்களோ வழங்கும் போட்டோகிராபி டிப்ளமா (போட்டோகிராபி டிப்ளமா வகுப்பு இரண்டாண்டுகளுக்கு இருக்க வேண்டும்). வயது: 17—30 ஆண்டுகள்.

4. சவுண்ட் ரிகார்டிங் அண்ட் சவுண்ட் எஞ்சினியரிங் (மூன்று ஆண்டுகள்) — குறைந்தபட்ச கல்வித் தகுதி: பௌதிக, ரசாயன, கணக்கு பாடங்களுடன் இண்டர்மீடியட் அல்லது பௌதிக, ரசாயன, கணக்கு பாடங்களுடன் மூன்றாண்டு பட்டப் படிப்பில் முதலாண்டு அல்லது அதற்குச் சமமானது. வயது 17— 30 ஆண்டுகள்.

5. பிலிம் எடிட்டிங் (இரண்டு ஆண்டுகள்)—குறைந்தபட்ச கல்வித் தகுதி: இண்டர்மீடியட் அல்லது கலைத்துறை அல்லது விஞ்ஞானத்துறை மூன்றாண்டு பட்டப் படிப்பில் முதலாண்டு அல்லது அதற்குச் சமமானது. வயது: 17—30 ஆண்டுகள்.

6. பிலிம் ஆக்டிங் (இரண்டு ஆண்டுகள்)—குறைந்தபட்ச கல்வித் தகுதி: மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான படிப்பு ஆங்கில பாடத்துடன். ஹிந்தியிலும், உருது மொழியிலும் செயல்முறை அறிவு அவசியம். தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் விஷயத்தில் இவை தளர்த்தப்படலாம். வயது: பெண்களுக்கு 16—25 ஆண்டுகள். ஆண்களுக்கு 18—25 ஆண்டுகள்.

முக்கிய குறிப்பு: எல்லா வயது வரம்புகளும் 1973 ஜுலை முதல் தேதிப்படியாகும்.

நுழைவுப் பரீட்சையொன்றின் அடிப்படையில் எல்லா வகுப்புகளுக்கும் அட்மிஷன் இருக்கும். தகுதியளிக்கும் தேர்வை எழுதியிருப்பவருக்கும், 1973, ஏப்ரல், மே, அல்லது ஜூன் மாதத்தில் பல்கலைக் கழக அல்லது போர்டு பரீட்சையை எழுதயிருப்பவருக்கும், விண்ணப்பிக்கும் சமயத்தில் தேர்வு முடிவுகள் தெரியாவிடினும், கழகத்தின் நுழைவுப் பரீட்சையை எழுத தகுதி உண்டு. ஆனால், விண்ணப்பத்துடன், அவருடைய பிரின்ஸிபால் அல்லது ஹெட் மாஸ்டரிடமிருந்து இது சம்பந்தமான சான்றிதழ் ஒன்றை விண்ணப்பதாரர் பெற்று அனுப்ப வேண்டும். கழகத்தின் நுழைவுப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், 1973 ஜுலை 31-க்குள் உரிய பரீட்சையில் தேறியதற்கான எழுத்து மூல அத்தாட்சியைக் காண்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைப்படி, தற்காலிக அட்மிஷன் கிடைக்கும். அப்படிச் செய்யாவிடில், தற்காலிக அட்மிஷன் தானாகவே ரத்தாகும். செலுத்தப்பட்ட சம்பளம் திருப்பித் தர மாட்டாது.

பிலிம் டைரக்ஷன், ஸ்கிரீன் ப்ளே ரைடிங், மோஷன் பிக்சர் போட்டோகிராபி, சவுண்ட் ரிகார்டிங் அண்ட் சவுண்ட் எஞ்சினியரிங், பிலிம் எடிட்டிங் ஆகிய வகுப்புகளுக்காக எழுத்துமூல பரீட்சையும், நேர்முக பேட்டித் தேர்வும் இருக்கும். 1973 மே மாதம் 13-ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று அலஹாபாத், பம்பாய், கல்கத்தா, தில்லி, சென்னை, ராஞ்சி ஆகிய இடங்களில் எழுத்துமூல பரீட்சை நடக்கும். நுழைவுப் பரீட்சையில் உரிய மார்க்குகளைப் பெறும் எல்லா விண்ணப்பதாரர்களும் 1973 ஜூன் 25-ம் தேதி திங்கட் கிழமையன்று கழகத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகத் தேர்வுக்கு வரவேண்டியிருக்கும்.

பிலிம் ஆக்டிங் வகுப்புக்கான நுழைவுப் பரீட்சையில், போட்டி அடிப்படையிலான ஆடிஷன்/ஸ்கிரீன் டெஸ்டுகள் இருக்கும். பம்பாய், கல்கத்தா, தில்லி, சென்னை ஆகிய இடங்களில் 1973 மே மாதத்தில் இந்த டெஸ்டுகள் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, உரிய காலத்தில், சரியான தேதிகள் அறிவிக்கப்படும்.

குறிப்பிட்ட துறையில் விசேஷ திறமையும் அதற்கான திருப்தியளிக்கும் அத்தாட்சியும் இருக்கும் விண்ணப்பதாரர்கள் தனிப்பட கவனிக்கப்படுவார்கள். தகுதியுள்ள மாணவர்களுக்கு அளிப்பதற்காக, மத்திய அரசு, ஆந்திரப் பிரதேஷ், அஸ்ஸாம், பீஹார், குஜராத், கேரளம், மஹாராஷ்டிரம், மைசூர், மத்யப் பிரதேஷ், ஹரியானா, ஒரிஸ்ஸா, பஞ்சாப், உத்தர் பிரதேஷ், மேற்கு வங்காளம் ஆகிய மாநில அரசுகள், தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம், புதுச்சேரி, கோவா, தாமன், தீவ் யூனியன் பிரதேசங்கள் ஆகியவை ஏற்பாடு செய்துள்ள பல உபகாரச் சம்பள திட்டங்கள் உண்டு. பிலிம் ஆக்டிங் துறையில், ஒரு மாணவிக்கான, மாதம் 250 ரூபாய் பெறுமானமுள்ள ஹிந்துஸ்தான் லீவர் உபகாரச் சம்பள திட்டமும், தகுதியுள்ள ஒரு மாணவருக்கான, மாதம் 150ரூபாய் பெறுமானமுள்ள, குருதத் நினைவு உபகாரச் சம்பள திட்டமும் கூடுதலாக உண்டு. மோஷன் பிக்சர் போட்டோகிராபி வகுப்பில் சிறந்த மாணவர்களுக்காக, ஆர்வோ பிரைவேட் லிமிடெட் மாதம் 100 ரூபாய் பெறுமானமுள்ள உபகாரச் சம்பளங்களை ஏற்பாடு செய்திருக்கிறது. மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தனித்தனியாக, கழகம் நடத்தும் ஹாஸ்டல் வசதி உண்டு.

விண்ணப்பத்தாளுடன், வகுப்புகள், நுழைவுப் பரீட்சை, உபகாரச் சம்பளங்கள் முதலியவை பற்றிய விவரங்கள் அடங்கிய ப்ராஸ்பெக்டஸை, பூனாவிலுள்ள பிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டிட்யூட் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசருக்கு கொடுக்கப்படும் வகையில் க்ராஸ் செய்யப்பட்ட 1 ரூபாய் போஸ்டல் ஆர்டரையும், 50 பைசா மதிப்புள்ள ஸ்டாம்பும், 5 பைசா ரெஃப்யூஜி ஸ்டாம்பும் ஒட்டப்பட்ட உங்களுடைய முகவரியுள்ள நீள கவரையும் (25 செ. மீ. x 18 செ. மீ.) அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். ரொக்கமாகவோ, மணி ஆர்டரிலோ, செக் மூலமோ பணம் அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ப்ராஸ்பெக்டஸ் வேண்டுமென்று வரும் மனுக்கள் 1973 மார்ச் 20-ம் தேதி வரைதான் ஏற்றுக் கொள்ளப்படும். மேலே கூறப்பட்டுள்ள வகையில் அனுப்பப்படாத மனுக்கள் நிராகரிக்கப்படும். அவை சம்பந்தமாக தகவல் கேட்டுவரும் எந்த ஒரு விசாரிப்பையும் கழகம் ஏற்காது.

சேருவதற்கான விண்ணப்பங்கள், எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டு உரிய சான்றிதழ்களுடனும், க்ராஸ் செய்யப்பட்ட 5 ரூபாய் போஸ்டல் ஆர்டருடனும் 1973 ஏப்ரல் முதல் தேதிக்குள் கழகத்திற்கு வந்துசேர வேண்டும். சரிவர பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், 1973 ஏப்ரல் முதல் தேதிக்குப் பிறகு வரும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். இவை சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் ஏற்கப்படமாட்டாது.

முக்கிய குறிப்பு: புதிய மாணவர்களுக்கு இந்த ஆண்டு டெலிவிஷன் வகுப்பு வசதி இப்போது இல்லை. உரிய ஏற்பாடுகள் பூர்த்தியானவுடன் அதுபற்றி அறிவிக்கப்படும். அதுவரை, தகவல் கேட்டு போஸ்டு பதில் அனுப்ப இயலாது.

davp 72/583



15. நானும் நன்னும் !

சிவிஞர்களுக்குச் சில உரிமைகள் உண்டு, கவிதைத் துறையிலே ! இசைப் பண்பையும் செய்யுளின் அமைப்பையும் கருதிச் சில சொற்களை எப்போதாவது நீட்டி அல்லது குறுக்கிக் கையாளும்படி நேர்ந்துவிடும். இதைக் கண்டு நாம் புலவர்கள் உரிமை என்று விட்டுவிடுவது தான் மரபு ! ஆனால் நாம் அப்படி விட்டுவிட்டாலும், புலவர்களுக்குள்ளேயே இந்த உரிமையைப் பற்றி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டால் எப்படியிருக்கும் ?

கம்ப ராமாயணம் முழுப் பதிப்பில் ஓர் இடத்தில் 'நாராயணன்' என்ற சொல் 'நராயணன்' என்று குறுகி நிற்கிறது. இதை வைத்துக் கொண்டு காளமேகப் புலவர் ஒரு போடு போடுகிறார் தமது பாடல் ஒன்றிலே ! சுவை என்னவென்றால், காளமேகம் போடுகிற போடு நயமான செய்யுட் செம்போடாக இருக்கிறது ! ஒரு நல்ல பாடலே நமக்குக் கிடைத்துவிடுகிறது. இதன் விளைவாக !

நாரா யணனை
நராயணன்என் றேகம்பன்
ஓராமல் சொன்ன
உறுதியால் –

மிகவும் தப்பான காரியம் அது. யோசித்து அதன் விளைவுகளைச் சிந்திக்காமல் (ஓராமல்) கம்பர் இப்படி ஒரு தவறு செய்துவிட்டார் அல்லவா ? அதனால் இனிமேல் நான் என்ன செய்வேன் தெரியுமா ?

. காளமேகத்தின் பாடல் எவ்வளவு அழகாக நகைச்சுவையோடு வருகிறது பாருங்கள்:

– நேராக

நான் சுற்றி வளைக்கப் போவதில்லை. அப்பட்டமாகவே, நேராகவே,

வாரென்றால் வரென்பேன்
வாளென்றால் வளென்பேன்
நாரென்றால் நரென்பேன்

'வார்' என்பதை 'வர்' என்பேன். 'வாள்' என்று சொல்லாமல் 'வள்' என்பேன். 'நார்' என்ற சொல்லை 'நர்' என்பேன் !

இத்தனையும் செய்வேன், யார் ? 'நான்' இல்லை, 'நன்' !!

நாரென்றால் நரென்பேன்
நன் !

கம்ப ராமாயணம் 'இரணியன் வதைப் படல'த்தில் இருபத்து மூன்றாவது பாடலில் 'ஓம் நமோ நராயணா' என்று வருகிறது. டி. கே. சி. பதிப்பில் இது இடைச்செருகல் என்று விடப்பட்டிருக்கிறது.

நாராயணனை நராயணன் என்று கூறலாமா கூடாதா என்ற கேள்வியையும், அது கம்பர், இது காளமேகம் என்பதையும் எல்லாம் மறந்துவிட்டுப் பாடலைப் பார்க்க வேண்டும். ஆத்திரம் போன்று வருகிற நகைச்சுவை ஓர் அருமையான பாடலைத் தமிழுக்குத் தந்திருக்கிறது. அதிலும் கடைசி வரி,

நாரென்றால் நரென்பேன்
நன் !

'நன்' என்றே முடித்துவிட்டது பரமசுகம் ! ஆத்திரமான நகைச்சுவையை அபாரமாக அழுத்துகிறது அது !

நாரா யணனை
நராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன
உறுதியால் – நேராக






ராஜராஜசோழன்

தமிழ் நாட்டின் தனிப் பெருமையை, பண்பாட்டை, தெய்வ பக்தியை, காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும் கலைத் திறமையை உலகத்து நாடுகளுக்கெல்லாம் எடுத்தியம்பியவன் ராஜ ராஜ சோழன்; அறநெறி பிறழா ஆட்சி புரிந்து அரும் பெரும் புகழ் பெற்றவன்; பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே 'குட ஓலைச் சீட்டு' என்ற முறையில் மக்கள் அளிக்கும் வாக்குக்கு மதிப்பளித்த மாமன்னன் அவன்; ஊருக்குள் புகுந்து, ஊர்களையெல்லாம் குடித்து, ஊரையே அழிக்கும் பெரு வெள்ளத்தைத் தேக்கி அணைகட்டிப் பாசன வசதியால் பயிரை வளர்க்கும் அரிய சாதனையை ஏற்படுத்திய சோழ மன்னர் பரம்பரையில் உதித்த வீர மன்னன் அவன்.

அத்தகைய மாமன்னனது வரலாற்றை வண்ணப் படமாகத் தயாரித்திருக்கிறார், துணிச்சல்காரரான ஜி. உமாபதி. நல்ல கலை உள்ளம் படைத்த இவர் தென்னகத்திலேயே முதன் முதலில் 'சினிமாஸ்கோப்' முறையில் இப்படத்தைத் தயாரித்திருக்கிறார்.

ஏராளமான பொருட்செலவையும் உழைப்பையும் நல்கி இப்படத்தைத் தயாரித்திருக்கிறார். ஆடை, அணி கலன்களுக்கு மட்டுமே ஏழு லட்ச ரூபாய்கள் செலவாகியிருக்கின்றன! ராஜ ராஜ சோழனின் உடையின் செலவு மட்டும் ஏழாயிரம் ரூபாய்களாம்!

தமிழ் நாட்டுக்குப் பெருமை தரும் முறையில், விரைவில் திரையிடப்படவிருக்கும் ''ராஜ ராஜ சோழ''னில் வரும் பாத்திரங்களை இந்த இதழ் அட்டையில் வாசகர்களுக்கு வண்ணக்கலை விருந்தாக அளித்து மகிழ்கிறோம்.



வாரென்றால் வர்ரென்பேன்
வாளென்றால் வள்ளென்பேன்
நாரென்றால் நர்ரென்பேன்
நன்!

இந்தப் பாடலைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட வேண்டும்.

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் அவர்கள் திருநெல்வேலியில் நடந்த வெள்ளகால் முதலியார் அவர்களின் எண்பதாண்டு நிறைவு விழாவுக்கு வந்திருந்த சமயம் அது! ஒரு நாள் டி.கே.சி. வீட்டில் ஐயரவர்களின் பேச்சுக்கு இடையே இந்தப் பாடலைப் பற்றிய குறிப்பு வந்தது. அப்போது டி.கே.சி. சொன்னார்: ''இந்தப் பாடலுக்குக் காரணமான மூலப் பாடல் இருக்கிறதே, கம்பர் எழுதியது என்பதாக, அது இடைச் செருகல்! ஆனால் காளமேகம் பாட்டு பலே ஜோர்! அதிலும் அந்த ''நன்'' இருக்கிறதே நன், அடடா, எப்படி வந்து விழுந்திருக்கிறது!''

ஐயர் சொன்னார்: ''இந்த 'நன்' என்பதன் அழகையும் சுவாரஸ்யத்தையும் புரிந்துகொள்ளாத சில பதிப்பாசிரியர்கள், பிற்காலப் பதிப்புகளில் 'நன்' என்பதை ''நான்'' என்று திருத்தி அச்சிட்டிருக்கிறார்கள்! பழைய சுவடிகளில் 'நன்' என்றே இருக்கிறது!''

இதற்கு டிகேசி சொன்னார்: ''ரொம்பச் சரி! அப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்து, நான் என்னுடைய புத்தகத்தில் 'நான்' என்று அச்சாகியிருப்பதை 'நன்' என்றே பேனாவினால் திருத்தி வைத்திருக்கிறேன்!'' என்று கூறித் தமது புத்தகத்தை எடுத்து வந்து காட்டினார் ரசிகமணி!

இந்த நிகழ்ச்சியை ஒரு சமயம் ராஜாஜியிடம் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் இதே போன்ற இன்னொரு சுவையான அனுபவத்தைச் சொன்னார். அதையும் இந்த வேளையில் கல்கி நேயர்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். பிழையில்லாத ஒரு சொல்லைப் பிழை என்று எண்ணிக் கொண்டு திருத்துகிற விபரீதப் பிழையைப் பற்றியதே அது! குறிலை நெடிலாக்கியதே அதுவும்!

மகாபாரதம் (பழைய வியாசர் விருந்து) நூலில் சக்கிராச்சாரியர் என்று தாம் குறிலாக எழுதியிருந்ததை, ''ப்ரூப்'' திருத்துகிறவர் ஒரு சமயம் சக்கிராச்சாரியார் என்று ''யா'' வாக நீட்டி அச்சிட்டு விட்டதைப் பற்றி ராஜாஜி என்னிடம் சொன்னார்.

''சோமு, இதில் நாம் இருவரும் ரசிக்க வேண்டியது எதைத் தெரியுமோ? ''ப்ரூப்'' திருத்தியவருடைய பகுத்தறியும் ஆற்றலைத் தான்! இராஜகோபாலாச்சாரியார் எழுதியிருப்பதால் அது சக்கிராச்சாரியாராகத்தான் இருக்கவேண்டும் என்பது அவருடைய லாஜிக்!

இவ்வாறு சொல்லித் தமது வழக்கமான மோகனக் குறும்போடு சிரித்தார் ராஜாஜி! அந்தச் சிரிப்பு அப்படியே கண்ணுக்குள் நிற்கிறது!



திபெத்திய நாடோடிக் கதை

காகம் கறுப்பானதேன்?

ஒரு காலத்தில் காக்கை மிக அழகான பறவையாக இருந்தது. ஒரு நாள் அது ஒரு விறகுவெட்டியின் மனைவியைக் கண்டது. அவள் அழகு சுந்தரி. அவள்மீது காக்கைக்குப் பிரியம்விழுந்து விட்டது. ஒரு நாள் விறகுவெட்டி காட்டுக்குச் சென்றிருந்தபோது காகம் அந்த அழகு சுந்தரியின் இல்லத்துக்கு விரைந்தது. அவள் காதலைப் பெறக் காக்கை ஒரு பொய் சொல்லக் கருதியது. காக்கை அவளிடம் சென்று "நீ இவ்வளவு அழகானவளாக இருக்கையிலேயே உன் கணவன் காட்டுக்குப் போகும்போது மற்றொரு பெண்மணியை நாடிச் செல்கிறான்!" என்று கூறியது.

விறகுவெட்டியின் மனைவி இதை உண்மை என்று நம்பவில்லை. ஏனெனில் விறகுவெட்டியும் அவனது மனைவியும் ஒருவரையொருவர் இதயபூர்வமாக நேசித்து வந்தனர். அதனால் அவள் காக்கையிடம் கேட்டாள்: "இது நிஜந்தானா?"

காக்கை கொஞ்சம் தைரியம் அடைந்து, "ஆமாம், நானே அந்தக் காட்சியைப் பார்த்தேன்!" என்று சொல்லிவிட்டுச் சிறிது தயங்கியது. பிறகு, "அவன் உன்னிடம் நேர்மையாக நடந்து கொள்ளாதபோது நீ மட்டும் அவனிடம் விசுவாசத்துடன் இருக்க வேண்டுமா? நாமிருவரும் இணைசேர்ந்தாலென்ன?" என்று கேட்டது.

உடனே விறகுவெட்டியின் மனைவிக்குச் சந்தேகம் உதித்து விட்டது. இந்தத் துஷ்டக் காக்கைக்குத்தான் என்ன கெடுமதி? இதற்குச் சரியாகப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள். இருந்தாலும் தீர விசாரியாமல் எதுவும் செய்யக்கூடாது என்று முடிவுக்கு வந்த அவள், "இது மிகச் சிறந்த யோசனைதான். நான் வீட்டில் சில முக்கிய வேலைகளை முடிக்க வேண்டியிருக்கிறது. இப்போதைக்கு உன்னை ஒளித்து வைத்துவிட்டுப் பிறகு ஓய்வாக இருக்கும்போது உன்னிடம் வருகிறேன்!" என்றாள்.

காக்கைக்கு ஒரே மகிழ்ச்சி. அந்தப் பெண்மணியைப் பின்தொடர்ந்து சென்றது. வீட்டில் உக்கிராண அறையில் ஒரு கூடையில் காக்கையை வைத்து மூடினாள் அவள்.

அவளது கணவன் திரும்பிவரும் வேளையில் அவள் அருகிலுள்ள வீட்டிலிருந்து ஓர் அழகான பெண்ணை வரவழைத்து, வீட்டு வாசலில் நிற்கும்படி பணித்தாள். 'எனது கணவர் உண்மையிலேயே அழகிகளைத் தேடி ஓடிக்கொண்டிருப்பவரென்றால் இந்த அழகியைக் கண்டதும் வாசற்படியில் நின்று சில விநாடி அவளிடம் பேசிவிட்டுத்தான் வீட்டுக்குள் வருவார். இல்லாவிடில் நேரிடையாக வீட்டினுள் நுழைந்து வந்துவிடுவார்' இப்படி எண்ணினாள் மனைவி.

விறகுவெட்டி காட்டிலிருந்து திரும்பியபோது வாசலில் ஓர் அழகான மங்கை நிற்பதைக் கண்டான். உடனே அவன் தலை குனிந்தபடி இந்தச் செய்தியைத் தன் அருமை மனைவியிடம் எடுத்துக் கூற உள்ளே வந்தான். "நம் வீடு தேடி யாரோ ஒருத்தி வந்து வாசலில் நிற்கிறாள். அவளைப் போய்ப் பார்த்து என்ன வேண்டும் என்று கேள்!" என்று தன் மனைவியைப் பணித்தான் விறகுவெட்டி.

உடனே விறகுவெட்டியின் மனைவிக்குக் காக்கை கூறியது பொய் என்று புரிந்துவிட்டது. அந்த அழகிய பெண்ணுக்குத் தின்பண்டங்களும், பழங்களும் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தாள். பிறகு அவள் உள்ளே சென்று கூடையிலிருந்த காக்கையை எடுத்துப் போய் அடுப்பில் போட்டாள். காக்கைக்கு முதலில் என்ன நடக்கிறது என்றே புரிந்துகொள்ள முடியவில்லை! பிறகு நெருப்பை உணர்ந்ததும் 'ஓ' என்று கதறியபடி உதவி கோரியது. விறகுவெட்டி அதன் ஓலக் குரலைக் கேட்டு ஓடிவந்து காக்கையை நெருப்பிலிருந்து மீட்டான்.

விறகுவெட்டிக்கு நடந்ததை விரிவாக விளக்கினாள் அவன் அழகிய மனைவி.

விறகுவெட்டி, "உலகத்தில் இப்படி எத்தனையோ பொய்யர்கள் உலவுகிறார்கள். அவர்களது உயிரை வாங்கித் தண்டிக்கும் உரிமை நமக்கு இல்லை. இந்தக் காக்கைக்குப் போதிய தண்டனை விதித்து விட்டாய். அதன் உடம்பெல்லாம் கருகிவிட்டது பார்!" என்று சொல்லிக் காக்கையை விடுதலை செய்தான். அந்த நாளிலிருந்துதான் காக்கையின் நிறம் கருமையாயிற்று.

நன்றி: 'சோஷியல் வெல்பேர்'
தமிழாக்கம்: பி. எஸ். எம்


மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
ரின், சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கனமிக்கது ரின்: சோப்பை விட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பை விட அரை மடங்கு
அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

முப்பத்துநாலாவது அத்தியாயம்

சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

செயற்குழு முடிந்த தினத்தன்று இரவு பதினொரு மணி வரை அவர்களுக்கு வெளியே அலைச்சல் இருந்தது. மகாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைத்ததை இராவணசாமியின் கட்சியைத் தவிர வேறு எல்லாக் கட்சித் தலைவர்களும் கடுமையாகக் கண்டித்துப் பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருந்தார்கள். அதனால் நகரில் மாணவர்கள் மேல் அநுதாபம் ஏற்பட்டுப் பலர் தாங்களே தேடி வந்து நிதி உதவி செய்தார்கள். அன்றிரவு பாண்டியன் படுக்கச் செல்லும் போது ஒரு மணி. ஞாபகமாகக் காலை ஐந்து மணிக்கு அலாரம் வைத்துவிட்டுப் படுத்தான் அவன்.

நாலேமுக்காலுக்கே தூக்கம் விழித்துவிட்டது. குளியலறையில் போய் ஹீட்டரைப் போட்டு வெந்நீர் தயாரானதும் நீராடி உடை மாற்றிக் கொண்டு பிள்ளையார் கோயிலுக்குப் புறப்பட்டான் அவன். புறப்படுமுன் அறையில் படுக்கைக் கட்டிலுக்குக் கீழே இருந்த தனது பெட்டியைத் திறந்து அவன் எதையோ ஞாபகமாக எடுத்துக் கொண்டான். வெளியே குளிர் நடுக்கியது. மஞ்சு மூடிக் கட்டிடங்களும், மரம் செடி கொடிகளும் நீலப் பசுங் கனவுகள் போல் மலைகளும் வெள்ளை மஸ்லின் துணியால் மூடி வைத்த ஓவியங்கள் போன்று இயக்கமற்று இருந்தன. விடுதிகளும், பல்கலைக் கழகமும் இன்னும் விழித்துக் கொள்ளவில்லை. எங்கோ தொலைவில் ஒரு கோழி கூவும் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. பாண்டியன் விடுதிகளின் நடுவே மைதானத்தில் இருந்த 'வரந்தரு விநாயகர் கோயிலை' நோக்கி நடந்தான். மாணவர்கள் இந்தப் பிள்ளையாருக்குச் சூட்டிய குறும்புப் பெயர் 'பரீட்சை விநாயகர்'. கண்ணுக்கினியாள் தூக்கம் விழித்து எழுந்து வந்திருப்பாளோ அல்லது மறந்திருப்பாளோ என்று சிந்தித்தபடியே அவன் கோயிலை நோக்கிச் சென்ற போது அவள் முன்னதாகவே எழுந்து வந்து அங்கே காத்திருப்பதைத் தொலைவிலிருந்தே காண முடிந்தது. அந்த அதிகாலையில் வைகறைக் கன்னியாகிய உஷையே எழுந்து வந்து காத்திருப்பது போல் அவள் மிக மிக வனப்புடன் தோன்றினாள் அப்போது.

''எதற்காக இவ்வளவு அதிகாலையில் இங்கே வரச் சொன்னீர்கள்?''

அவளுக்கு மறுமொழி கூறாமல் முதலில் பிள்ளையாரைக் கும்பிட்டு வலம் வந்தான் அவன். அவளும் அவனோடு சேர்ந்து இணையாகப் பிள்ளையாரை வணங்கி வலம் வந்தான். இருள் பிரியாத பனி விலகாத அந்த வைகறையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வேறு நடமாட்டமே இல்லை. வலம் வந்து முடித்ததும் தனது அதே கேள்வியை மீண்டும் அவள் அவனிடம் கேட்டாள். அவன் பதில் சொல்லாமல் அவளை ஏறிட்டுப் பார்த்தான்; சிரித்தான். அவன் பார்வை அவள் மேல் நிலைத்திருந்தது. அப்படியே வாரி அணைத்துக் கொள்ள வேண்டும் போன்ற சுகமான கோலத்தில் அப்போது அவள் இருந்தான். இடைவெளியின் பொன் நிறம், தங்க வாய்க்காலாய் மின்னும் முதுகின் கீழ்ப் பகுதி, செழுமையான தோள்கள், குறுகுறுப்பான பார்வை எல்லாமாக அவள் அவனருகே நின்றாள்.

''என்ன காரியமாக இந்தக் குளிரில் வரச் சொன்னீர்கள்?''

''காரியத்தை நான் முன்கூட்டியே சொல்லியிருந்தால் ஒருவேளை நீ இங்கே வந்திருக்க மாட்டாய்....!''

''நீங்கள் கூப்பிட்டீர்கள் என்பதே போதுமானது. நீங்களே கூப்பிட்ட பிறகும் என்ன காரியம் என்று தெரிந்து கொண்டு வர வேண்டிய அளவு நான் உங்களுக்கு அந்நியமில்லை, என்றாலும்....''

''காரியத்தைச் சொல்லட்டுமா?''

கண்களில் ஒளி மின்ன, முகமலர்ச்சியோடும் ஒரு புன்முறுவலோடும் அவன் சொல்வதை வரவேற்கக் காத்திருப்பது போல் கைகட்டி நின்றாள் அவள். கைகளைக் கட்டிக் கொண்டு சிரித்தபடி நிமிர்ந்து நின்ற அந்தக் கோலத்தில் அவள் உடல் அழகின் செழுமையும், வளப்பமும் கோடிட்டுக் காட்டினாற் போல் நன்கு தெரிந்து அவனை மயக்கின.



''இந்த அதிகாலையில் நீ அழகாயிருக்கிறாய்.... யூ ஆர் லுக்கிங் லோ நைஸ்''

''போதும் இதைச் சொல்லுவதற்குத்தான் இந்தப் பனியிலும் குளிரிலும் வரச் சொன்னீர்களா?''

''இல்லை! வேறு காரியமும் இருக்கிறது ! இந்த அதிகாலையில் பிள்ளையார் சாட்சியாக நான் உன்னைக் கொள்ளையிடப் போகிறேன்......''

'' நீங்கள் சொல்வது பிழை ! விரும்பாதவர்களிடமிருந்து ஒருவன் தான் விரும்பியதை அடைய முயல்வதுதான் கொள்ளை. நானோ ஏற்கெனவே உங்களிடம்தான் இருக்கிறேன். என்னிடம் நீங்கள் எதையும் கொள்ளையிட முடியாது! ஞாபகம் இருக்கட்டும்......''

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவளது சந்தன நிறக் கைகளைப் பற்றி அதிலிருந்த இரண்டு ஜதைப் பொன் வளையல்களையும், வலது கை மோதிர விரலிலிருந்த வைர மோதிரத்தையும் சிரித்தபடியே கழற்றினான் பாண்டியன். அவள் தடுக்கவில்லை. சிரித்த முகத்தோடு அவனை அதைச் செய்ய அனுமதித்தாள்.

''ஒரு நிமிஷம்.... இதோ இன்னும் ஒன்று மீதம் இருக்கிறது....'' என்று கூறியபடியே தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும் கழற்றி அவன் கைகளில் வைத்தாள் அவள்.

''இந்தச் சங்கிலி ஏன் இவ்வளவு பளபளப்பாகவும் பிரகாசமாகவும் இருக்கிறது தெரியுமா ?''

''ஏனாம்?''

''தன்னைவிடப் பிரகாசமான ஒரு மேனியில் இவை இதுவரை பிணைந்திருந்ததுதான் காரணம்.''

அவள் முகம் சிவந்தது. புன்முறுவலுடன் அவனைத் தலையைச் சாய்த்து ஒயிலாகப் பார்த்தபடி, ''வர்ணனை எல்லாம் போதும்! என்ன செய்யப் போகிறீர்கள் இதை ?'' என்று கேட்டாள் அவள்.

'' உனக்கே இதற்குள் புரிந்திருக்க வேண்டும்! மகாநாட்டைப் பிரமாதமாக நடத்திவிட்டுப் பாக்கி நிற்கிறவர்களுக்குப் பணம் தர முடியாமல் மணவாளன் மிகவும் சிரமப்படுகிறார். பந்தல் எரிந்து போனதால் பந்தல்காரருக்கும், மின்சார காண்ட்ராக்ட் ஆளுக்கும், பர்னிச்சர் விநியோகம் செய்தவர்களுக்கும் நிறையப் பணம் நஷ்டஈடு தர வேண்டியதாகிவிட்டது. அண்ணாச்சி சைக்கிள்களை விற்றுப் பணம் கொடுத்திருக்கிறார். பூதலிங்கமும் பணம் கொடுத்திருக்கிறார். நான்கூட என் கடிகாரம், மோதிரம் எல்லாவற்றையும் லேக் அவென்யூவிலுள்ள அடகுக் கடையில் வைத்துப் பணம் வாங்கியிருக்கிறேன். நீ இருநூறு ரூபாய் நன்கொடை ஏற்கெனவே கொடுத்திருக்கிறாய். இப்போது இவற்றையும் அடகு வைக்கப் போகிறேன்.....''

''நீங்கள் இதை எல்லாம் விற்றே மணவாளனிடம் கொடுத்தாலும் எனக்குச் சம்மதம்தான்...நான் நாயினாவிடமும் அம்மாவிடமும் ஏதாவது பொய் சொல்லிக் கொள்வேன்...''

''நான் அப்படிச் செய்ய மாட்டேன். அடகுதான் வைக்கப் போகிறேன். நானே இதை விரைவில் உன்னிடம் மீட்டுத் தருவேன். அதுவரையில் நீ என்னை மன்னிக்க வேண்டும்.... நான் இப்படிச் செய்வது சரிதானா என்று எனக்கே தயக்கமாக இருக்கிறது......''

''போதும்! வாயை மூடிக் கொள்ளுங்கள். இந்த மன்னிப்பும் புலம்பலும் தான் எனக்குப் பிடிக்கவில்லை. யாரிடம் யார் மன்னிப்புக் கேட்பது....? யார் யாரிடம் தயங்குவது ?''

''இன்று வெள்ளிக்கிழமை! உன் கைகளில் உள்ள வளைகளைப் பறித்துக் கொண்டு உன்னை வெறும் கைகளோடு அனுப்ப எனக்கு விருப்பமில்லை'' என்று கூறிக் கொண்டே தன் 'பேண்ட்' பாக்கெட்டில் கையை விட்டு எதையோ வெளியே எடுத்தான் பாண்டியன்.

'' உனக்கு மறந்திருக்காது என்று நினைக்கிறேன் ! நான் மாணவர் பேரவைத் தேர்தலுக்கு நிற்கத் தயங்கிய போது அண்ணாச்சி கடையில் நீ என் முன் கழற்றி வீசிய வளையல்கள் இவை. 'எப்போது திருப்பித் தர வேண்டுமோ அப்போது இந்த வளையல்களைத் திருப்பித் தருவதாக' அன்று நானே உன்னிடம் வாக்களித்திருந்தேன்....''

''ஆமாம் ! ஆமாம் ! நீங்கள் பெரிய வாக்குறுதி வீரர்தான்.... தெரியும்'' என்று சிரித்துக் கொண்டே அவனுக்குமுன் கைகளை நீட்டினாள் அவள். அவனே அந்த வளையல்களை அவள் கைகளில் அணிவித்தான். அவள் அவனைக் கிண்டல் செய்தாள்:

''நன்றாக வளையல் அணிவிக்கிறீர்கள். ஒரு வளைகூட உடையவில்லையே? நீங்கள் வளையல் வியாபாரத்துக்கே போகலாம் போலிருக்கிறது.''

''இவ்வளவு அழகான கைகள் கிடைத்தால் அதையும்கூடச் செய்ய லாம். உன் கைகளுக்கு வளையல்கள் அழகைத் தரவில்லை. எந்த வளையல் களுக்கும் உன் கைகளே அழகைத் தரும்.......''

''போதும்! போதும்! பெண்களைப் புகழ்கிறபோது அசடு வழியாத ஆண்களே இருக்கமாட்டார்கள் போல் இருக்கிறது ?''

'' அது எப்படி முடியும்? ஆண்களை அசடு வழியச் செய்வதே உன் போன்ற பெண்கள்தானே ?''

உடன் இருவருடைய சிரிப்பொலி களும் இணைந்து ஒலித்தன. பொங்க லுக்கு ஊர் புறப்படுவதைப் பற்றி அவள் கேட்டாள். போகும்போது சேர்ந்து போகலாம் என்று அவன் சொன்னான். பனியும் இரு ளும் விலகி மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருந் தது. அவள்விளையாட்டாகக் கேட்டாள்:

'' புறப்படலாமா? அல்லது இன் னும் என்னிடம் நீங்கள் கொள்ளையிட ஏதாவது மீதம் இருக்கிறதா?''

'' இருக்கிறது..... ஆனால் பெரிய வர்கள் நாளும் கிழமையும் பார்த்துக் கொடுத்த பின்புதான் சிலவற்றை ஒரு பெண்ணிடமிருந்து ஓர் ஆண் கொள்ளை யிட முடிகிறது..... என்ன ? நான் சொல்வது உண்மைதானே ?''

''ஆகா ! ஒரு நோபல் பரிசே கொடுக்க வேண்டிய அளவுக்குப் பேருண்மைதான் ! போய் வாருங்கள். ஒரு விஷயம் ஞாபகம் இருக்கட்டும். அடுக்கு கடைக்குத் தனியே போகா தீர்கள். போன மாதம் இங்கே ஆண் டாள் விடுதியில் தங்கியிருக்கும் என் சிநேகிதி ஒருத்தி மருத்துவக் கல்லூரி யில் படிக்கும் தன் காதலன் ஹாஸ்டல் ஃபீஸ் கட்ட நகைகளை உதவியிருக் கிறாள். அவன் தனியாக அடகுக் கடைக்குப் போய்,



'ஒரு மாணவனுக்குப் பெண்களின் நகை ஏது?' என்ற சந்தேகத்தோடு அடகுக் கடை சேட் போலீசுக்கு ஃபோன் செய்து கேலிக்கூத்தாகி அப்புறம் அவளே நேரில் போய் உதவ வேண்டியதாகி விட்டது. போகும் போது சொல்லுங்கள். நானும் கூட வருகிறேன்'' என்றாள் கண்ணுக்கினியாள். காலை பதினொரு மணிக்கு அண்ணுச்சி கடைக்கு அவளை வரச் சொன்னான் பாண்டியன். அவள் விடைபெற்றுக் கொண்டு சென்றாள். அவள் நடந்து செல்லும் அழகைச் சிறிது நேரம் நின்று பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பின்னால் யாரோ வருகிற காலடி ஓசை கேட்கவே திரும்பியவன் பூதலிங்கம் சார் பனியனும் துண்டுமாகக் கோயிலுக்கு வந்து கொண்டிருப்பது தெரிந்ததும் கையிலிருந்த வளைகளையும் செயினையும், மோதிரத்தையும் 'பேண்ட்' பாக்கெட்டில் அவசரம் அவசரமாகத் திணித்துக் கொண்டு நிமிர்ந்து அவரை வணங்கினான்.

''பாண்டியன்! அப்புறம் மறந்து விடாமல் என்னை வீட்டில் வந்து பார்! 'ஜுவாலஜி புரொஃபஸர் தங்கராஜு' உங்கள் மகாநாட்டு நிதிக்காக என்னிடம் நூறு ரூபாய்க்கு ஒரு செக் கொடுத்திருக்கிறார்..... ஸோஷியாலஜி வீரராகவன் ஒரு ஐம்பது ரூபாய் தந்திருக்கிறார். அதையெல்லாம் வாங்கிக் கொண்டு போ.... இன்னும் சிலரிடம் சொல்லியிருக்கிறேன். ஏதாவது கிடைக்கலாம்... பாவம்.... உங்களுக்கு எல்லாம் ரொம்பச் சிரமமாயிருக்கும். பந்தல் தீப் பிடித்திராவிட்டால் இத்தனை பணத் தட்டுப்பாடு வந்திருக்காது....'' என்றார் அவர். தங்களுக்காக அவர் எடுத்துக் கொள்ளும் சிரத்தையைப் பாராட்டி நன்றி சொன்னான் பாண்டியன்.

அவர்கள் கோயிலிலிருந்து திரும்பும் போது விடுதிக்கும் ஸ்டாஃப் குவார்ட்டர்ஸுக்கும் வழி பிரிகிற இடத்தில் அவன் விடைபெறும் போது, ''பாண்டியன்! நான் சொல்வது நமக்குள் இருக்கட்டும். கீப் இட் இன் யுவர் மைண்ட் அண்ட் பீ கேர்ஃபுல்! வி.ஸி. பொங்கல் முடிந்து பல்கலைக் கழகம் திறந்ததுமே ஒரு வாரத்துக்குள் அநேகமாகக் கான்வகேஷனை நடத்தி விடுவார் என்று தெரிகிறது. கான்வகேஷனுக்குள் எதையாவது குற்றம் சாட்டி உன்னையும் வேறு சில 'ஆக்டிவ் — ஸ்டூடன்ஸையும்' பல்கலைக் கழகத்திலிருந்து 'சஸ்பெண்ட்' செய்துவிடக்கூட வி. ஸி. தயாரா யிருப்பார். இது யூனிவர்சிடிக்குள்ளே உள்ள விரோதம். யூனிவர்ஸிடிக்கு வெளியிலேயோ இராவணசாமியின் ஆட்கள் அண்ணுச்சியின் மேல் கடுங் கோபத்தோடு கறுவிக் கொண்டிருக்கிறார்கள். ஜாக்கிரதை.... டோண்ட் அண்டர் எஸ்டிமேட், எனிதிங்.....'' என்று பாசத்தோடு எச்சரித்தார். தம்மைப் பற்றியும் அவர் பாண்டியனிடம் கூறினார்.

''என் மேல்கூட வி.ஸி.க்கு ஒரு கண் இருக்கிறது அப்பா! நான் மாணவர்களுக்கு வேண்டியவனாக இருப்பதும் தன்மான உணர்வுள்ள பல லெக்சரர்களையும், பேராசிரியர்களையும் வி.ஸி.க்கு எதிரான அணியில் திரட்டியிருப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லை. கதிரேசன் விவகாரத்தில் அநாவசியமாக என் வீட்டில் 'போலீஸ் ரெய்ட்' நடத்தத் தூண்டியது வி.ஸி.தான். இதற்கெல்லாம் நான் பயந்து ஒடுங்கிவிடமாட்டேன். என்னால் அடிமையா யிருக்க முடியாது. பாவங்களில் எல்லாம் மிகப்பெரிய பாவம் படித்தவர்களின் அடிமைப் புத்திதான். படித்தவர்களே அடிமைப்படுகிற தேசத்தின் தலைவிதியைக் கடவுள் கூட நேராக்க முடியாது. இந்த வேலையை உதறிவிட்டு லேக் அவென்யூவில் 'பூதலிங்கம் டுட்டோரியல்காலேஜ்' என்று ஒரு போர்டு மாட்டிக்கொண்டு உட்கார்ந்தேன் என்றால் என் குடும்பத்தை நான் காப்பாற்றிக் கொள்ள முடியும். அப்படி ஒரு நாள் வரத்தான் போகிறது. அறிவுள்ளவர்களிடம் பணிவாக நடப்பது வேறு. புத்தியில்லாதவர்களிடம் அடிமைகளாக இருப்பது வேறு. இந்தப் பல்கலைக் கழக நிர்வாகத்தை இன்று வி.ஸி. நடத்தவில்லை. மறைமுகமாக இராவணசாமியும், கோட்டச் செயலாளர் குருசாமியும், அமைச்சருக்கு டாக்டர் பட்டம் வாங்கிக் கொடுக்கத் தரகு வேலை பார்க்கும் எஸ்டேட் அதிபர் ஆனந்தவேலுவும்தான் வி.ஸி.யை ஆட்டிப் படைக்கிறார்கள். ஸீ! வீ காண்ட் பௌ அவர் ஹெட்ஸ் பிஃபோர் அப்ஸ்டார்ட்ஸ்... அண்ட் பிம்ப்ஸ்.....''

''எங்களுக்காகவாவது நீங்கள் பல்கலைக் கழகத்தில் இருக்க வேண்டும், சார்! பல நூறு ஆசிரியர்கள் வேலை பார்க்கும் ஒரு பெரிய பல்கலைக் கழகத்தைப் பெருமைப்படுத்தும் உண்மை ஒளி உங்களைப் போல் யாராவது ஒருவர் இருவரிடம்தான் இருக்க முடியும் சார்'' என்றான் பாண்டியன்.

''இங்கே பயிலும் உன் போன்ற மாணவர்களை எண்ணித்தான் ராஜிநாமாச் செய்யும் எண்ணத்தை ஒவ்வொரு தடவையும் நான் ஒத்திப் போடுகிறேன் பாண்டியன்...'' என்று கூறி

விட்டு ஸ்டாஃப் குவார்ட்டர்ஸை நோக்கி நடந்தார் அவர். பாண்டியன் விடுதி அறைக்குத் திரும்பினான். ஒரு மோசமான அரசாங்கம் கல்விக்கூடங்களிலிருந்து களத்துமேடு வரையில் எல்லா இடங்களிலும் நல்லவர்களையும் திறமைசாலிகளையும் ஒடுக்கிவிட்டு இரண்டாந்தரமானவர்களையும், தீயவர்களையும் அந்தந்த இடங்களில் அதிகாரத்தில் உட்கார்த்தி வைத்துவிட்ட கொடுமையைச் சிந்தித்தபோது மணவாளன் அடிக்கடி சொல்லும் அந்த வாக்கியங்களைப் பாண்டியன் நினைவு கூர்ந்தான். 'ஒரு பெரிய சத்தியப் பெருக்கில் இந்தப் பொய்கள் எல்லாம் கரைந்துவிடும். கரைந்தாக வேண்டும்! அதுவரையில் பொறுமையாயிருப்போம்.' இரண்டாம் தடவையாக எண்ணியபோது மணவாளனின் இந்தப் பொறுமையைவிடக் கதிரேசனின் அந்த அவசரம்தான் சரியோ என்றுகூட ஒரு பிரமை உண்டாயிற்று அவனுள்.

அதிகாலையில் கண்ணுக்கினியாளிடம் பேசி அனுப்பிய பின்னர் பிள்ளையார் கோவிலில் பேராசிரியர் பூதலிங்கத்தையும் சந்தித்துப் பேசிவிட்டுப் பாண்டியன் அறைக்குத் திரும்பியபோது நன்றாக விடிந்து விட்டிருந்தது. அறையில் அவன் இல்லாதபோது கதவு இடுக்கு வழியாக மல்லை இராவணசாமியின் கட்சியினர் போட்டிருந்த ஒரு துண்டுப் பிரசுரம் கிடந்தது. அதில் பாண்டியனையும், அண்ணாச்சியையும் 'சாதிப் பித்துப் பிடித்தவர்கள்' என்று வர்ணித்திருந்தார்கள். அவர்கள். சாதிகளை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டே மல்லை இராவணசாமியின் கட்சியினர் புதிய புதிய சாதிகளை உண்டாக்கியிருந்தார்கள். 'இந்த நாட்டில் சாதிகளை ஒழிக்க வேண்டும் என்று மேற்போக்காகப் போராடும் ஒவ்வொருவரும் தங்கள் சாதிகளைத் தவிர மற்ற எல்லாச் சாதிகளையும் ஒழிக்கவே அப்படிப் போராடுவது போல் தெரிகிறது. சாதி பேதங்களை ஒழிப்பது வேறு. சாதிகளை ஒழிப்பது வேறு. இங்கே பேதங்களை ஒழிப்பதற்குப் பதில் பேதங்களை அழிப்பதற்குப் பதில் மனிதர்களையே அழிக்க முயல்கிறார்கள்' என்று மணவாளன் ஒரு முறை சொல்லியிருந்ததை நினைவு கூர்ந்தான் பாண்டியன். சாதி பேதங்களை ஒழிக்கும் இயக்கங்கள் சிலவற்றின் பக்குவமில்லாத பிரசாரகர்கள் அவற்றை ஒழிக்கும் முயற்சிகளின் மூலமாகவே அவற்றை நன்றாக ஞாபகப் படுத்தியும், வற்புறுத்தியும் வளர்த்தும் விடுகிறார்கள். பிரசாரங்கள் என்பவை இரு முனையும் கூரான அரிவாள் போன்றவை. அவற்றை அளவாகப் பயன்படுத்தா விட்டால் அவை அழிக்க வேண்டியவற்றை விட்டு விட்டு வளர்க்க வேண்டியதை அழித்து விடவும் கூடும். ஒருவர் செய்யும் நன்மை தீமைகளை அவருடைய சாதியை இணைத்துப் புகழவும் பழிக்கவும் தொடங்குவதுகூட ஒரு வகையில் பேதங்களை வளர்க்கவே உதவும் என்பது புரியாமல் தன்னையும், அண்ணாச்சியையும் மணவாளனையும், தாங்கள் ஒரு மாணவர் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி விட்டதைப் பார்த்து அடைந்த வயிற்றெரிச்சலுடன் இராவணசாமி கட்சியினர் பழி கூற முற்படுவது பாண்டியன் மனத்தை மிகவும் வருத்தியது. ஆனால் அந்தப் பொய்ப் பிரசாரத்தில் அவன் அயர்ந்து விடவோ, தளர்ந்து விடவோ இல்லை.


சத்திய வெள்ளம்



பிரசாரங்கள் என்பவை இருமுனையும் கூரான அரிவான்களைப் போன்றவை. அவற்றை அளவாகத் தெரிந்து பயன்படுத்தா விட்டால் அவை அழிக்க வேண்டியவற்றை விட்டு விட்டு வளர்க்க வேண்டியதையே அழித்து விடவும் கூடும்.

நவீனகாலத்தின் சாதிபேதங்கள் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால்தான் வருகின்றன என்பதை அவன் உணர்ந்திருந்தான். சிறுபான்மை வகுப்பார் எதைப் பற்றிப் பேச எழுந்தாலும் உடனே அவர்களைச் சாதிப் பேரைச் சொல்லித் திட்டி விடுவதன் மூலம் சாதி பேதம்தான் வளருமே ஒழிய சமத்துவம் வளராது. எல்லாச் சாதி பேதமும் ஒழிய வேண்டும் என்று கூப்பாடு போட்டுக் கொண்டு சிலரைச் சாதிப் பேர் சொல்லி ஞாபகமாக வசைபாடும் நாகரிகமான தந்திரம் மல்லை இராவண சாமி கட்சிக்குக் கை வந்த கலையாகி இருந்தது. 'கீழ் சாதிக்காரர்களை உயர்த்துவதாக மேல் சாதிக் காரர்களையும் மேல் சாதிக்காரர்களை உயர்த்துவதாகக் கீழ்ச் சாதிக்காரர்களையும் ஏமாற்றி மிரட்டி நடுவே பிழைப்பு நடத்தினார்கள் அவர்கள். பொருளாதாரத் திட்டம் எதுவும் இல்லாமல், 'இது சாமான்யர்களின் ஆட்சி! இதைக்

மின் வெட்டு - சிரிப்பை வெட்டாதே! - 2



''இந்த 'பவர் கட்' பத்தி என்னங்க நினைக்கிறீங்க?''
''இதாவது கொஞ்ச நாளைக்குத்தானே! வீட்டிலே பாருங்க, வருஷம் முழுவதுமே என் 'பவரைக் கட்' பண்ணிடுறானே என் மனைவி!''

கவிழ்க்க முயல்வோர் எல்லாம் மேட்டுக் குடியினர்' — என்று ஒப்பாரி வைத்தார்கள். அன்று பகலில் கண்ணுக்கினியாளுடன் சென்று லேக் அவென்யூவில் உள்ள சேட் கடையில் அவளது வளைகளையும், மோதிரத்தையும், தங்கச் சங்கிலியையும் அடகு வைத்துப் பாண்டியன் பணம் வாங்கிக் கொண்டு வந்தான். பணத்துடன் அவனும் கண்ணுக்கினியாளும் மணவாளனைப் போய்ப் பார்த்த போது காலையில் தன் அறையில் மல்லை இராவணசாமி கட்சியினர் போட்டிருந்த துண்டுப் பிரசுரத்தைப் பற்றிச் சொல்லி வருத்தப்பட்டான் பாண்டியன்.

''இதுமாதிரி விஷயங்களை 'இக்னோர்' செய்யப் பழகிக்கொள் பாண்டியன்! சாதிகளின் உயிர் போய் விட்டது. சாதிகள் என்றோ செத்து விட்டன.. அவற்றின் பிரேதங்களை வைத்து இங்கே சிலர் பணம் பண்ணுகிறார்கள்! தெருவில் அநாதைப் பிணங்களைக் காட்டி உயிருள்ள பிணங்கள் பணம் சேர்ப்பதை நீ பார்த்ததில்லையா? அப்படித்தான் இதுவும்'' என்று ஆறுதல் கூறினார் மணவாளன்.

''சான்றோர்கள் என்று தங்களைக் கருதிக் கொள்ளும் பொழில் வளவனார், பண்புச் செழியனார் போன்ற தமிழாசிரியர்களே மாணவர்களிடையே சுயநலத்துக்காக இந்தப் பேதங்களைப் பரப்புகிறார்கள்.''

''இங்கே வேறு வழியில்லாத காரணங்களால் சிலர் சான்றோர்கள் போல் இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உண்மையில் சான்றோர்களாகி விட மாட்டார்கள். சான்றோர்களாகச் சபிக்கப் பட்டவர்கள் எல்லாம் சான்றோர்கள் ஆகமுடியாது பாண்டியன்!''

ஏற்கெனவே திட்டமிட்டபடி அன்று மாலை அவர்கள் மகாநாட்டுப் பந்தலுக்கு 'எதிரிகள் விளைத்த வன்முறையைக் கண்டித்து' ஒரு பொதுக் கூட்டம் நடத்தினார்கள். பாதிக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போதே சரியாகப் பத்து மணியளவில் கூட்டத்துக்கு லைசென்ஸ் கொடுத்த நேரம் முடிந்து விட்டதாகப் போலீஸார் 'மைக்'கை நிறுத்திக் கூட்டத்தை முடிக்கச் சொல்லி விட்டார்கள். மறுநாள் அதே இடத்தில் மல்லை இராவணசாமி தலைமையில் நடந்த ஒரு கூட்டம் பதினொரு மணி வரை நடந்தபோது மாணவர்கள் போய்க் கூப்பாடு போட்டு எதிர்த்தார்கள். போலீஸார் தர்மசங்கடமான நிலையில் அந்தக் கூட்டத்தை முடிக்கச் சொல்லியும் இராவணசாமி மறுத்தார். மாணவர்கள் கூப்பாடு போட்டுக் கூட்டத்தை முடிக்கச்செய்து விட்டார்கள். ''ஆளும் கட்சிக் கூட்டமானால் விடிகிறவரை மைக் லைசென்ஸ் உண்டா? எங்கள் கூட்டமானால் மட்டும் பத்து மணிதான் அதற்கு எல்லையா? இது என்ன நியாயம்?'' என்று பாண்டியனே அந்த எஸ். ஐ.யிடம் கேட்டான். அந்த எஸ். ஐ. அதற்குப் பதில் சொல்ல முடியாமல் சிரித்து மழுப்பினார்.

''என் கூட்டம் விடிய விடியக் கூட நடக்கும்! நீ யார் அதைக் கேட்க?'' என்று சவால் விட்ட மல்லை இராவணசாமியைப் பேச விடாமல் கூப்பாடு-போட்டு மாணவர்கள் அந்தக் கூட்டத்தைப் பாதியிலேயே முடித்துவிடச் செய்ததும் அவர் கடுங் கோபத்தோடு கறுவிக் கொண்டு போனார். கூட்டம் நடந்த இடம் அண்ணாச்சி கடை வாயிலாக இருந்ததால் அவர்தான் மாணவர்களைத் தூண்டி யிருப்பதாகப் புரிந்து கொண்டு இராவணசாமியின் ஆட்கள் தங்கள் கூட்டத்தை முடிக்கு முன், ''இங்கே சில சைக்கிள் கடை பயில்வான்கள் மாணவர்களை இப்படித் தூண்டி விடுவது எங்களுக்குத் தெரியும். நாங்கள் நினைத்தால் அவர்களைப் பூண்டோடு அழித்து நசுக்கிவிட முடியும்'' என்று பேசியிருந்தார்கள். அண்ணாச்சி அதைக் கேட்டுப் புன்னகை புரிந்தார்.

''நான் ஒரு சத்தியாக்கிரகி! வன்முறைகள் புரிவதைக் கோழையின் செயல்களாக நினைக்கிறவன். என்னைப் பற்றி இப்படிப் பேசறதாலே இவங்க தான் தரக் குறைவா நடந்துக்கிறாங்க. இதனாலே நான் கெட்டவனாகி விடமாட்டேன். என்னைக் கெட்டவனாகக் காண்பிக்க இவங்க முயற்சி பண்ணிட்டதாலே நான் கெட்டவனாகிவிடவில்லை'' என்று அவர் மனம் நினைப்பதைக் காட்டுவது போலிருந்தது அந்தத் தூய புன்னகை.

(தொடரும்)



இன்னும் மதில்மேல் பூனையாக இருக்கிறீர்களா?

விவேகமான காரோட்டிகளுடன் இது வரை சேரவில்லையானால், உடனே அவர்கள் பக்கம் குதியுங்கள். ஆம்கோ பவர் ப்ளஸ் பாட்டரி உபயோகிக்கத் தொடங்குங்கள். முன்னேற விரும்பும்போது, முட்டுக்கட்டையினால் தடுமாறி நின்றுவிடாதீர்கள்.

தொழில்துறை, விவசாயம், பாதுகாப்பு, போக்குவரத்து—ஆகிய நாட்டின் ஒவ்வொரு துறைக்கும் ஏற்றதொரு பாட்டரியை ஆம்கோ வழங்குகிறது. உலகின் பல நாடுகளிலும் விரும்பிப் போற்றப்படும் பாட்டரியாகத் திகழ்கிறது ஆம்கோ பாட்டரி!

ஆம்கோ பாட்டரிகளே வேண்டுமென வற்புறுத்துங்கள்—அவை உறுதியானவை—நீடித்துழைப்பவை.



ஆம்கோ பாட்டரீஸ் லிமிடெட்

யூனிடி பில்டிங்ஸ், பெங்களூர்-2

AM-102 MAC (B) TM

'தட்டியில் புகுந்தால், நான் கோலத்தில் புகுவேன்' என்னும் தமிழ்ப் பழமொழி நெதர்லாந்துக்கும் தெரிந்திருக்கிறது. மூன்று பாத்திரங்களை இப் பழமொழிக்குச் சான்றாகப் படைத்து ஸ்ரீ பிராங்க் வெர்ன் அழகானதொரு கதையைத் தருகிறார்.

கையும் களவும்

பிராங்க் வெர்ன்



ஸ்ரீமதி திக்ஸ்னித் அந்தப் பெண்ணைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டாள். பொதுவாக அன்றாட அலுவல்களை முடித்துக் கொண்டு அவள் தன் அறைக்குத் திரும்ப இரவு வெகு நேரம் பிடிக்கும். அப்படி வேலை ஒன்றும் அதிகம் இல்லை. சாப்பாட்டு அறைக்குச் சென்றால், ஆற அமர இருந்து சுவைத்து உணவு அருந்துவாள். பழங்கள் சாப்பிடுவாள். ருசித்து ஒரு பெக் பிராந்தி பருகுவாள். கடைசியில் சிகரெட்டைப் புகைத்தவாறு இரவு வெகு நேரம் வரை வம்பு அடிப்பாள். ஆனால் இன்று ஏனோ சீக்கிரம் திரும்பி விட்டாள், இரண்டு தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டு, நிம்மதியாகத் தூங்கலாம் என்ற நினைப்பில். ஆனால் அறைக்குள் நுழைந்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஒரு பெண் அவளது பெட்டிகள் அனைத்தையும் திறந்து போட்டு விலை உயர்ந்த நகைகள் அவ்வளவையும் கையாடிக் கொண்டிருந்தாள்.

இதைக் கண்ணுற்ற அவள் நிலை என்னவாயிற்று, வந்த ஆத்திரத்தில் அவள் அந்தப் பெண்ணிடம் என்ன சொன்னாள் என்பவையெல்லாம் அவ்வளவு முக்கியமானவை அல்ல.

அவள் ஹோட்டல் சூழலில் அவ்வளவாகப் பழகியவள் அல்ல. அறைக்குள் நுழைந்து பொருளைத் தேட்டை போடும் பெண்ணும் தன் தொழிலில் புதியவளாகவே தோன்றினாள். ஏனென்றால், அவளே ஸ்ரீமதி திக்ஸ்னித்தின் உளைச்சலைக் கண்டு, வெகு அடக்கமாகத் தொலைபேசியை நோக்கிச் சென்றாள். தொலைபேசிக் குழலை எடுத்து, எண்களை இணைத்துக் கூப்பிட்டாள்: ''ஹலோ, போலீஸ்! நான் திருடி விட்டேன்!'' என்று தொடங்கி ஹோட்டலின் பெயர், அறையின் எண் ஆகியவற்றையெல்லாம் விவரமாகக் கூறினாள். அப்புறம் ஃபோனை வைத்துவிட்டு ஒரு நாற்காலியில் போய் உட்கார்ந்து தலையைப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

ஸ்ரீமதி திக்ஸ்னித் மௌனமாக அந்தப் பெண்ணைப் புகழும் பார்வையோடு பார்த்தாள். அவள் எப்பொழுதுமே உலக விவகாரத்தில் தன்னைக் கெட்டிக்காரி என்று காட்டிக்கொள்வதில் பெருமைப்படுபவள். ஆனால் உள்ளுக்குள் அதே பழைய குடியானவனின் மனைவியாகத்தான் இருந்தாள்.

கோதுமை அறுவடை செய்ய ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்ததனால், அவள் கணவனுக்கு நல்ல சொத்துச் சேர்ந்திருந்தது. அதன் பலனாக இன்று ஸ்ரீமதி திக்ஸ்னித் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த நவநாகரிகப் பெண்மணியெனத் தன் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

அறைக் கதவைத் தட்டும் ஒலி கேட்டது. சாதாரண உடையில் ஒருவன் உள்ளே நுழைந்தான். ''இன்ஸ்பெக்டர் டேமர்ஸ் தங்கள் பணிக்காக வந்திருக்கிறேன். என்ன நடந்தது என்பதை நான் அறியலாமா?'' என்று விநயமாகக் கேட்டான் அவன்.

ஸ்ரீமதி திக்ஸ்னித் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள். அந்தப் பெண் சிறிதும் எதிர்த்து வாதாடவில்லை. ஆனால் ஸ்ரீமதி திக்ஸ்னித் தன் பருத்த உடலைக் குலுக்கிய வண்ணம், ''இன்ஸ்பெக்டர்! இதோ இருக்கும் நகைகளின் பெறுமானம் எவ்வளவு தெரி

நெதர்லாந்துக் கதை

யுமா? குறைந்தது ஐம்பதினாயிரமாவது பெறும்!'' என்று கூறியபொழுது அந்தப் பெண்ணுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ''பொய்! சுத்தப் பொய்! இது அதிகபட்சம்...!'' என்று தொடங்கினாள்.

''உன்னை யாரும் இங்கு மதிப்பீடு செய்யச் சொல்லவில்லை. திருடுவதையும் திருடிவிட்டு இந்த வாய் வேறா? பேசாமல் இரு!'' என்று அவளை ஓர் அதட்டல் போட்டான்.

ஸ்ரீமதி திக்ஸ்னித்துக்கு ஒரே மகிழ்ச்சி: 'இன்ஸ்பெக்டர் என்றும் இப்படித்தான் இருக்க வேண்டும்.'

''விஷயம் தெளிவு! இதற்குச் சாட்சி விசாரணை தேவையில்லை. இந்தப் பளிச்சிடும் நகைகளும், கையும் களவுமாய்ப் பிடிபட்ட பெண்ணுமே போதிய சாட்சிகள்! எனவே...'' என்று கூறிய இன்ஸ்பெக்டர் டேமர்ஸ் தன் டயரியை எடுத்துச் சுருக்கமாக ஓர் அறிக்கை எழுதிக் கொண்டான். அதில் ஸ்ரீமதி திக்ஸ்னித்தின் கையெழுத்தை வாங்கிக் கொண்டான். அப்புறம் கைப் பையிலிருந்து கை விலங்கை எடுத்தான்.

''என்ன இது? நீங்கள் உண்மையிலேயே..'' ஸ்ரீமதி திக்ஸ்னித் மறுப்புத் தெரிவிக்க முனைந்தாள்.

''அம்மணி! நான் விபத்தை விலைக்கு வாங்கிக்கொள்ள முடியாது! என்னை இந்த ஹோட்டலுக்குத் தருவித்தது இது முதல் தடவையல்ல. இதுபோன்ற காரியங்களுக்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும்! தாட்சிண்யம் கூடாது. நான் நாளைக்கு உங்களை நீதிமன்றத்தில் சந்திக்கிறேன்!'' என்று கூறிப் புறப்பட்டான் டேமர்ஸ்.

சில எட்டுகள் எடுத்து வைத்தவன் திரும்பி, ''சரியாகப் பதினொரு மணிக்கு வாருங்கள்! இந்த நகைகளை நான் அங்கு சான்றாகக் காட்ட வேண்டும். விசாரணைக்குப் பின் நகைகள் உங்களுக்குத் திருப்பித் தரப்படும். நான் இந்த நகைகளுக்கு ஒரு ரசீது தருகிறேன்!'' என்றான். உடனே தனது கைப்பெட்டியிலிருந்து ஒரு ரசீதுப் புத்தகத்தை எடுத்தான். மளமளவென்று நகைகளின் விவரங்களைக் குறித்தான். கையெழுத்திட்டு ரசீதைக் கிழித்து ஸ்ரீமதி திக்ஸ்னித்தின் கையில் கொடுத்தான்.

''மெய்தான், மெய்தான்! சாட்சிக்கு நகைகள் தேவைப்படும்தான்! எடுத்துப் போகும்பொழுது ரசீது கொடுப்பதும் நியாயம்தான்!'' ஸ்ரீமதி திக்ஸ்னித் மடைவாய் திறந்தாற்போல் சொல்லி முடித்தாள்.

இன்ஸ்பெக்டர் வெளியே வராந்தாவை எட்டிப் பார்த்தான், அது வெறிச்சோடிக் கிடந்தது. ''ஹோட்டலின் பெயரையும் தங்கள் மரியாதையையும் காப்பாற்றுவதற்காக ஊரைக் கூட்டாமல் இருந்த தங்கள் அறிவுத் திறனைப் பாராட்டுகிறேன். இந்த விஷயத்தைப் பெரிது படுத்துவது உசிதமாகாது என்பதுதான் என் எண்ணமும். காதோடு காது வைத்தாற்போல் நடவடிக்கையை நடத்தி முடிப்போம். அதற்குத் தங்கள் முழு உதவியும் கிட்டும் என்று நம்புகிறேன்!'' என்றவன் ஸ்ரீமதி திக்ஸ்னித்துக்கு வணக்கம் தெரிவித்து விட்டு விலங்கு மாட்டிய கையோடு அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ஸ்ரீமதி திக்ஸ்னித்துக்கும் மகிழ்ச்சி, தான் சாமர்த்தியமாக நடந்து கொண்டு விட்டதாக!

''இனி நமக்கு வேண்டிய பொழுது இருக்கிறது!'' வராந்தாவைத் தாண்டியதும், விரைவாகக் கைவிலங்கைக் களைந்த வண்ணம் அந்தப் பெண் டேமர்ஸைப் பார்த்து முறுவலித்தவாறே கூறினாள்: ''நாளைக்குச் சரியாகப் பதினொரு மணிக்குத்தானே?''

டேமர்ஸ் மெதுவாகத் தலையை அசைத்தான்: ''அந்த நேரத்துக்கு நாம் ஆப்பிரிக்காவில் இருப்போம். ஆனால் டார்லிங்! உண்மையில் இந்த நகைகள் ஐம்பதினாயிரம் பெறுமா?'' என்று கேட்டு ஓர் ஐயத்தை எழுப்பினான்.

ஹிந்தியிலிருந்து தமிழாக்கம்: —**ரா. வீ.**



கடலில் நடந்த குழப்பம்

ஸ்டீபன் லீகாக்

ஸ்டீபன் லீகாக் என்ற ஆங்கில நகைச்சுவையாசிரியர். கடல் கதைகளையும் அவற்றை எழுதும் ஆசிரியர்களையும் கையாண்டி செய்து எழுதிய கதை இது

1867ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தான் ''லானி லாலி'' என்ற கப்பலின் பிரதம அதிகாரிக்கு அடுத்த இரண்டாவது அதிகாரியாகப் பதவி ஏற்றேன்.

என்னைப் பற்றி ஒரு வார்த்தை முதலில் சொல்லி விடுகிறேன்.

நான் நல்ல உயரமுள்ள, கட்டுமஸ்தான தேகம் கொண்ட அழகான இளைஞன். வெய்யிலிலும் நிலவிலும் காய்ந்து என் உடல் நிறம் வெண்கலம் மாதிரி இருக்கும். (ஏன், நட்சத்திரங்களிலும் காய்ந்ததால் ஆங்காங்கு என் மேனியில் தாமிரப் புள்ளிகள் கூட உண்டு.) என் முகத்தைப் பார்த்தால், யோக்கியன், புத்திசாலி, அபாரமான மூளை பலம் படைத்தவன் என்பதோடு எளிய சுபாவம் படைத்தவன், சங்கோச குணம் படைத்தவன், நல்ல கிறிஸ்தவன் என்று யாருக்குமே தோன்றும்.

கப்பல் தளத்தில் அடி வைத்து, அங்கிருந்த தார் பீப்பாயில் என் முகத்தின் பிரதிபிம்பத்தைப் பார்த்து, அதில் காணப்பட்ட மாலுமிகளுக்கே உரிய முக காந்தியைப் பார்த்தபோது நான் அடைந்த வெற்றிப் பெருமிதம் கொஞ்ச நஞ்சமல்ல! அதே மாதிரியான முக விலாசம், அங்கு மற்றோரிடத்திலிருந்த வாளியின் அழுக்குத் தண்ணீரிலும் பிரதிபலிப்பதைக் கண்டதும் நான் மனத் திருப்தி அடைந்தேன்.

''வருக மிஸ்டர் ப்ளோ ஹார்டு!'' என்று கூறிக்கொண்டே கப்பல் தளபதி காப்டன் பில்ஜ் என் கையைக் குலுக்கி வரவேற்றார்.

என் முன் நின்ற அவரைப் பார்த்தபோது முப்பது முதல் அறுபது வயது வரையுள்ள எந்த வயதும் அவருக்குப் பொருத்தமாக இருக்கும்போல் தோன்றியது. அவரது நீண்டு உயர்ந்த உடலும், பரந்த மார்பும், அடர்த்தியான மீசையும், அதை இரு புறமும் கூர்மையாகத் திருகிவிட்ட பாணியும், அடர்த்தியான தாடியும் கம்பீரமான ஒரு தோற்றத்தை அளித்தன.

கப்பல் புறப்பட இருந்தது.

காப்டன் பில்ஜ் வாயில் குழலை வைத்துக் கொண்டு தன் கப்பல் பணியாட்களுக்குப் பின் வருமாறு சொல்லிக் கொண்டிருந்தார்:

''ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அதிகமாக வேலை செய்து களைத்துப் போகாதீர்கள். வேண்டிய பொழுதிருக்கிறது. வெய்யிலில் வேகாதீர்கள். கூடியவரையில் வெய்யிலை விட்டு நிழலில் வேலை செய்யுங்கள். ஜோன்ஸ் ஜாக்கிரதையாக நட. த்ஸு, த்ஸு! வில்லியம்ஸ், தாரை மேலே பூசிக் கொள்ளாதே! பிறகு உன்னைப் பார்க்கச் சகிக்காது!''

நான் பாய்மரக் கம்பத்தின் மேல் சாய்ந்து சிந்திக்க ஆரம்பித்தேன் — என் தாயாரைப் பற்றி. அன்புள்ள வாசகரே, என்னைக் குறைவாக, தாழ்வாக, மதிக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஏதாகிலும் குழப்பம் தரும் விஷயம் காணப்பட்டால், நான் எதன் மேலாகிலும் சாய்ந்து கொண்டு என் தாயாரைப் பற்றி நினைப்பேன். நிச்சயமாகவே படு மோசமான நிலை ஏற்பட்டால் ஒற்றைக் காலில் நின்று என் தகப்பனாரைப் பற்றிச் சிந்திப்பேன். அதன் பிறகு எதையும் எதிர் கொள்ள என்னால் முடியும்!

தாய் தந்தையரைத் தவிர வேறு யாரைப் பற்றியாகிலும் — வயதில் குறைந்தவராகவும் அழகில் சிறந்தவராகவும் உள்ள ஒருவரைப் பற்றி — சிந்தித்தேனா? ஆம்; சிந்தித்தேன். ''அன்பே பொறு!'' என்று என் காதலியிடம் கூறியிருந்தேன். அவளைப்பற்றி சிந்தித்தேன். அவள் தலையை என் மார்பின் மீது பதித்து இளம் பெண்களுக்கே உரிய முறையில் பொறுமையிழந்து காலைப் பின்னோக்கி உதைத்துக்கொண்டபோது மிருதுவாகக் கூறியிருந்தேன். ''ஐந்து ஆண்டுகளில் இந்தக் கப்பல் பிரயாணம் முடிந்துவிடும். இதுபோல் இன்னும் மூன்று பிரயாணங்கள் செய்தேனானால் நான் போதிய பணத்தைச் சேர்த்து விடுவேன். அதைக் கொண்டு ஒரு பழைய மீன் பிடிக்கும் வலையை வாங்கிக் கொண்டு கடலோரக் குப்பம் ஒன்றில் குடித்தனம் வைத்து விடுவோம்! அதுவரையில் சற்றுப் பொறு!''

என் நினைவுகள் முடியுமுன் கப்பல் புறப்படுவதற்கான எல்லா வேலைகளும் முடிந்து விட்டன.

''எல்லாம் முடிந்தனவா? தயாரா?'' என்று காப்டன் கேட்டார்.

''ஆமாம்! ஆம்'' என்று குரல்கள் வந்தன.

''அப்படியானால் நங்கூரத்தை உயர்த்தி மாட்டுங்கள். மாட்டிவிட்டு மதுபான அறையைத் திறவுங்கள்!'' என்று காப்டன் கட்டளையிட்டார்.

இதுதான் கப்பல் புறப்படுவதற்கு முன் நடத்தப்படும் கடைசிச் சடங்கு. உற்றார் உறவினரிடமிருந்து பிரியும் பிரயாணிகள் சோகமே உருவமாக இருப்பார்கள். மதுபான அறை திறந்தவுடன் அவர்கள் முகத்தில் புது ஒளி தோன்றுவதை எத்தனையோ முறை பார்த்திருக்கிறேன்!

மறுநாள் காலை நல்ல காற்றில் கப்பல் வேகமாகக் கடலில் மிதந்து போய்க் கொண்டிருந்தது.

கடலில் வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. கப்பல் பிரயாணத்திலும் முதலில் ஏற்படும் மயக்கம், ஜுரம் எல்லாம் தீர்ந்துவிட்டன. என் தகப்பனாரைப் பற்றி நினைப்பதும் குறைந்து விட்டது.

மூன்றாவது நாள் காலை காப்டன் பில்ஜ் என் அறைக்கு வந்தார்.

''மிஸ்டர் ப்ளோஹார்டு, இன்னும் இரண்டு பேர்களுடைய வேலையையும் சேர்த்து நீங்களே செய்ய வேண்டும்'' என்றார் காப்டன்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டேன்.

''மற்ற இரண்டு அதிகாரிகளும் கடலில் மூழ்கி இறந்து விட்டார்கள்'' என்று நேருக்கு நேர் என் முகத்தைப் பார்க்காமல் சற்றுச் சஞ்சலத்துடன் கூறினார்.

நான், ''சரி ஸார்!'' என்று சொல்லி விட்டேன். எனினும் ஒரே இரவில் இரண்டு அதிகாரிகள் கடலில் மூழ்கி இறந்துபோவதைச் சாதாரண விஷயமாக என்னால் எடுத்துக் கொள்ள முடியவில்லை. இரண்டு நாட்கள் கழித்துக் காலை ஆகாரத்துக்கு மேஜை முன்னால் காப்டன் உட்கார்ந்தபோது அவர் முகத்தில் பழையபடி சஞ்சலமும் கண்களில் கலவரமும் காணப்பட்டன.

''ஏதாகிலும் தகராறு ஸார்?'' என்று விசாரித்தேன்.

''ஆமாம்'' என்று சொல்லிவிட்டு, தான் சாதாரணமாக இருப்பதுபோல் காட்டிக் கொள்ள ரொம்பவும் பிரயத்தனப் பட்டுப் பின்வருமாறு கூறினார்: ''எனக்குச் சொல்லவே வருத்தமாக இருக்கிறது. நம் பாய்மர அதிகாரியை இழந்து விட்டோம்!'' என்றார்.

''பாய்மர அதிகாரியா?''

''ஆமாம்'' என்று மிக அமைதியாக காப்டன் பில்ஜ் கூறினார். ''அவரும் கடலில் மூழ்கிவிட்டார். அதற்கு நானும்



ஓரளவு பொறுப்பாளிதான். இன்று விடியற் காலை நிகழ்ந்தது. என் கைகளில் அவரைப் பற்றிக் கொண்டு கடலில் மிதந்து வந்த பனி மலையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீர் என்று என்னை அறியாமலேயே அவரைத் தூக்கிக் கடலில் போட்டு விட்டேன்! நிச்சயமாக என்னை அறியாமல் செய்த காரியம்தான். நம்புங்கள்!''

''காப்டன் பில்ஜ்! அவரைக் காப்பாற்ற ஏதாகிலும் முயற்சி எடுத்துக் கொண்டீர்களா?'' என்று கேட்டேன்.

''இதுவரை ஒன்றுமில்லை'' என்றார் காப்டன் சற்றுக் கலவரத்துடன்.

நான் அவரைக் கூர்ந்து பார்த்தேன். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

பத்து நாட்கள் சென்றன.

நான் நடு இரவில் கப்பலின் திசை திருப்பும் சக்கரத்தின் அருகில் நின்று கொண்டிருந்த போது காப்டன், காபின் சிறுவனைக் கால்களைப் பற்றித் தூக்கிக் கொண்டு வருவதைப் பார்த்தேன். இந்தப் பையன் மிகச் சூடிகையானவன். அவனது மகிழ்ச்சி துலங்கும் முகத்தைப் பார்த்து எனக்கு அவனை ரொம்பப் பிடித்து விட்டது. அவனை காப்டன் என்ன செய்ய இருக்கிறார் என்ற ஆவலுடன் கவனித்தேன். பையனைக் கப்பலின் பின் பக்கத்துக்கு எடுத்துச் சென்று இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்த்துவிட்டு அவனைக் கடலில் போட்டு விட்டார்! ஒரு நிமிஷம் பையன் கடலின் அலையில் தத்தளித்து மேலெழுந்தான். அவன் தலை மீது காப்டன் ஒரு பூட்ஸைவிட்டெறிந்து நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு, கீழே இறங்கிப் போனார்.

மர்மச் சாவுகளின் ரகசியம் இப்பொழுது அல்லவா தெரிகிறது? காப்டன் கப்பல் ஊழியர்களைக் கடலில் எறிந்து கொன்று வருகிறார்! மறுநாள் காலை வழக்கம்போல் சாப்பாட்டு மேஜையில் சந்தித்துக் கொண்டோம்.

காப்டன் பில்ஜ் ஏதோ ஓர் உணவுப் பண்டத்தைப் பல்லால் கடித்துக் கொண்டே, ''பாவம், வில்லியம்ஸ், அவனும் கடலில் நேற்று விழுந்து செத்துப் போனான்'' என்றார் பரபரப்புடன்.

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ''காப்டன்! நீங்கள் அந்தப் பையனைக் கடலில் எறிந்து மூழ்கடித்தீர்கள்!'' என்றேன்.

இதைக் கேட்டதும் காப்டன் திடீரென்று அமைதியடைந்து, ''ஆம். நான்தான் கொன்றேன். அத்தனை பேரையும் நான்தான் கடலில் எறிந்தேன். மிச்சம் இருக்கிறவர்களையும் கடலில் எறிய உத்தேசித்திருக்கிறேன். கேள், ப்ளோஹார்டு, நீ இளைஞனாக இருக்கிறாய். நம்பிக்கை வைக்கத் தகுதியுள்ளவனாக இருக்கிறாய். அதனால் உன்னிடம் ஒரு ரகசியத்தை, வெளியில் சொல்ல மாட்டாய் என்ற தைரியத்தில் சொல்லுகிறேன்!''

காப்டன் இப்பொழுது மிக அமைதியடைந்து விட்டார். அறையில் ஒரு பக்கமிருந்த பீரோவுக்குச் சென்றார். அதில் ஏதோ தேடினார். ஒரு பழுத்த மஞ்சள் நிறக் கடிதம் கொண்டு வந்தார். மேஜையின் மீது பரப்பினார். அது ஒரு வரை படம். நடுவில் ஒரு வட்டம் எழுதப்பட்டிருந்தது. அவ்வட்டத்தின் நடுவில் ஒரு புள்ளி. அதன் பக்கத்தில் 'பு' என்ற எழுத்துக் காணப்பட்டது. அப்படத்தின் ஒரு பக்கத்தில் 'வ' என்ற எழுத்தும் அதற்கு நேர் எதிர்ப் பக்கத்தில் 'தெ' என்ற எழுத்தும் காணப்பட்டன.

''இது என்ன?'' என்று கேட்டேன்.

''உன்னால் ஊகிக்க முடியவில்லையா? இது ஒரு பாலைவனத் தீவு'' என்றார் காப்டன்.

உடனே எனக்கு ஏதோ பளிச்சென்று, ஞானோதயம் ஆனாற்போல் ''ஆ! அப்படியானால் 'வ' என்றால் வடக்கு 'தெ' என்றால் தெற்காக்கும்!'' என்றேன்.

''ப்ளோஹார்டு!'' என்று சொல்லி மகிழ்ச்சியில் மேஜையை ஒரு குத்து விட்டார் காப்டன் பில்ஜ். மேஜைமீதிருந்த ரொட்டித் துண்டுகள் மூன்று முறை துள்ளிக் குதித்தன! ''நீ சரியாகச் சொன்னாய். எனக்கு அது தோணாமலே போய்விட்டது!'' என்றார் காப்டன்.

''அந்த எழுத்து 'பு'....?'' என்றேன்.

''புதையல்! புதைத்து வைக்கப்பட்டுள்ள செல்வம்!'' என்று கூறிக் கொண்டே வரை படத்தைத் திருப்பிப் பின்பக்கம் படித்தார்: 'பு' என்ற எழுத்து புதையல் இருக்குமிடத்தைக் குறிக்கிறது. ஐந்து லட்சம் ஸ்பானிய டாலர்கள். கறுப்புத் தோல் பெட்டியில் வைத்துப் புதைக்கப்பட்டுள்ளது!'' என்றார்.

''இந்தத்தீவு எங்கு இருக்கிறது?'' என்று நான் வெறி ஏறிக் கேட்டேன்.

''அதுதான் தெரியவில்லை. நான் அதை இந்தச் சமுத்திரத்தில் மேலும் கீழும் போய்க் கண்டுபிடித்தே தீருவதென்றிருக்கிறேன்.''

''அதற்கிடையில்...?'' என்றேன்.

''கப்பலில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்றிருக்கிறேன். ஏனெனில் புதையல் கிடைத்தபிறகு அதைப் பகிர்ந்து கொள்ள அதிகம் பேர் இருக்கக் கூடாதல்லவா?'' என்று உள்ளம் திறந்து பேசத் தொடங்கினார். அவரிடம் குறைகள் இருந்தாலும் ஒளிவு மறைவு இல்லாமல் அவர் பேசியதால் அவரிடம் எனக்கு அன்பு பிறந்தது. அவர், ''நீ இந்த முயற்சியில் எனக்கு உதவுவாயா? சமையல்காரரைத் தவிர மற்ற எல்லாரையும் கடலில் எறிந்து விடுவோம். புதையலைத் தேடிக் கண்டுபிடித்த பிறகு நாம் மிச்சமுள்ள வாழ்நாளைச் செல்வச் சீமான்களாகக் கழிப்போம். என்ன சொல்கிறாய்?'' என்றார்.

வாசகரே, நான் சரி என்று சொன்னதற்காக நீங்கள் என்னை நிந்திப்பீர்களா? நான் இளைஞனாக இருந்தேன். உற்சாகம் மிகுந்தவனாக இருந்தேன். திரவியம் சேர்க்க வேண்டும் என்ற ஆசை மிக்கவனாக இருந்தேன். சிறுபிள்ளைத்தனமான ஊக்கமுடையவனாகவும் இருந்தேன்.

அதனால் என் கையைக் காப்டன் கையில் அடித்து ''காப்டன் பில்ஜ், இனி நான் உங்களுடையவன்!'' என்றேன்.

''பேஷ், இனி நீ நம் ஊழியர்களிடையே சென்று, அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று அறிந்து வா!'' , என்றார்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் அவரவரும் அரை குறையாக உடையணிந்து

ஸ்ரீ முருகன் துணை

ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தானம், வெங்கடாபுரம்

அம்பத்தூர், சென்னை - 600053




கோடி அர்ச்சனை

இத்திருக்கோவிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 14-6-1970 நடைபெற்றதை யொட்டி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அனுக்கிரகம் பெற்று உலக நலனுக்காக ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமிக்கு கோடி அர்ச்சனை 17-5-73ல் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோடி அர்ச்சனை யில் பங்கு கொள்ள விரும்புகிறவர்கள் ஒரு சகஸ்ர நாம அர்ச்சனைக்கு ரூ. 7/- (ஏழு) மணியார்டர் மூலமாக கீழ்க்கண்ட விலாசத்துக்கு செலுத்தி கலந்து கொள்ளலாம். கோடி அர்ச்சனையில் பங்கு பெறுபவர்களுக்கு அர்ச்சனை செய்யப்பட்ட வெள்ளி வில்வ தளம், விபூதி, குங்கும பிரசாதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். அனைவரும் கலந்து கொண்டு கோடி அர்ச்சனையைப் பூர்த்தி செய்து வைத்து ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு

K. குமாரசாமி பிள்ளை
நிர்வாக அறங்காவலர்

P. R. காளத்தியப்பன்
கோடி அர்ச்சனைக் குழுவினர்
ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தானம்
M. T. H. ரோடு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை-600053



படிக்கப்பத்து திரு ச. வெயிலு கந்தபெருமாள் நாடார் அவர்களின் புதல்வி செல்வி: **கலாவதிக்கும்** நடேசன் குடியிருப்பு திரு ச. சோமசுந்தரம் நாடார் அவர்களின் புதல்வன் செல்வன்: **வரதராஜுக்கும்** 8-2-73 அன்று தண்டுபத்தில் நடைபெற்ற திருமண வைபவத்தின்போது நேரில் வந்திருந்து மணமக்களை ஆசிர்வதித்து, பரிசுகள் வழங்கியும் வாழ்த்துக்கள் அனுப்பியும் கௌரவித்த அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

படுக்கப்பத்து. ச. வெயிலு கந்தபெருமாள் நாடார்
நடேசன் குடியிருப்பு. ச. சோமசுந்தரம் நாடார்
தண்டுபத்து S. பொன்னம்பல நாடார்.



ஓய்வு எடுத்துக் கொள்ளும் பாக்கி இருந்தனர். நான் வந்ததும் அவர்கள் அனைவரும் எழுந்து நின்று எனக்கு மரியாதை செலுத்தினர்.

இறந்த பாய்மர அதிகாரியின் துணைவனான டாம்ப்கின்ஸ், ''ஐயா, நண்பர்கள் அடிக்கடி கடலில் மூழ்கி இறந்து போவது கொஞ்சமும் சகிக்க கூடியதாக இல்லை. ரொம்பவும் அதிருப்தி அடைந்திருக்கிறோம்!'' என்று உணர்ச்சி மிக்க குரலில் கூறிக்கொண்டு போனான். பலர் அதைஆமோதிப்பதுபோல்தலையைஆட்டினர்.

நான் கண்டிப்பான குரலில் சொன்னேன்: ''டாம்ப்கின்ஸ்! என்னுடைய பதவி, உன்னுடைய இத்தகைய கலகமூட்டும் வார்த்தைகளைக் கேட்கஇடம் தரவில்லை!''

இப்படிச் சொல்லிவிட்டுக் காப்டனிடம் வந்து ''கப்பல் ஊழியர்கள் கலகம் விளைவிப்பார்கள் போலிருக்கிறது!'' என்றேன்.

''நல்லது, அதுவே அவர்களில் பெரும்பாலோரை அகற்ற உதவியாக இருக்கும். மேலும் கடற் கொள்ளைக்காரர்கள் எந்த நிமிஷமும் வரலாம். அவர்களாலும் ஒரு பகுதியினர் குறைந்து விடுவார்கள்'' என்றார்.

மூன்று நாட்கள் கழித்து நாங்கள் நன்னம்பிக்கை முனையைக் கடந்து, இந்து மகா சமுத்திரத்தில் நுழைந்தோம். சமுத்திரம் கண்ணாடி போல் அமைதியாக இருந்தது. பருவக் காற்று சாதகமாக இருந்தது.

நான்காவது நாள் கடற் கொள்ளைக் கப்பல் வந்தது. வாசகரே, நீர், கடற் கொள்ளைக் கப்பலைப் பார்த்திருக்கிறீரா? எவ்வளவு தைரியசாலியானவனையும் குலைநடுக்கம் கொள்ளச் செய்யும். கப்பல் முழுவதும் கறுப்பு வர்ணம் பூசப்பட்டிருந்தது. கறுப்புக் கொடி பறந்தது. பாய்மரத் துணி வேறு கறுப்பு. கப்பலில் இருந்தவர்கள் கறுப்பு உடைகள் அணிந்து கைகளைக் கோத்துக் கொண்டு மேலும்கீழும் போய் வந்துகொண்டிருந்தனர். ''கொள்ளைக் கப்பல்'' என்று வெண்ணிற எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது. அக் கப்பலைப் பார்த்தவுடனேயே எங்கள் ஆட்கள் பயத்தினால் ஒடுங்கி விட்டார்கள்.

இரண்டு கப்பல்களும் ஒன்றின் பக்கத்தில் ஒன்று வந்தன. இரண்டையும் இணைத்துக் கயிற்றினால் கட்டினார்கள். இரண்டுக்குமிடையே ஒரு மரப் பலகையை வைத்தார்கள். அடுத்த நிமிஷம் கொள்ளைக் கூட்டத்தினர் எங்கள் கப்பலுக்கு வந்து எங்கள் ஆட்களைக் கண்களை உருட்டிப் பார்த்தனர். பற்களை நறநறவென்று கடித்தனர். நகங்கள் கொண்டு பிராண்டப் பார்த்தனர்.

பிறகு சண்டை நடந்தது. இரண்டு மணி நேரம் சண்டை நடந்தது.

இரண்டு மணி நேரச் சண்டைக்குப் பிறகு இருவரும் ஒப்புக்கொண்டபடி யாருக்கும் வெற்றி தோல்வி யில்லாமல் 'டிரா'வில் முடிந்தது. ஒரு கட்சி அறுபத்தொன்றரைப் பாயிண்டும், மற்றொரு கட்சி அறுபத்திரண்டு பாயிண்டும் எடுத்திருந்தால் யார் வெற்றி பெற்றார் என்று சொல்ல முடியும்?

கப்பல்களைக் கட்டியிருந்த கயிறுகள் அவிழ்த்து விடப்பட்டன. கப்பல்கள் இரண்டும் அதனதன் வழியில் சென்றன.

மின் வெட்டு - சிரிப்பை வெட்டாதே! - 3



தொழிலதிபர்: உற்பத்தியெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கும்போது என்ன ஜோக் வேண்டிக் கிடக்கிறது?
நான்: சிரிப்பையாவது உற்பத்தி செய்யலாமே என்றுதான்! - நெல்லை நீல சுந்தரம்

''இப்பொழுது வெளியே தூக்கிக் கடலில் எறியும் அளவுக்கு யார் யார் களைத்துப் போயிருக்கின்றனர் பார்ப்போம்!'' என்றார் காப்டன் பிலிஜ்.

காப்டன் கப்பலின் கீழ்த் தளத்துக்குப் போனார். போன சில நிமிஷங்களில் முகம் வெளிறிப் போய் திரும்பி வந்தார். ''ப்ளோஹார்டு, கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கொள்ளையர்களில் ஒருவன் நமக்குத் தெரியாமல் கப்பலின் ஒரு பக்கத்தில் ஓட்டை போட்டு விட்டான். தண்ணீரை வெளியே இறைத்துவிட ஆட்களைக் கூப்பிடுவோம்!'' என்றார் காப்டன்.

ஆட்கள் மும்முரமாக வேலை செய்தனர். அவர்கள் எவ்வளவு வேகமாக வேலை செய்தனர் என்பதை மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் இருக்க நேர்ந்து மூழ்கிப் போனவர்களால்தான் புரிந்து கொள்ள முடியும்!

எவ்வளவு இறைத்தாலும் தண்ணீர் இருந்து கொண்டேதான் இருந்தது. ஆகவே, ''இந்தக் கப்பல் இன்றில்லாவிட்டால் நாளை, அல்லது பத்து நாட்கள் கழித்து, இல்லை ஒரு வருஷமேதான் ஆகட்டும், மூழ்கிப்போவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே இந்தக் கப்பலைத் துறப்பதுதான் வழி!'' என்றார் காப்டன்.

அன்றிரவு நட்டநடுநிசியில் ஆட்கள் தண்ணீரை வெளியே இறைத்து விடுவதில் ஈடுபட்டிருந்தபோது, காப்டனும் நானும் ஒரு மிதப்பு தயார் செய்வதில் ஈடுபட்டிருந்தோம். பலகைகளை வெட்டி இணைத்துக் கட்டிக் கடலில் மிதக்க விட்டோம். இரண்டு சாப்பாட்டுப் பெட்டிகளையும் பீர் பெட்டிகளையும் அந்த மிதப்பில் போட்டுக் கொண்டோம். மெல்ல அந்த இருட்டில் கப்பலை விட்டு இறங்கி மிதப்பில் ஏறிக் கொண்டோம். கப்பலைத் துறந்தோம்.

பொழுது விடிந்தது. இந்து மகா சமுத்திரத்தில் ஒரு தூசி மாதிரி தென்பட்டோம்.

இதோ, இந்தப் புள்ளியளவு இருந்திருப்போம்(.)

காலையில் நாங்கள் எழுந்திருந்து முக க்ஷவரம் செய்து கொண்டு உடையணிந்து உணவுப் பெட்டியையும் பீர்ப் பெட்டியையும் திறந்தோம்.

அப்போதுதான் சகிக்க முடியாத சங்கடமான நிலையில் இருப்பதை உணர்ந்தோம்!

காப்டன் பெட்டியி லிருந்து மாமிசம் அடைக்கப்பட்டிருந்த டப்பாக்களை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்தார். ஆர்வத்தோடும் ஆவலுடனும் எதையோ தேடிக் கொண்டே எடுத்தார். மொத்தம் ஐம்பத்திரண்டு டப்பாக்கள் இருந்தன. எங்கள் இருவர் உள்ளங்களிலும் ஒரே எண்ணம்தான் குடிகொண்டிருந்தது. கடைசி டப்பாவை எடுத்து வெளியே வைத்துவிட்டு, காப்டன் நிமிர்ந்து நின்று ''டப்பா திறக்கும் கருவி இல்லையே! கடவுளே!'' என்று சொல்லி மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தார்.

இதற்கிடையில் நான் நடுங்கும் கைகளுடன் பீர் பாட்டில்களை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்தேன். மொத்தம் ஐம்பத்திரண்டு பாட்டில்கள் இருந்தன. கடைசிப் பாட்டிலைக் கையில் எடுத்துக் கொண்டு பெட்டியை ஒரு கண்ணோட்டம் விட்டேன். அவ்வளவுதான்! ''கண்டேன் கண்டேன்! தகர டப்பாவைத் திறக்கும் கருவியை!'' என்று சொல்லிக் கொண்டே காப்டன் மேல் நானும் மயங்கி விழுந்தேன்!

கண் விழித்துப் பார்த்தபோது எங்கள் மிதப்பு பரந்த கடலிடை ஒரு சிறு துகள் போல் தோன்றியது. முன்னைவிடக் குறுகி விட்டாற் போன்ற உணர்ச்சி எழுந்தது!

சில நாட்கள் சென்றன. மேலே தாமிர வர்ண வானம். நாற்புறமும் அலை மோதும் கடல். நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தைச் சுற்றிலும் காலி டின்களும் பாட்டில்களும் தான். எங்கள் கஷ்டம் சொல்லி முடியாது. தகர டப்பாக்களை என்ன செய்வது என்று தெரியாமல் குத்தினோம், உதைத்தோம். பாட்டில்களைக் கடித்தோம். தகர டப்பாக்கள் மீது மோதினோம்.

சோகமே உருவமாய் வயிற்றில் பசியினால் சிறு குடல் பெருங் குடலைத் தின்ன, உண்ண ஒன்றுமில்லாமல், படிக்க ஒன்றுமில்லாமல், பேச ஒன்றுமில்லாமல், செய்ய வழி தெரியாமல் நாட்களைக் கடத்தினோம்.

பத்தாவது நாள் காப்டன் அமைதியைக் கலைத்தார்: ''ப்ளோஹார்டு, சீட்டுக் குலுக்கிப் போட ஏற்பாடு செய்!'' என்றார்.

''ஆமாம்; நாம் நாளுக்கு நாள் இளைத்து வருகிறோம். குலுக்கிப் போட்டுவிட வேண்டியதுதான்!'' என்று வறட்டுக் குரலில் கூறினேன்.

அதாவது, மனிதனை மனிதன் அடித்துத் தின்னும் நிலைக்கு வந்து விட்டதால், யாரை யார் அடித்துத் தின்பது என்பதைச் சீட்டுக் குலுக்கிப் போட்டுத் தீர்மானிக்க முடிவு செய்தோம்.

இரண்டு சீட்டுகள் எழுதிக் காப்டன் முன்பு நீட்டினேன். சீட்டுக்களில் சற்று நீண்டிருந்த காகிதச் சுருளைக் காப்டன் எடுத்துக் கொண்டே ''இதற்கு என்ன பொருள்? நான் ஜெயிக்கிறேனா?'' என்று கேட்டார்.

''இல்லை பில்ஜ்'' என்றேன் நான் வருத்தம் தோய்ந்த குரலில்: ''நீங்கள் தோற்றுப் போனீர்கள்.''

இதற்குப்பிறகு கழிந்தநாட்களை நீளமாக வர்ணித்துப் பயனில்லை. நான் புதையலைப் பற்றிக் கனவு கண்டு கொண்டே சோம்பேறியாக அந்த மிதப்பில் கிடந்தேன். எனக்குச் சற்றுப் பலமும் தெம்பும் வரலாயின! வாசக அன்பர்களே, இந்நாட்கள் மிக அமைதியும் சாந்தியும் நல்கிய நாட்கள். இப்படி எனக்குத் தெம்பும் பலமும் அமைதியும் நல்கிய அந்தத் தீர புருஷனை நினைத்து ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியவில்லை.

ஐந்தாவது நாள் நான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தபோது என் மிதப்பு கரையைப் பலமாகத் தட்டி என்னை உலுக்கி எழுப்பி விட்டது. நான் ஒருவேளை அதிகமாக உண்டு விட்டேனோ என்னவோ! உண்ட மயக்கத்தில் தான் பக்கத்தில் கரை தெரிவதைக் கவனிக்கவில்லை போலும்!

என் எதிரில் ஒரு தீவு இருந்தது! அதனுடைய வட்டமான உருவமும், மணல் பரப்பும் எனக்கு அது எந்தத் தீவு என்பதை நினைவு படுத்திவிட்டன.

''புதையல் தீவு!'' என்று மகிழ்ச்சி தாங்க மாட்டாமல் இரைந்து விட்டேன்! ''என் வீரத்தையும் பொறுமையையும் பாராட்டிக் கடவுள் எனக்கு இந்தப் புதையல் தீவைக் காண்பித்துக் கொடுத்து விட்டார்'' என்று மகிழ்ந்து போனேன்.

ஜன்னி பிடித்தவன் ஓடுவது போல் தீவின் மையத்துக்கு ஓடினேன். அங்கே என்னத்தைக் கண்டேன் என்கிறீர்கள்? பெரிய பள்ளம் தோண்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன்; அதன் பக்கத்தில் ஒரு காலி தோல் பெட்டி கிடந்தது. கரையில் மணலில் கப்பலின் ஒரு பலகை ஆழமாகச் செருகப்பட்டிருந்தது. பலகையில் 'ஜாலி ஜாலி அக்டோபர் 1867' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. உடனே எனக்கு விஷயம் புரிந்து விட்டது! ஞாபகப் பிசகாக கப்பலின் காபின் மேஜை மீது வரை படத்தை விட்டு விட்டு வந்ததைக் கப்பல் ஊழியர்கள் திறம்படப் பயன்படுத்திக் கொண்டு என்னையும் காப்டன் பில்ஜையும் நன்றாகச் சூறையாடிவிட்டார்கள். எங்களுக்குச் சேர வேண்டிய புதையலை அவர்கள் அடித்துக் கொண்டு போய்விட்டார்கள். நன்றி கெட்டவர்கள்!

இப்படி நினைத்து நினைத்து அந்த மணலில் சோர்ந்து விழுந்தேன்.

அந்தத் தீவு எனக்கு வீடாகியது. கஷ்டப்பட்டு வயிற்றை நிரப்பிக் கொண்டேன், கல்லையும் மண்ணையும் சாப்பிட்டு. ஆண்டுகள் சென்றன. என் தேக ஆரோக்கியம் கெட்டது. நோயில் விழுந்தேன்; இறந்தேன். என்னை நானே புதைத்துக் கொண்டேன்.

சமுத்திரக் கதைகள் எழுதும் மற்றவர்களும் என்னைப் போல் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! தமிழாக்கம்: **எஸ்.வி.எஸ்.**

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras 600031
Managing Editor: T. Sadasivam



ஆண்மை—
திடவடிவம்,
தீரம், திறமை,
கம்பீரம்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த
படைப்பு
'எஸ்டர்காட்'
எஸ்டர்காட்®
ஆண்மகன் இதோ ஆளவருகிறான். எங்கும் அவன்
செங்கோல். 'எஸ்டர்காட்' அவன் உடுப்பு.
'எஸ்டர்காட்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன்
சூட்டிங்குகள். தவிர, 'மெஃப்ரின்' 100%
பாலியெஸ்டர் சேலைகள், பாலியெஸ்டர்
இழைகலந்த உடுப்புத் துணிகள்; 'டெரோஸெல்'
பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் ஷர்ட்டிங்குகள்.
மபத்லால் க்ரூப்
MAFATLAL GROUP
AIYARS-M.300 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

